உ
சிவமயம்

# தமிழ் மகள் ஔவையார்



யாழ்/நெடுந்தீவை பிறப்பிடமாகவும் கிளி/கணேசபுரத்தை வதிவிடமாகவும்
கொண்ட இருமரபும் தூய தனிநாயக முதலி வழித்தோன்றல்

## அமரர்
## திரு.வேலுப்பிள்ளை கோபாலரத்தினம்

அவர்களின் 31ம் நாள்
நினைவுப்படையல்

**21.04.2010**

**( உக ச உ௦க௦ )**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் நாட்காட்டி

## திருவள்ளுவர் ஆண்டு ௨௦௪௧ (2041) — சுறவம் (தை) — சனவரி – பிப்ரவரி 2010

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | அறிவன் (புதன்) | வியாழன் | வெள்ளி | காரி (சனி) |
|---|---|---|---|---|---|---|
| | | | | ௧ 14.01.2010 | ௨ 15.01.2010 | ௩ 16.01.2010 |
| ௪ 17.01.2010 | ௫ 18.01.2010 | ௬ 19.01.2010 | ௭ 20.01.2010 | ௮ 21.01.2010 | ௯ 22.01.2010 | ௧௦ 23.01.2010 |
| ௧௧ 24.01.2010 | ௧௨ 25.01.2010 | ௧௩ 26.01.2010 | ௧௪ 27.01.2010 | ௧௫ 28.01.2010 | ௧௬ 29.01.2010 | ௧௭ 30.01.2010 |
| ௧௮ 31.01.2010 | ௧௯ 01.02.2010 | ௨௦ 02.02.2010 | ௨௧ 03.02.2010 | ௨௨ 04.02.2010 | ௨௩ 05.02.2010 | ௨௪ 06.02.2010 |
| ௨௫ 07.02.2010 | ௨௬ 08.02.2010 | ௨௭ 09.02.2010 | ௨௮ 10.02.2010 | ௨௯ 11.02.2010 | ௩௦ 12.02.2010 | |

## திருவள்ளுவர் ஆண்டு ௨௦௪௧ (2041) — கும்பம் (மாசி) — பிப்ரவரி – மார்ச் 2010

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | அறிவன் (புதன்) | வியாழன் | வெள்ளி | காரி (சனி) |
|---|---|---|---|---|---|---|
| ௩௦ 14.03.2010 | | | | | | ௧ 13.02.2010 |
| ௨ 14.02.2010 | ௩ 15.02.2010 | ௪ 16.02.2010 | ௫ 17.02.2010 | ௬ 18.02.2010 | ௭ 19.02.2010 | ௮ 20.02.2010 |
| ௯ 21.02.2010 | ௧௦ 22.02.2010 | ௧௧ 23.02.2010 | ௧௨ 24.02.2010 | ௧௩ 25.02.2010 | ௧௪ 26.02.2010 | ௧௫ 27.02.2010 |
| ௧௬ 28.02.2010 | ௧௭ 01.03.2010 | ௧௮ 02.03.2010 | ௧௯ 03.03.2010 | ௨௦ 04.03.2010 | ௨௧ 05.03.2010 | ௨௨ 06.03.2010 |
| ௨௩ 07.03.2010 | ௨௪ 08.03.2010 | ௨௫ 09.03.2010 | ௨௬ 10.03.2010 | ௨௭ 11.03.2010 | ௨௮ 12.03.2010 | ௨௯ 13.03.2010 |

## திருவள்ளுவர் ஆண்டு ௨௦௪௧ (2041) — மீனம் (பங்குனி) — மார்ச் – ஏப்பிரல் 2010

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | அறிவன் (புதன்) | வியாழன் | வெள்ளி | காரி (சனி) |
|---|---|---|---|---|---|---|
| வெல்க தமிழ் | ௧ 15.03.2010 | ௨ 16.03.2010 | ௩ 17.03.2010 | ௪ 18.03.2010 | ௫ 19.03.2010 | ௬ 20.03.2010 |
| ௭ 21.03.2010 | ௮ 22.03.2010 | ௯ 23.03.2010 | ௧௦ 24.03.2010 | ௧௧ 25.03.2010 | ௧௨ 26.03.2010 | ௧௩ 27.03.2010 |
| ௧௪ 28.03.2010 | ௧௫ 29.03.2010 | ௧௬ 30.03.2010 | ௧௭ 31.03.2010 | ௧௮ 01.04.2010 | ௧௯ 02.04.2010 | ௨௦ 03.04.2010 |
| ௨௧ 04.04.2010 | ௨௨ 05.04.2010 | ௨௩ 06.04.2010 | ௨௪ 07.04.2010 | ௨௫ 08.04.2010 | ௨௬ 09.04.2010 | ௨௭ 10.04.2010 |
| ௨௮ 11.04.2010 | ௨௯ 12.04.2010 | ௩௦ 13.04.2010 | | | | |

## திருவள்ளுவர் ஆண்டு ௨௦௪௧ (2041) — மேழம் (சித்திரை) — ஏப்பிரல் – மே 2010

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | அறிவன் (புதன்) | வியாழன் | வெள்ளி | காரி (சனி) |
|---|---|---|---|---|---|---|
| | | | ௧ 14.04.2010 | ௨ 15.04.2010 | ௩ 16.04.2010 | ௪ 17.04.2010 |
| ௫ 18.04.2010 | ௬ 19.04.2010 | ௭ 20.04.2010 | ௮ 21.04.2010 | ௯ 22.04.2010 | ௧௦ 23.04.2010 | ௧௧ 24.04.2010 |
| ௧௨ 25.04.2010 | ௧௩ 26.04.2010 | ௧௪ 27.04.2010 | ௧௫ 28.04.2010 | ௧௬ 29.04.2010 | ௧௭ 30.04.2010 | ௧௮ 01.05.2010 |
| ௧௯ 02.05.2010 | ௨௦ 03.05.2010 | ௨௧ 04.05.2010 | ௨௨ 05.05.2010 | ௨௩ 06.05.2010 | ௨௪ 07.05.2010 | ௨௫ 08.05.2010 |
| ௨௬ 09.05.2010 | ௨௭ 10.05.2010 | ௨௮ 11.05.2010 | ௨௯ 12.05.2010 | ௩௦ 13.05.2010 | ௩௧ 14.05.2010 | |

## திருவள்ளுவர் ஆண்டு ௨௦௪௧ (2041) — விடை (வைகாசி) — மே – சூன் 2010

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | அறிவன் (புதன்) | வியாழன் | வெள்ளி | காரி (சனி) |
|---|---|---|---|---|---|---|
| ௩௦ 13.06.2010 | ௩௧ 14.06.2010 | | | | | ௧ 15.05.2010 |
| ௨ 16.05.2010 | ௩ 17.05.2010 | ௪ 18.05.2010 | ௫ 19.05.2010 | ௬ 20.05.2010 | ௭ 21.05.2010 | ௮ 22.05.2010 |
| ௯ 23.05.2010 | ௧௦ 24.05.2010 | ௧௧ 25.05.2010 | ௧௨ 26.05.2010 | ௧௩ 27.05.2010 | ௧௪ 28.05.2010 | ௧௫ 29.05.2010 |
| ௧௬ 30.05.2010 | ௧௭ 31.05.2010 | ௧௮ 01.06.2010 | ௧௯ 02.06.2010 | ௨௦ 03.06.2010 | ௨௧ 04.06.2010 | ௨௨ 05.06.2010 |
| ௨௩ 06.06.2010 | ௨௪ 07.06.2010 | ௨௫ 08.06.2010 | ௨௬ 09.06.2010 | ௨௭ 10.06.2010 | ௨௮ 11.06.2010 | ௨௯ 12.06.2010 |

## திருவள்ளுவர் ஆண்டு ௨௦௪௧ (2041) — ஆடவை (ஆனி) — சூன் – சூலை 2010

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | அறிவன் (புதன்) | வியாழன் | வெள்ளி | காரி (சனி) |
|---|---|---|---|---|---|---|
| | | ௧ 15.06.2010 | ௨ 16.06.2010 | ௩ 17.06.2010 | ௪ 18.06.2010 | ௫ 19.06.2010 |
| ௬ 20.06.2010 | ௭ 21.06.2010 | ௮ 22.06.2010 | ௯ 23.06.2010 | ௧௦ 24.06.2010 | ௧௧ 25.06.2010 | ௧௨ 26.06.2010 |
| ௧௩ 27.06.2010 | ௧௪ 28.06.2010 | ௧௫ 29.06.2010 | ௧௬ 30.06.2010 | ௧௭ 01.07.2010 | ௧௮ 02.07.2010 | ௧௯ 03.07.2010 |
| ௨௦ 04.07.2010 | ௨௧ 05.07.2010 | ௨௨ 06.07.2010 | ௨௩ 07.07.2010 | ௨௪ 08.07.2010 | ௨௫ 09.07.2010 | ௨௬ 10.07.2010 |
| ௨௭ 11.07.2010 | ௨௮ 12.07.2010 | ௨௯ 13.07.2010 | ௩௦ 14.07.2010 | ௩௧ 15.07.2010 | ௩௨ 16.07.2010 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையல்

குடும்பம் என்னும் கோயிலில்
குலவிளக்காய் ஒளி பரப்பி
கண்ணின் இமை போல் எமைக் காத்து
மெழுகுதிரி போல் எரிந்து
எல்லோர் மனங்களிலும்
படர்ந்து மிளிர்ந்து
எம் வாழ்வுக்காய் உமையுருக்கி
வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வ மானீர்
இனி என்று காண்போம் என்னும்
ஏக்கத்தில், நிங்கா நினைவுடனே
மானிடம் தழைத்தோங்க
அறவழி தந்த "தமிழ் மகள் ஔவையாரை"
உங்களுக்கு கண்ணீர் படையலாக்குகின்றோம்

இவ்வண்ணம்
**குடும்பத்தினர்**
**21.04.2010**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மலர்வு
11
09
1947

உதிர்வு
22
03
2010

யாழ்ப்பாணம் நெடுந்தீவு கிழக்கை பிறப்பிடமாகவும், கிளிநொச்சி கணேசபுரத்தை வாழ்விடமாகவும், உக்குளாங்குளத்தில் தற்காலிகமாக வசித்தவருமாகிய இரு மரபும் தூய தனிநாயக முதலி வழித்தோன்றல்

# அமரர்.
# திரு. வேலுப்பிள்ளை கோபாலரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்

## தேவாரம்

வண்டார் குழ லரிவையொடு
பிரியா வகை பாகம்
பெண்டான் மிக வானான்பிறைச்
சென்னிப் பெரு மானூர்
தண்டா மரை மலராளுறை
தவளந் நெடு மாடம்
விண்டாங்குவ போலு மிகு
வேணுபுர மதுவே.

## திருவாசகம்

உடையாள் உன்தன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதனால் அடியேன் - உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்
புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடைய தோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
அம்பொன் செய் அம்பலத் தரசே
ஏறணி கொடி யெம் மீசனே உன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள்
　　சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில
　　தேவர் சிறு நெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரள்
　　மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டெனும் பதங்கடந் தானுக்கே
　　பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகிற் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமற் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் பிறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேச
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

### வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.

*திருச்சிற்றம்பலம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊர்ச்சிறப்பும்
## வாழ்க்கை வரலாறும்

இலங்கையின் வட கடலெல்லையின் பாதுகாப்புக் காவலரனாக தொல் பழங்காலந் தொட்டே விளங்குவது நெடுந்தீவாகும். இத்தீவு 2000 ஆண்டுகட்கு முற்பட்ட வரலாற்றுப் பெருமையும் கொண்டதாகும். இன்றும் இவ்வரலாற்று எச்சங்களான **வெடியரசன், மீகாமன் கோட்டைகள்** இடிந்து அழிந்த நிலையில் காணப்படுகின்றன. இத்தீவை மேழி (கலப்பை)க் கொடி கொண்டு வெடியரசன் ஆட்சி செய்ததாகவும் இவனிடமிருந்த மாணிக்கக் கற்களைச் சூறையாட மாநாயக்கனாகிய கண்ணகியின் தந்தை மீகாமன் என்பானை ஒரு சிறிய கப்பற் படையுடன் நெடுந்தீவுக்கு அனுப்பியதாகவும் சண்டையில் வெடியரசன் தோற்க அவன் தம்பி வீரநாராயணன் மீகாமனை வழிமறித்து சாமாதானம் செய்து மாணிக்கக் கற்களை மீகாமன் எடுத்துச் செல்ல அனுமதித்ததாகவும் சிலப்பதிகார வழி நூலாகிய "கண்ணகி வழக்குரைக் கதை" கூறுகின்றது. அத்தோடு வேறு சில சிலப்பதிகார நூல்களும் "ஏழுகடல்" என்னும் சொற்பதத்தைப் பயன்படுத்துவதாலும் **கண்ணகியின் சிலம்புடன் நெடுந்தீவு தொடர்புபட்டதாய்** இருக்கலாமெனக் கூறப்படுகின்றது. அத்தோடு **சோழர் காலத்தில் சில சிலாசனங் (கல்வெட்டு)** கள் இங்கிருந்து எடுத்துச் செல்லப் பெற்றதாகவும் கூறப்பெறுகிறது. யாழ் தீபகற்பத்தின் பனைவளத்தின் அரைப்பங்கு இங்கு காணப்படுகிறது. அமிழ்ந்து போன குமரிக்கண்டத்துடன் கூடிய 49 நாடுகளில் **ஏழ் சிறு பனை** நாடுகளின் எஞ்சிய பகுதியாகவும் இது இருக்கலாமென ஆய்வாளர் கூறுவர். நெடுந்தீவில் பல வகை இலைவகை மூலிகைகள் காணப்படுவதாலும் இலை மூலிகை என்னும் சொல்லே இலெமூரியா (இலை + மூலிகை—இலை மூலி — இலைமூரி — இலெமூரி — இலெமூரியா) என மருவியும் இருக்கலாம் என்பர் சிலர். குமரிக் கண்டஎன்னும் பெயரும் குமரிச் செடி (குமரிக்கற்றாளைசோற்றுக் கற்றாளை) குமரி கற்றாளை என்னும் பெயரால் அழைக்கப் பெறுவதாலும் நெடுந்தீவின் பனங்காணி முலைனயில் இருந்து மாவிலித்துறை வரை இக் குமரிச்செடி காணப்படுவதாலும் நெடுந்தீவு குமரிக்கண்டத்தின் ஒரு பகுதியாகவும் இருக்கலாமெனவும் நூலியலாளர்கள் கருதுகின்றனர் (ஆய்விற்குரியது).

இத்தனை இயற்கை வரலாற்றுச் சிறப்புக்களுடனும் இந்துமா வாரியின் 100 விழுக்காடு தமிழர்களின் வாழ்விடமாகக் கொண்ட தமிழன் கால்வாயில் (பாக்கு நீரிணை) மிதந்து கொண்டிருக்கும் நீண்ட நெடிய தீவு நெடுந்தீவாகும். இதற்குப் **பசுந்தீவென்றும் ஆ(பசு)த் தீவென்றும் பருத்தித் தீவென்றும், கோரைத் தீவென்றும், மூலிகைத் தீவென்றும், குதிரைத் தீவென்றும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவாறு பெயரிட்டழைப்பர். ஒல்லாந்தர் இத்தீவில் காலடி வைத்தபோது இத்தீவு பச்சைப் பசேல் எனக் காட்சியளித்ததால் தம் நாட்டுப் புல்வெளி போன்ற தோற்றத்தைக் கண்டு நம் தீவிற்கும் தம் நாட்டுப் பெயரான "டெல்ப்ற்" (Delft) என்னும் பெயரையும் சூட்டினர்.

பால் வளமும் பனை, தெங்கு வளமும் கடல் வளமும் (மீன், உப்பு) இவை எல்லாவற்றிற்கும் இமையம் போல் சுண்ணெய் (பெற்றோலியம்) வளமும் கொண்ட வளமிக்க நாடாம் நெடுந்தீவில் தமிழனின் முழுமுதற் கடவுளர்களான முருகன், ஐயனார்,கெந்தியார் (கொற்றவை) அம்மன் போன்ற தெய்வங்கள் கோவில் கொண்டுள்ளனர். கி.பி 10 ஆம் நூற்றாண்டின் பின் இங்கு வருகை தந்த **வைதீக வாரிய** மதத்தினரால் பிள்ளையார் கோவில்களும், கி.பி 15 ஆம் நூற்றாண்டளவில் வருகை தந்த போர்த்துக்கேயரால் மாதா, சல்லேரான்சியார், தொம்மையப்பர், சவேரியார் கோவில்களும் ஒல்லாந்தர் வருகைக்குப் பின் ஒரு புரட்சுதாந்து கிறீத்து கோவிலுமாக பல்சமயத்தார் வாழும் ஒரு வாழ்விடமாக மாற்றப்பட்டுள்ளது.

உலகத் தமிழர்களைத் தட்டியெழுப்பிப் பல்மொழி மொழியியலாளர்களை தமதாக்கி உலகத் தமிழ் ஆராச்சி மாநாட்டிற்கு வித்திட்டுத் தமிழருக்குப் பெருமை தந்த **தனிநாயக அடிகளாரையும்,** இலங்கையின் முதற் பெண் ஊரக (கிராம)த் தலைவர் திருவாட்டி **பொன்னம்மா நாகேந்திரத்தையும்**. காந்தியம், போட்டியற்ற தலைமை, சமயப் பன்மையியம், போன்றன பேணி நூல் நிலையம் அமைத்து சமுகத் தொண்டராக வலம் வந்து, நெடுந்தீவின் மத்தியில் ஒரு உயர் பள்ளி (மகா வித்தியாலயம்), விளையாட்டுத் திடல் அமைய தன், தனது உறவுகளின் காணிகளைப் பெற்று வழங்கி நெடுந்தீவின் உயர் கல்விக்கு வித்திட்ட **இடானியல் நாகலிங்கம்** அவர்களையும், கிளிநொச்சி செயந்திநகர் மண்ணிலே காந்தியம், வள்ளலார் கொள்கைகளை அடியொற்றிக் குருகுலம் அமைத்துப் பொருளாதார வசதியற்ற பிள்ளைகளுக்குக் கல்வியூட்டி வாழ்வளித்த அப்பு. திரு **கதிரவேலு** அவர்களைப் போன்ற இராமநாதமுதலி (கறுவராம உடையார் அல்லது ராமுமணியம்) பேரர் வழி வந்தோரையும், சிதறுண்டு சின்னாபின்னப்பட்டு அல்லலுறும் தமிழ் மக்களுக்காய் ஓயாது தொண்டு பல ஆற்றியும் குரல் கொடுக்கும் மன்னார் **ஆயர் இராயப்பு ஜோசேப்** அடிகளாரையும் நெடுந்தீவு மக்களுக்காய் கவிமழை பொழிந்த கவி மாமணி **ஞானப்பிரகாசரவர்களையும்,** ஓரளவுக்கேனும் நெடுந்தீவு வரலாறு தந்த **சிவநாயகமூர்த்தி,** அவர்களையும், இவர் போன்ற பல் சான்றோர்களையும் உருவாக்கிய இப் புகழ் பூத்த மண்ணிலே **தனிநாயக**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதலி** வழித்தோன்றல்களாகிய **வேலுப்பிள்ளை சின்னத்தங்கச்சி** இணையர்களின் இளையமகனாக அமரர் திரு. **கோபாலரத்தினம் 11.9.1947** இல் பிறந்தார். இவருடன் உடன் பிறந்தார் இருவர். **மூத்தவர்** (அண்ணன்) **விசயரத்தினம், இளையவள் (தங்கை) புனிதலீலாவதி.** இவர்கள் தம் இளமைக்காலத்தை நெடுந்தீவு கிழக்கு சின்னர் மகன் தோப்பில் தாய் தந்தையருடனும் உறவுகளுடனும் கூடிக் கூட்டுக் குடும்ப வாழ்வை நடத்தினர். இவரும் இவர் உடன்பிறப்புக்களும் தம் தொடக்கக் கல்வியை சுப்பிரமணியம் தொடக்கப் பள்ளியில் (வித்தியாசாலை) தொடங்கினர்.

ஆனால் தந்தையின் தொழில் மாற்றம் கிளிநொச்சிக்கு வந்ததால் இவர்கள் தமது வாழ்விடத்தை மாற்றவேண்டிய தேவை ஏற்பட்டதால் கிளிநொச்சிக்கு 1956 இல் புலம்பெயர்ந்தனர். கிளிநொச்சி இலங்கையின் வடமாநிலத்தின் நெற்களஞ்சியம் எனப் போற்றப்படும் வயலும் வயல் சார்ந்த இடமுமாகும் இந்நிலம் அரச குடியேற்றம் (1936,1949.............................) நடைபெறுவதற்கு முன்னதாகவே யாழ்ப்பாணத்தை ஆண்ட சிங்கை ஆரியனால் வேளாண்மை செய்வதற்கென குலசேகரமுதலி, இராசஅம்பலமுதலி, வீரவேலாயுத முதலி. குணநாயகமுதலி, நல்லமாப்பானமுதலி மழுவராயமுதலி, குந்தமாமுதலி,சரபழுவமுதலி,நிற்சிங்கராயமுதலி, நிற்கனகராசமுதலி, மரகதவல்லி(பெண்), போன்றோருடன் **உடன்பிறந்த மூத்தவரான தனிநாயகமுதலி** அவர்களின் வழித்தோன்றல்களுக்கு வழங்கப்பெற்றதாகவும் இதற்கான ஆவணப் பதிவுகள் யாழ்ப்பாணச் செயலகத்தில் காணப்பட்டதாகவும் முந்நாள் **காணி அலுவலரும், "ஈழமுரசு"** செய்தித்தாளின் **ஆசிரியருமான** காலஞ்சென்ற திரு. **அமிர்தலிங்கம்** அவர்கள் கூறுவார் (ஆய்விற்குரியது).

கிளிநொச்சி வந்து ஓராண்டு கரடிப்போக்கிலும் பின் தமது வதிவிடத்தை 1957இல் செயந்தி நகருக்கும் மாற்றிக் கொண்டனர். இவர்களின் கல்வி கரடிப்போக்கிலுள்ள நல் (புனித) திரேசா பெண்கள் கல்லூரியில் தொடர்ந்தது. செயந்திநகர் குடிவந்தபின் இவரின் கல்வி செயந்தி நகரிலுள்ள இந்துக் கல்லூரியில் தொடர்ந்தது . இங்கு அமரா் எட்டாம் வகுப்பில் இருந்து கா.பொ.த சாதாரணதரம் வரை கல்வி கற்று தேர்ச்சி பெற்றார். பள்ளிக் காலத்தில் பள்ளி நண்பர்களாலும் ஆசிரியர்களாலும் ஒரு பண்பாளராகக் கணிக்கப் பெற்றார். இவர் எந்தத் தொழிலானாலும் கூச்சமின்றித் தன்னை முற்று முழுதாக அதில் ஈடுபடுத்துபவர். மற்றவருக்கு உதவுவதிலும் பின்நிற்பதில்லை. கல்வியைத் தொடர்வதைவிட தொழிலில் ஈடுபடவே மிகவும் நாட்டம் கொண்டு அரச


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி ஆக்கவேலை நிறுவனத்தில் (State Development and construction corporation) இணைந்து கொண்டார். இவர் பெரிய பாலங்கள் கட்டுமானப் பணிகளிலும் ஈடுபட்டு மட்டக்களப்பு, துணுக்காய்- பாலியாறு, யாழ்- அராலி, தருமபுரம்- நெத்தலியாறு போன்ற இடங்களிலும் தொடர்ந்து பணியில் ஈடுபட்டார். இக்காலப் பகுதியில் தனது இல்லத்தில் நூலகம் அமைத்து வாசகர்களுக்கு நூல் வழங்கி பொதுச் சேவையும் ஆற்றினார். சிங்கள மொழியிலும் (எழுத்து, வாசித்தல், பேச்சு) மிகத் தேர்ச்சி பெற்றிருந்தார். தனது ஒரே ஒரு தங்கையை தகை சார்ந்தோருக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்பதற்காக "பணம் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்னும் பழமொழிக்கிணங்க நேர்மையான வழியில் பல தொழிலும் செய்து பணம் சேர்த்தார். என்னதான் நாம் அறிவியல் முன்னேறி உலகம் கணினி மயமாகி சிறுத்து சிற்றூராகி கோடிகோடியாய் பணம் ஈட்டினாலும் உலகம் உழவனின் பின்தான் என்பதை **"உழுவார் உலகத்தாருக்கு அச்சாணி"** என்னும் வாக்கிற்கமைய தந்தையார் அரச தொழில் பார்த்ததால் அமரர் திரு கோபாலரத்தினம் அவர்களும் அண்ணர் திரு. விசயரத்தினம் அவர்களும் சிறுவம் தொட்டே வேளாண்மையில் ஆர்வம் காட்டினர் தமக்குக் கிடைத்த காட்டை வெட்டி காணியாக்கிப் பயிரிட்டனர்.

அண்ணன் திரு விஜயரத்தினத்திற்கும் திருவையாறு முதலாம் பகுதியில் காணி கிடைத்ததால் அவருடன் காடு வெட்டிக் களனியாக்கி பயிரிட உதவினார். திரு விசயரத்தினம் அவர்களும் 1968 இல் **திரு திருவாட்டி கோபாலப்பிள்ளை அடைக்கலம்** இணையரின் தலை மகள் **தவமலரை** திருமணம் செய்தார். தந்தை தாய் தமையனுடன் சேர்ந்து தங்கைக்கு உறவுமுறைக் காரரான **திரு திருவாட்டி வைத்திலிங்கம் நாகமுத்து** இணையரின் மூத்த மகனும் மின்பொறியியலில் பட்டயம் பெற்றவருமான திரு. **மகேந்திரராசா** (குமரிவேந்தன்) அவர்களை 1974இல் திருமணம் செய்து வைத்து இன்புற்றார். தங்கை **தனலட்சுமிக்கும்** தன் துணைவியாரின் தாய் மாமன் திரு. **அற்புதலிங்கத்தை** மணம் முடித்து அழகு பார்த்தார். என்றுமே சோர்வடையாது கண்ணியத்துடன் கட்டடத் தொழில் வேலையையும் செய்து வந்தார்.

இந்நிலையில் சாவகச்சேரி மட்டுவிலைச் சேர்ந்த கிளி/ செயந்திநகரை வதிவிடமாகவும் கொண்ட **திரு திருவாட்டி நாராயணப்பிள்ளை செல்லம்மா** இணையரின் மூத்த மகள் **நாகேசுவரி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்பண்புடை நல்லாளை பெற்றோர். 1978 ஆம் ஆண்டில் இவருக்குத் திருமணம் செய்து வைத்தனர். இத்திருமணத்தின் மூலமாய் நற்பண்புடை மைத்துனர் **நகுலேசுவரன், நவரத்தினம், சிறிப்பத்மநாதன், சிறீதரன், மனோரஞ்சன், மனோராச்சையும் மைத்துணிகள் இந்திரா, மனோரஞ்சினியையும்** பெற்றுக்கொண்டார். இல்லற வாழ்வின் நற்பயனாய் **திருமாறன், மலர்விழி, அயந்தா, அனித்தா, இலக்கீசன்** ஆகிய மக்களை பெற்றெடுத்தனர். திருமாறன், மலர்விழியின் கல்வி செயந்திநகர் இந்துக் கல்லூரியில் தொடங்கினர். மலர்விழி பிறந்து 12 ஆண்டுகளின் பின்பே 1993 ஆம் ஆண்டில் இரட்டையரான அயந்தா, அனித்தா பிறந்தனர். இக்கால கட்டத்தில் அமரர் அவர்கள் இரத்மலானையில் தொழில் பார்த்ததாலும், நாட்டின் வடகிழக்கில் இருந்த போர்ச்சூழலும், பயண இடர்பாடுகளும் இருந்ததால் தமது கட்டுமானப் பணியில் இருந்து ஓய்வு பெற்றுக் கொண்டார். அதன் பின் அவர்தம் குடும்ப நலத்தை மையமாக வைத்துப் பிள்ளைகளை நல்ழியில் வளர்க்க முற்பட்டார். கடைசி மகனான இலக்கீசன் 1995 ஆம் ஆண்டில் பிறந்தார். அயந்தா, அனித்தாவின் கல்வி நல் (புனித) திரேசா பெண்கள் கல்லூரியிலும், இலக்கீசனின் கல்வி செயந்திநகர் இந்துக் கல்லூரியிலும் தொடங்கினர். தொடர்ந்த நாட்டுப் போர்ச் சூழலால் பலமுறை இடப்பெயர்வுகளும் சொத்தழிவுகளும் ஏற்பட்டது. இவற்றிலெல்லாம் எதிர்நீச்சலிட்டு வெற்றியும் பெற்றார். 1996 இல் ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக கந்தபுரம் இடம் பெயர்ந்து பின் இந்தியா சென்று வேலூரில் ஐந்து ஆண்டுகள் (1998 - 2003) வாழ்ந்து மீண்டும் 2003 இல் இங்கு வந்து கிளி/ கணேசபுரத்தில் குடியேறி அதைத் தம் வாழ்விடமாக்கிக் கொண்டார்

திருமாறனும் பள்ளிப் படிப்பை முடித்திருந்தமையால் தந்தைக்கு உதவியாகப் பொருள் தேடும் முயற்சியாக அரபு நாட்டுக்குப் பயணமானார். அங்கு சில ஆண்டுகள் தொழில் பார்த்துப் பின் நோர்வேக்குச் சென்றுள்ளார். இதே காலகட்டத்தல் மலர்விழியும் திருமண வயதை அடைந்ததால் இவருக்கும் துணை தேடுவதில் அமரர் பெரு முயற்சி எடுத்தார். இவரின் மாசற்ற மனத்திற்கும் பண்பிற்கும் ஏற்றவர்களாய் மண்டைதீவை பிறப்பிடமாகவும் கொக்குவில்லை வாழ்விடமாகவும் கொண்ட சீரும் சிறப்புமுடைய நற் பண்பாளர் **திரு திருவாட்டி சிவராசா இராசேசுவரி** இணையரை உறவாடி (சம்பந்தி) களாகப் பெற்று அவர்தம் மூத்த மகன் **சிவகரனை** 2004ல் தம் மகளின் வாழ்க்கைத் துணையாக்கினார். மருகரும் இன்புற்று இனிதே உதவிடும் மனதினராய் பண்புடையாளனாய்ப் பொருளீட்டி நயமோடு உறவுகள் வாழ நோர்வே நாடு சென்று தம் துணைவியார் மலரையும் அங்கு அழைத்துக் கொண்டார். இவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லற வாழ்வில் முதற் கொடையாய் **"ஓவியா"** பிறந்த போது தம் முதற் பேரக் குழந்தையைப் பார்க்க நோர்வே சென்று அங்கு ஆறு மாதங்கள் நின்று அவர் நலம் பார்த்து இங்கு வந்தார்.

வன்னி நிலப்பரப்பிலே தொடர்ந்த போர் நடவடிக்கைகளால் மனமுடைந்து இங்கிருந்த மூன்று பிள்ளைகளைப் பாதுகாப்பதிலே கண்ணும் கருத்துமாயிருந்து பல இடப்பெயர்வுகளையும் துன்பங்களையும் சந்தித்து ஈட்டிய வளங்களையும் இழந்து வெறுங் கையுடன் பாதுகாப்புப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டுப்பிடிக்கப்பட்டு வவுனியா கொண்டு வரப்பட்டு செட்டிகுளம் திறந்த வெளி முகாமில் ஆறு மாதங்கள் இருந்து குடும்பத்துடன் வெளியேறி தமது வவுனியாவில் உள்ள தங்கை வீட்டில் வசித்து வந்தார். எப்பொழுதுமே அவர் "தன் கையே தனக்கு உதவி" என்னும் கொள்கைப் பிடிப்பாளராகவே காணப்பட்டார். சோம்பியிருத்தல் ஓய்வெடுத்தல் போன்றவற்றிற்கு இடங் கொடாதவர் என்பதைப் பழகியவர்கள் அறிவார்கள். இவருக்குப் பெரிதாக எந்த நோயும் இருந்ததாய் இல்லை. தலையிடி சிறிது காலமாக இருந்ததாகவும் கண்பார்வை சற்றுக் குறைந்திருந்ததும்தான். தன்னைப் பற்றி அவர் எந்த வேளையிலும் சிந்திப்பதில்லை. கடைசிப் பிள்ளைகள் மூவரைப் பற்றியதுதான் அவர் கவலையாய் இருந்தது.

மூத்த மகள் மலர்விழி நான்கு மாத இரண்டாவது பேரக்குழந்தை **இந்துசா**வுடனும் மூத்த பேரக் குழந்தையுடனும் இவர்களைப் பார்க்க நோர்வேயில் இருந்து இங்கு வந்தபோது மட்டில்லா மகிழ்வுடன் காணப்பட்டார். மருமகனின் மேலான அன்பும் பெரும் மனநிறைவைக் கொடுத்தது. பலவற்றை இழந்தாலும் பிள்ளையை, பேரக் குழந்தைகளைக் கண்டு களிப்புற்று இருந்த வேளை காலனவன் பொறாமைக்கு உட்பட்டோ இமைஇமைக்கும் நேரமதில் உணர்வற்ற நிலையில் ஆக்கி நான்காம் நாள் 22.03.2010 மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினரை ஆறாமீளாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்டார்.

அமைதி! அமைதி! அமைதி!!!

குறிப்பு: வட எழுத்துக்கள், வடசொற்கள் தவிர்க்கப் பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மகள் ஔவையார்

**ஆண்டுதோறும் மாணவர்களுக்கு நடத்தப் பெறும் திருக்குறள் இலக்கியத்திறன் தேர்வுப் பாடத்திட்டத்திற்கான ஆத்திசூடி, கொன்றைவேந்தன் பாக்களும் அதற்கான பொருள், ஔவைக் கதைகளை உள்ளடக்கிய நூல்.**

**தொகுப்பாக்கம்**

**தமிழ்க்காவலர்**

**திரு. வே. இறைபிள்ளை (பரநாதபிள்ளை)**

**வெளியீடு :**

**கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச்சங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மகள் ஔவையார்


| | | |
|---|---|---|
| உரிமை | : | கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம் |
| முதற்பதிப்பு | : | தி.ஆ.2039, (2008) |
| படிகள் | : | 1000 |
| பதிப்பு | : | வாணி கணனிப் பதிப்பகம்,<br>பி.1ம் குறுக்குத்தெரு,<br>வவுனியா. |


## இந்நூலுக்கு துணை நின்றவை

- ஔவையார் : முனைவர் தமிழண்ணல்
- ஆத்திசூடி மூலமும் செந்தமிழ் அந்தணர்
  அகல் விளக்கு உரையும் : இரா.இளங்குமரன்
- மண்ணின் மதிப்பு : முனைவர் மு.வரதராசன்
- நீதி நூற்கள் : முனைவர் ஞா.மாணிக்கவாசகம்
- சங்ககால ஔவையாரும்
  உலகப் பெண்பாற் புலவர்களும் பெ.சு.மணி
- சங்கச் சான்றோர் : முனைவர்.ந.சஞ்சீவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

ஒளவையார்; சங்ககால ஒளவையார் (கி.மு2ம் நூற்-கி.பி2ம்நூற்), நீதி நூல் ஒளவையார் (பிற்காலச் சோழர் காலமாகிய கி.பி.10-12ம் நூற்), ஒளவைக்குறள் அல்லது ஞானக்(அருள்) குறளென்று வழங்கும் 310 குறள்களையும், விநாயகரகவலையும் பாடியவராகக் கொள்ளப்படும் சித்தர் மரபினரான குண்டலினியோகி ஒளவையார், இன்னும் காலத்திற்குக் காலம் இப்பெயருடன் வாழ்ந்த பலரையும் இப்பெயர் குறிக்கும். இவர்களில் நீதிநூல் ஒளவையார், சங்ககால ஒளவையார் இருவருமே மிகவும் போற்றிப் புகழ்ப் பெறுபவர்கள். **சங்ககாலத் தொகை நூல்களான புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை, நற்றினை** போன்ற நூல்களில் பல பாடல்களைப் பாடிய ஒளவையார் உலகப்புகழ் பெற்ற பெண்பாற் புலவர்களாகிய கிரேக்கத்து சாபோ, பிரௌனிங், யோர்யிய றொசற்றி, எமிலிடிக்சன் போன்ற பன்னாட்டு புலவர்களின் ஆக்கங்களுடன் ஒப்பிலக்கிய ஆய்வொன்றைச் செய்தால் ஒளவையார் இவர்களுக்கெல்லாம் இமயமாய்க் காணப் பெறுவார் என்கிறார் வரலாற்றுப் பேராசிரியர் ந.சுப்பிரமணியம். நீதிநூல் ஒளவையார் எளிமை, இனிமையானவராக பட்டி, தொட்டிகளெல்லாம் படித்தவர், பாமரர் என்றில்லாமல் எல்லோர் நெஞ்சங்களிலும் நீங்கா இடம்பிடித்த அற, அறிவியற்க் கன்னி. உலகவளவிலேயே போற்றப்படும் உயரிய தகைசார் பெண்பாற் புலவர். தமிழர் நடுவில் ஒருவனுக்குத்தன்னும் ஒளவையைப் தெரியாதென்றால் அது தமிழினத்திற்கே இழுக்காகும். இதைக் கருப்பொருளாக வைத்தே மாணவ சமுதாயமும், தமிழ் சமுதாயமும் ஒளவைப்பாடல்களில் பொதிந்துள்ள கருத்துக்கள், உண்மைகள், நுட்பங்கள் போன்றவற்றை நன்கு புரிந்து கொள்ளும் வகையில் யாக்கப் பெற்றிருக்கிறது இந்நூல்.

கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழுக்காகவே தன்னை ஈகம் செய்து, தமிழே மூச்சாகக் கொண்டு, தமிழ்த்தொண்டு புரியும் தமிழக்காவலர் திரு.வே.இறைபிள்ளை (பரமநாதபிள்ளை) அவர்களால் தொகுக்கப் பெற்றது தான் இந்தத் **"தமிழ் மகள் ஒளவை"** யென்னும் நூல். இதில் உள்ளடங்கியிருப்பவை பெரும்பாலும் அறிவுரைகளும், அறவுரைகளும், ஏன் சில அருளுரைகளும் பொதிந்த பாடல்களே. சிறந்த நன்நெறிக்கவிதை வித்துக்களை மக்களின் மனவயலில் விதைத்து, உயர்பண்புப்பயிரை வளர்க்கும் ஒப்பற்ற **"சொல் ஏர் உழவர்"** ஒளவைப் பெருமாட்டியே என்றால் அது மிகையில்லை. நீதிநூல் ஒளவையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடியனவாக ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை தவிர எண்ணற்றப் பாடல்கள் தனிப்பாடற் திரட்டு, தனிச் செய்யுட் சிந்தாமணி போன்றவற்றில் குறிப்பிடப்பெற்றுள்ளன. ஒரு தேசநாகரிகத்திற்கு அடையாளம் அத்தேசத்தின் இலக்கியமே என்பார் அறிஞர். சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் கவிதை மரபில் மிக உயர்வுடையது. இதில் ஔவையார் ஒப்பற்றவர். கடுமையான, நுட்பமான தகவல்களை எவரும் புரிந்து கொள்ளும்படி எளிய நடையிற் தருவதில் ஈடுஇணையற்ற திறமைசாலி என்பதும் வெள்ளிடைமலை.

உலகிலுள்ள அனைத்து மொழிகளுள்ளும் நீதிநெறி, அறிவுரை, உயர்ந்த கொள்கைகள் கருத்துக்கள், மெய்யியல் (தத்துவம்) போன்ற பண்புகளை நிரம்பப் பெற்றுள்ள நூல்கள் தமிழ் மொழியில் மட்டும் தானுள்ளன. இது தமிழனின் உயர்பண்பாட்டு நாட்டத்தினை வலியுறுத்துவதாகும். **பதினென் கீழ்க்கணக்கு நூல்களில் திருவள்ளுவமாலை (திருக்குறளல்ல), நாலடியார், இன்னாநாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழிநானூறு, முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, நான்மணிக்கடிகை, சிறுபஞ்சமூலம்** போன்ற நூல்கள் முழுக்க முழுக்க நீதிநெறிகளை உள்ளடக்கியவைகளே. இவற்றில் அடங்குவன, அடங்காதவனவாகிய நீதிநெறிகளும், அற, அறிவுரைகளில் சிறந்த பல ஔவையின் நூல்களிற் காணலாம். ஔவையார் ஆக்கிய நீதிநூல்கள் மாந்த உடல், மனவளர்ச்சிக்கேற்ப எளிய நடையில் சிக்கனச் சொற்களில் அமைந்த விதமே அதற்கான சான்றுகள். ஆத்திசூடியைப் "**பாலடைத் தமிழ்**" என்றும் அதாவது மழலைப் பருவத்தினருக்கு பாலும் மருந்தும் புகட்டுவதற்கென்றே பயன்படுத்தும் "**பாலடை**" போன்றதாகும். கோப்பையில் குடிக்கத் தெரியாதவர் கொண்டியில் பாலை உறிஞ்சிக் குடிப்பது போன்று சிறாற்கென்றே எளிய ஒரு வரியில் மூன்று, நான்கு சொற்களைக் கொண்டு ஆக்கப் பெற்ற கொன்றைவேந்தன் "**கொண்டிதமிழ்**" என்றும், வளர்ந்தவர்க்கென்று வாழ்வியற் கருத்துக்களை நான்கு வரிகளாலான பாக்களின் வழி ஆக்க பெற்றவையே மூதுரை, நல்வழி, தனிபாடற்திரட்டு போன்ற நீதிநூல்களுமாகும். ஆத்திச்சூடி, கொன்றைவேந்தனை தமிழ் நெடுங்கணக்கு வரிசையிலே ஆக்கித் தந்துள்ளார். ஆத்திசூடி 108 தொடர்களாலானது. "**மாற்றானுக்கு இடங்கொடேல்**" என்றவர் எச்சூழலில் "**முனை முகத்து நில்லேல்**" என்பார். இதற்குப் போர்ப் பயிற்சியில்லாமல் போர் முனைக்குச் செல்லாதே என்பது தானே பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு "போர்த் தொழில் புரியேல்" என்றும் கூறுகிறார். உயிர்க்கொலை, பொருட் சூறை, பாலியல் வன்முறை போன்ற பண்பாட்டுச் சீரழிவுகளை உருவாக்கும் போரை கூலி பெற்றுச் செய்யும் ஒரு தொழிலாகக் கொள்ள கூடாதென்பதை அன்றைய தமிழரசரிடையே, தமிழ் அந்நிய அரசரிடையே ஏற்பட்ட போர் காரணமாய் தமிழினம் சீரிழந்ததை நோக்கித் துன்பமேலீட்டால் அது அறம், அறிவு அல்ல என்னும் நோக்கில் கூறியிருக்க வேண்டும். பல ஆத்திசூடிகள் ஒருவரின் தன்னுறுதி தன்முயற்சியையும், ஆளுமையையும் (**"பீடுபெறநில்"**), விழிப்புணர்வையையும் (**"தோற்பனதொடரேல்"**), முன்னேற்றத்தையும் (**"திருந்தச்செய்"**), உழைப்பையும் (**பூமிதிருத்தி உண்**) போன்ற பல தொடர்களால் ஊக்குவிக்கிறார். பழகும் பண்பாடுகள் பற்றி 16 சூடிகளில் கூறுவார். குறிப்பாக **"வல்லமை பேசேல்"**, **"பழிப்பனபகரேல்"**, **"மொழிவது அறமொழி"**, **"பிழைபடப்பேசேல்"**, **"சுழிக்கப்பேசேல்"** போன்ற பண்பாட்டு வழிகளை வளமாக்குகிறார். ஒருவரோடொருவர் பழகுவதற்கும் **"இணக்கமறிந்து இணங்கு"** என்றும், கல்வியில் பலகோணப்பார்வையைச் செலுத்தி **"நூல்பலகல்"**, **"ஓதுவது ஒழியேல்"**, போன்ற பல சீர்களை முன்வைக்கிறார். **"மனையாளுடன் கூடி வாழ்"** என்றவர் **"மைவிழியாள் மனையகல்"** என்கிறார். அதாவது மனையாளிருக்க இன்னொருவள் வீடு செல்லாதே என்பது தானே பொருள். அத்தோடு **"தையல் சொற்கேளேல்"** என்றும் கூறுவார். இது அன்றைய நாட்களில் பலவேந்தர்கள் தம்துணைவியர் சொற்கேட்டு செயற்பட்டதால் அரசு நாடு சீரழிந்தது போன்ற நிகழ்வுகளால் ஔவை அப்படிக் கூறினாரெனலாம். திருவள்ளுவரும் அரசியல் சார்ந்த நட்பியலிலேயே **"பெண் வழிச்சேறலை"** வைப்பதால் இது துல்லியமாய்த் துலங்கும். **"ங்"** என்னும் மெய்யொன்றே பயன்பட்டு உயிர் மெய்யில் **"ஙகர"** வரிசையை காப்பாற்றுகிறது. அந்த **"ங"** போல் நீயும் உன் சுற்றத்தைக் காக்க வேண்டும் என்பதற்காக **"ங போல்வளை"** என்றார்.

எம்மின அறிவியல் (விஞ்ஞான) அழிவுக்கு நாமே வித்தென்பதை ஔவையின் **"கைவினை கரவேல்"** என்னும் சீர் உறுதி செய்யும். அன்றிருந்த பல அறிவியல் நுட்பங்களை, மருத்துவமுள்ளிட்ட தொழில்களை, சித்து உள்ளிட்ட அரிய கலைகளை தம்வழித்தோன்றல்களுக்கே மறைத்து இருட்டடிப்புச் செய்ததால் அவை இன்று அழிந்து போய்விட்டன. அத்தோடு அந்நியராகிய வைதீகவேதவாரியர், வடமொழியாளர், அராபியர், ஐரோப்பியர் போன்றோர் வரவால் தமிழினம் **நாட்டை, மொழியை, மெய்யியல், அறிவியல்,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வானியல்,** கட்டக்கலை, இயல், இசை, நாடகம் போன்ற பலவும் சிதைக்கப்பட்டு, அழிக்கப்பட்டு, அறிவுக்களவாடப்பட்டுப் போனதால் இன்று நாம் தாழ்ந்து போனோம். இது இவ்வந்நியர்களின் அடுத்துக் கெடுத்தலினால் ஏற்பட்டதே. இதையே **"வேண்டிவினை செயேல்"** (சதிசெய்யாதே) என்றார் ஔவை. இன்றும் அடுத்துக் கொடுப்போருக்கு பக்கபலமாக, முண்டு கொடுப்பவர்களாகவுமே உள்ளோம்.

கொன்றைவேந்தனே பெரும்பான்மையாக கற்றார், கல்லாதவர் நாவினில் களிநடனம் புரிவதைக் காணலாம். சில பழமொழிகள் போலவும் **"ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்"**, **"கற்பெனப்படுவது சொற்திறம்பாமை"** போன்றனவும், சில ஆத்திசூடியின் விரிவாகவும், **"நைபரெனினும் நொய்ய உரையேல்"**, **"மைவிழியார் தம்மனை அகன்றொழுகு"** போன்றனவும், இன்னும் சில திருக்குறட் சிந்தனையின் வழிப்பட்டனவாயும்; **"எண்ணென்ப ஏனையெழுத்தென்ப கண்.................. (கு.392)"**, **பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் ........... கு.210 என்னும் குறள்களை முறையே"**, **"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"** என்றும், **"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்"** என்றும் சூடுகிறார். இப்படிப்பல குறள்களை நடுவகமாகக் கொண்டு பல கொன்றைச் சூடிகளை யார்த்துள்ளார் ஔவைப்பாட்டி. **"கோட்செவிக்குக் குறளை காற்றுடன் நெருப்பு"** என்னும் கூற்று கவின் நயம்மிக்க ஒரு தொடராகும். அதாவது கோள்கேட்கும் செவி, பிறர் மீது கோள் சொல்லும் வாய் இரண்டும் சேர்வது நெருப்புடன் காற்றுச் சேர்வதற்கு ஒப்பானது (காட்டுத்தீயைப்போன்றது) என்று செப்புகின்றார்.

ஔவைக்கதைகளென்ற தலைப்பின் கீழ் மாணவற்கு அறிவையும், அறத்தையும் விளக்கும் வகையில் மூதுரை, நல்லவழி, தனிப்பாடற்திரட்டு போன்ற நூல்களின் பாடல்களிலிருந்து சிலவற்றை தெரிவு செய்து இத்துடன் இணைத்துள்ளார் ஆசிரியர் திரு.வே.இறைபிள்ளையவர்கள். குறிப்பாக உழவையும் உழவனையும் முதன்மைப்படுத்தி அவனே உலகத்தின் அச்சாணி போன்று செயல்படுகின்றான் என்பதைத் தெளிவுபடுத்த

"வரப்புயர நீருயுரும், நீர் உயர நெல்லுயரும்............... என்னும் பாடலினூடாக வெளிப்படுத்துகின்றார் ஔவை. இதையே திருவள்ளுவரும்

**"சுமன்றும் ஏர்பின்னது உலகம் அதனால்**
**உழன்றும் உழவே தலை"** என்பார்

அடுத்து புல்லறிவாளராகிய நன்றியறிவில்லாத கீழோர்க்கு செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி எவ்வளவு கொடிய தீங்கை விழைக்குமென்பதை; **"வேங்கை வரிப்புலி நோய் தீர்த்த விடதாரி .............."** என்னும் மூதுரைப் பாடலினால் உணர்த்துகிறார். இதையே திருவள்ளுவனாரும் **"நன்று ஆற்றாலுள்ளும் தவறுண்டாம் அவரவர், பண்பறிந்தாற்றாக்கடை"** என்பார்.

இதையே இன்னும் ஆழமாக நீதிவெண்பா 74 செப்பும்.

**"நன்றறியாத் தீயோர்க்கு இடம் கொடுத்த நல்லோர்க்கும்**
**துன்றுகிளைக்கும் துயர்சேரும் - குன்றிடத்தில்**
**பின்னரவில் வந்தகரும்பிள்ளைக்கு இடம் கொடுத்த**
**அன்ன முதல் பட்டது போல்"**

அதாவது யாரும் ஏறமுடியாத செங்குத்தான மலையுச்சியில் அரச அன்னம் தன்னினத்துடன் வாழ்கிறது. ஒரு நாளிரவு மழையில் நனைந்தபடி ஒரு காகம் வந்து தங்கயிடம் கேட்கிறது. அரச அன்னம் உடன்படுகிறது. விடியற்காலை காகம் பறந்து போய் விடுகிறது. ஆனால் அது அன்றிரவு இட்ட எச்சத்திலிருந்து ஒரு ஆலமரம் வளர்கிறது. பரந்து படர்கிறது. விழுது விடுகிறது. பலவாண்டுகளானதால் அன்ன இனமும் பல்கிப் பெருகிறது. ஆலமர விழுதுகள் நிலத்தை தொடுகின்றன. இதைப் பற்றி ஒரு வேடன் மலையுச்சிக்கு ஏறி அன்னங்களை கண்ணி வைத்துப் பிடிக்கின்றான். காலப்போக்கில் அன்ன இனமே அழிந்து போவதற்கு வழிசமைக்கிறான். பல நூற்றாண்டுகளுக்கு முன் அந்த அரச அன்னம் விட்ட தவறு அந்த இனமே அழிந்து போக காரணமாயிற்று. இதுவே தமிழரின் 4000 ஆண்டுகளுக்கு மேலான அழிவு நோக்கிய நிலையுமாகும். அடுத்து **"அன்பில்லாள் இட்ட அமுது"** என்னும் தலைப்பில் கற்பனையுடன் கூடிய நகைச்சுவைமிக்க கதையைக் காண்கின்றோம். முருகக் கடவுளுக்கு **"கொடியது"** பற்றிக் கூறும் போது அன்பில்லா மனைவியின் கையால் உணவுண்பது **"கொடிதினும் கொடிதென்று"** கூறுவார். அத்தொடு இல்லாள் நற்செயல், நற்காரியங்களில் கணனுடன் இசைந்தொழுகவில்லையானால் அவள் உயிர்பறிக்கும் கூற்றவனுக்கு சமனென்பார் மூதுரையில். பழிக்கஞ்சாப் பெண்ணுடன் கூடிவாழ்வதை விட தனிமை சிறந்ததென்பார் நல்வழியில் இவையெல்லாவற்றிற்கும் மேலாக இல்லாளை இழந்த இல்லத்தலைவன் அனைத்தையும் இழந்தவனென்பதை உணர்த்த

**"தாயோடு அறுசுவையோம் தந்தையோடு கல்விபோம்**
**சேயோடுதான் பெற்ற செல்வம்போம் - ஆயவாழ்வு**
**உற்றார் உடன்போம் உடன்பிறப்பால் தோள்வலிபோம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொற்றாலியோடு எவையும்போம்'' என்பார் தனிவழிப்பாடல் வழி ஒரு குடும்பத்தில் மனையாளே தலைவனுக்கு தாயாய், தந்தையாய், குழந்தையாய், உற்றாராய், உடன்பிறப்பாய், எல்லாமாய் இருந்து வாழ்விப்பவள் என்பதை உறுதி செய்கிறார்.

மாந்தனுக்கு ஆறு அறிவென்று கூறுகிறார்களோ அது உண்மைதானா? தன்னலமே தலைவிரித்தாட, எனக்கு, உனக்கென்று பகைமையும், பொறாமையும் கொண்டு முட்டிமோதிக் கொள்கிறானே, அவனது கோபம், சினம் எவ்வளவு பொல்லாததாயிருக்கிறது. ஆனால் அது அவனுக்கு இயல்பாயிருக்கிறதே, உடன்பிறந்தே இருக்கிறதே. கோபத்தால், பழிவாங்கும் உணர்வால் அழிந்த, அழிகின்ற, குடும்பங்கள், அரசுகள், அரசர்கள், நாடுகள் எத்தனை? நெஞ்சம் நடுங்குகிறதே. கோபம் பாவங்களின் தாய் தந்தையாய் இருக்கிறதே அழிவுகளுக்கெல்லாம் மூலகாரணமாயுள்ளதே. சிந்திக்கும் அறிவைத் தானே ஆறாவது அறிவென்றனர், ஆனால் அவன் சிந்தனை கொடூரங்களில் மூலமாயுள்ளதே. மீட்சியில்லையா? இவர்களைத்தானே ஔவை "மூவகைச் சினத்தாராய்" பிரித்தார். என்னே அவரின் ஆழ்ந்த அறிவின் ஆளுமை.

முருகக் கடவுளின் வேண்டுகோட்கிணங்க ஔவை பெரியது, அரியது, இனியது பற்றிக் கூறும் போது 1. இறைவனோ தொண்டர் உள்ளத் தொடுக்கம், தொண்டர் பெருமையே உலகில் மிகப்பெரியது என்றும், 2. அரியவற்றுள் அரியது அறமும் (தானம்), துறவு அல்லது தொண்டு (தவம்) செய்தலென்றும், 3. இனியவற்றுள் இனியது அறிவுள்ளோரை கனவிலும், நனவிலும் காண்பதென்றும் சுட்டுகிறார். இத்தனிப்பாடல் வழி தொண்டனையும், கொடையாளனையும், பற்றறுத்தவனையும், அறிவாளனையும் ஔவையார் வெளிப்படுத்துகிறார். அதாவது அறம், அறிவு, அருள் நிறைந்த வாழும் மாந்தனையேயாகும். இதையே வள்ளுவன்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்'' என்பார்.

சங்க நூல்களில் சங்ககால ஔவையின் அற, அறிவுரைகளைப் பரக்கக்காணலாம். இவர் ஏழு கொடை வள்ளல்கள் காரி, பாரி, ஓரி, பேகன், நள்ளி, ஆய் போன்றோரில் ஒருவனாகிய குறுநில மன்னன் அதிகமான் நெடுமான் அஞ்சியின் அவைப்புலவராக, உற்ற நண்பராக, தூதுவராகவும் இருந்து செயற்பட்டவராவார். இவரது சிலபாடல்கள் அன்றைய வரலாற்றுச் செய்திகளை (நற்றினை 295) வெளிக்கொணர்பவையாகவும், காதல், போர், கொடை, புகழ் பற்றிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுவனவாகவுமுள்ளன. அன்று தமிழ் மூவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியர்களும், குறுநில மன்னர்களும் தம்வீரத்தை வெளிப்படுத்துவதற்காகப் போரை முதன்மைப்படுத்தி தம்முள் பொருதுற்றமையால் என்றும் மறவர் மடிவும், சொத்துச் சூறையும், பரதையர் பெருக்கமும கண்டு அன்றைய சான்றோர் வெந்து வெதும்பிக் கொண்டிருந்த வேளை இம்மூவேந்தரும் தமிழ்நாட்டின் உறையூரில் இருப்பதறிந்து சென்று அவர்களைக் கண்டு மட்டிலா மகிழ்வுற்று என்றும் அவர்கள் ஒன்று சேர்ந்திருக்க வேண்டிய முக்கியத்தை விளித்து புறநானூறு 367ம் பாடல்வழி உணர்த்துகிறார். அத்தோடு அதிகமானுக்கும் தொண்டைமானுக்கும் இடையிலேற்பட்ட போர்முறுகலைத் தவிர்க்க தூதுவராகவும் செல்கிறார். என்னே அவரின் அறிவு ஆளுமை. எனவே தான் தனக்குக்கிடைத்த கிடைத்தற்கரிய நெல்லிக்கனியை தமிழ்வாழ, தமிழினம்வாழ, கோலோச்சும் மன்னனைவிட நீடுவாழவேண்டியவர் அறிவுடைச் சான்றோரே என்று கொண்டதால் அஞ்சி ஔவைக்கு ஈந்தான். அத்தோடு ஔவை அவனைவிட மூப்படைந்த முதிர்ந்தவராக இருந்திருக்க வேண்டும். இதை உண்டதால் ஔவை பல நூற்றாண்டுகள் வாழ்ந்திருக்கவும் கூடும். இச்செயலின் மூலம் அதிகமான் நெடுமான் அஞ்சியும் அவள் வாழும் நாள் வரை வாழ்வான். ஔவைப் பாடல்கள் தமிழன் வாயில் உச்சரிக்கப்படும்வரை வாழ்வான். உலகியலை எடுத்துக்காட்டி நிலையான அறிவுரைகளைக் கூறுவதே பொருண்மொழிக் காஞ்சியாகும். இதில் ஒரு பாடலையே பாடியுள்ளார் ஔவையார் அதுவும் ஆண் மேலாண்மை உலகைப் பார்த்தே அறைகூவல் விடுகிறார்.

"நாடாகொன்றோ காடாகொன்றோ; அவலா கொன்றோ மிசையா கொன்றோ, எவ்வழி ஆடவர் நல்லவர்; அவ்வழி நல்லை வாழிய நிலனே". (புறநானூறு 187)

ஒரு நாடு நல்லதென்று கூறிடின் அது அங்கு வாழ்கின்ற ஆண்களிலேதான் தங்கியுள்ளதென்பதை துலக்குகின்றார். அன்று ஆண் மேலாண்மை கோலோச்சியதென்பதை இக்கூற்று தெளிவு செய்கிறது. நாடு நலம் பெற, நீதி, நேர்மை மேலோங்க பெண்ணிய விடுதலையின் முதற்கூற்றாகச் சங்ககால ஔவை இதை வெளிப்படுத்துகின்றார்.

ஔவையாரைப் பலராகக் கொண்டாலும் சரி, ஒருவர் இருவராகக் கொண்டாலும் சரி ஔவையின் கூர்ந்த மதியினையும் ஆழ்ந்த புலைமையையும், ஆசுகவி (நினைத்தவுடன் கவிபாடல்) பாடும் ஆற்றலையும் யார் தான் வியக்கமாட்டார்கள். கவிநயத்தை, கற்பனைத்திறனை கருத்தாழத்தை, யாப்பிமைதியினை, சொல்லடுக்கு நளினத்தை, இசையின்பத்தைச் செவிமடுக்க எத்தனை காதுகள் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை. எனவே ஔவை தான் உலக கிரேக்க, இலத்தீன், ஆங்கில பெரும் புலவர்களோடு ஒப்பு நோக்கப்படுகிறார்.

பொதுவாக - செய்தித்தாள்கள், வானொலி, தொலைக்காட்சி நிறுவனங்கள்; **சங்க இலக்கியங்கள், திருக்குறள், ஔவைப்பாடல்கள், ஐம்பெரும் காப்பியங்கள்** போன்ற தமிழ்ப்பண்பாடு மட்டும் பேணும் கருத்துக்களின் வெளிப்பாட்டிற்கு எந்தவித ஒத்துழைப்பும் வழங்குவதில்லை. ஏனெனில் அங்கு மூளையிலே கிள்ளியெறியப்பவர்களுக்கு முண்டு கொடுப்பவர்கள் தானிருக்கிறாரகள். வைதீகவேத, ஆரியத்துதி பாடலுக்குச் சேர்ந்து சங்கூ.'.துவதான் வேலை இருந்தும் தனியொரு மனிதனாக மருதநிலமாம் **கிளிநொச்சி மண்ணிலே தமிழ்ச் சங்கமமைத்து 15 ஆண்டுகளுக்கு மேலாக தூயதமிழுக்காகவே அதை வழிநடத்தி எல்லா வகையிலும் எம் தாய்மொழியாம் தமிழ்மொழி முன்னிலைப்படுத்தப் பெறவேண்டும் என்னும் தணியாத, தளராத, தன்னலமற்ற, தொண்டனாக தன்னை வெளிப்படுத்தி கொண்டிருப்பவர் தமிழ்க்காவலர் திரு.வே.இறைபிள்ளை அவர்கள்.** இவர் தமிழர் வாழ்வில் தமிழ், மாணவர் வாழ்வில் திருக்குறள், தமிழ் திருமணம் போன்ற பல நூல்களையும், பல அறிஞர்களின் உறைகளோடு தொகுத்துத் தந்துள்ளார். இவர் சொல்வதைச் செய்பவர். செய்வதைச் சொல்பவர். இன்பியல், துன்பியல் கோவில் வழிபாடு போன்ற தமிழனின் பண்பாட்டு நிகழ்வுகள் அன்னைத் தமிழில் நடைபெற வாஞ்சித்துச் செயல்படுபவர். தமிழன்னையில் மாசுப்படிதலை நீக்கப் போராடும் மானமறவர். இவரின் நூல்களின் மூலமாகவும், தொண்டின் மூலமாகவும் மாணவ சமூகமும், ஏனையோரும் மனிதநேயப் பண்பாடு பேணும் சமுதாயமாக வளர்வார்கள் என்பதில் ஐயமில்லை. இந்நூலை மாணவரும் ஏனையோரும் வாங்கிப் படித்து பயன்பெற வேண்டுகிறேன். தமிழ் காவலர் திரு.வே.இறைபிள்ளை அவர்களும் பல்லாண்டு வாழ்ந்து அவர் தொண்டு நீண்டு சிறக்க. வாழ்த்துகின்றேன்.

வாழ்க தமிழ்! வளர்க பகுத்தறிவு! மறுமலர்ச்சி பெறுக தமிழர் பண்பாடு!

விடை 2039 (தி.ஆ) **நெடுந்தீவான**

நா.வை.குமரிவேந்தன் (மகேந்திரராசா)
முன்னாள் கிளி.மாவட்.தமிழ்ச்சங்கச் செயலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

முனைவர் மு.வரதராசன் அவர்களின் "மண்ணின் மதிப்பு" என்னும் நூலைப் படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அவர் தனது கட்டுரையில் வயலோ, காடோ, பள்ளமோ, மேடோ எப்படியானாலும் எங்கே நல்ல மக்கள் வாழ்கின்றார்களோ அது தான் நல்ல நிலம் என்கிறார் ஔவையார் என்று குறிப்பிபிட்டிருந்தார்.

ஔவையார் ஒருவர் அல்ல, சங்ககால ஔவை, நீதிநூல் ஔவை என ஔவையார் இருவர் வாழ்ந்ததை பலநூல்களைக் கற்றதன் மூலம் அறியக் கூடியதாக இருந்தது. கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம் ஆண்டு தோறும் திருக்குறள் தமிழ் இலக்கியத்திறன் தேர்வை மாணவர்கள் மத்தியில் நடத்தி வருகிறது. தேர்வுக்கென மாணவர்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 108 குறட்பாக்கள் அடங்கிய **"மாணவர் வாழ்வில் திருக்குறள்"** நூலில் ஔவையாரின் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் பாக்களும் இணைக்கப்பட்டுள்ளன.

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், ஆத்திசூடிமாலை, கொன்றை மாலைகளைச் சூடி இனிமை தவழ்பவனாக இருக்கும் சிவபெருமானையே குறிக்கும். இதனைப் பிள்ளையார் வழிபாடாக வலிந்து அமைத்தல் கவிக்கு இயல்புடையதாக இருக்க முடியாது.

அண்மையில் செந்தமிழ் அந்தணர் இரா.இளங்குமாரரின் **"ஆத்திசூடி மூலம் அகல் விளக்கு உரையும்"** எனும் நூலைப் படித்த போது **"சனி நீராடு"** என்பதற்கு "ஊற்று நீரில் குளி" என உரை தந்து இதனை விளக்கியும் உள்ளார்.

எனவே ஔவையாரின் சுவை மிக்க கதைகளையும் உலக இலக்கிய அரங்கின் முதல் வரிசையில் முதலிடம் பெற தகுதியுடைய ஆத்திசூடி, கொன்றைவேந்தன் பாக்களுக்கு அருமையான உரையையும் கொடுக்க வேண்டும் என்ற வேட்கையால் இந்நூலைத் தொகுத்துள்ளேன். அருமையான ஆழமான செய்திகளை அறிஞர்களின் நூல்களில் இருந்து தொகுத்த இந்நூலை பள்ளி மாணவரும் ஏனையோரும் படித்துப் பயன்பெற வேண்டுகிறேன்.

இச்சுவடிகளை நல்ல முறையில் நகல் எடுத்துத் தந்த திருவாட்டி இ.அருணாசலம் அவர்களுக்கும் இதைச் சரிபார்த்து அணிந்துரை வழங்கி, நூல் வடிவம் பெற உதவிய முன்னாள் தமிழ்ச்சங்கச் செயலர் திரு.நா.வை.குமரிவேந்தன் அவர்களுக்கும், கணனி வடிவமைத்த வாணி கணனிப் பதிப்பகத்தினருக்கும், கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச்சங்கத்திற்கும் இனிய வாழ்த்தும் நன்றியும் உடையேன்.

**திரு.வே.இறைபிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

நூலின் பெயர் "தமிழ் மகள் ஔவையார்" இந்நூலில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் பாக்களும் அதற்கான பொருளும் சங்க கால ஔவையார் பாடிய பாக்களும், சுவையான ஔவைக் கதைகளும் உள்ளன. ஆத்திசூடி, கொன்றைவேந்தன் பாக்கள் கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தால் வெளியிடப்பட்ட மாணவர் வாழ்வில் திருக்குறள் நூலில் இடம் பெற்றிருலுந்தாலும் அதற்கான பொருள் இடம் பெறவில்லை. இச்சங்கத்தால் நடத்தப்பெறும் தேர்வில் இப்பாக்களின் பொருளை எழுதுவதற்கு மாணவர்கள் இடர்களை எதிர்நோக்குவதால் அப்பாக்களுக்கான பொருள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. ஔவைப்பாக்கள் சிறுவர்களையும் பெரியவர்களையும் வழிகாட்டி நெறிப்படுத்தும். அருமையான ஆழமான செய்திகளை நமக்குத் தொகுத்துத் தந்துள்ளார் தமிழ்க் காவலர் வே.இறைபிள்ளை அவர்கள்.

இந்நூலின் எழுத்துப்படியைஎழுதித் தந்த ஆசிரியை திருவாட்டி இ.அருணாசலம் அவர்களுக்கும், அணிந்துரை வழங்கி நூல் வடிவம் பெற உதவிய திரு.நா.வை.குமரிவேந்தன் அவர்களுக்கும், அழகுறப் பதிப்பித்த வாணி கணனிப் பதிப்பகத்தாருக்கும், நூலைத் தொகுத்துத் தந்த தமிழ்ச்சங்கத் தலைவர், திரு.வே.இறைபிள்ளை அவர்களுக்கும் எங்கள் நெஞ்சம் நிறைந்த நன்றிகள். பள்ளிமாணவரும் ஏனையோரும் இந்நூலைப் படித்துப் பயன்பெறுவார்களாக.

*கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச்சங்கம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தமிழ் மகள் ஔவையார் - | 1 |
| 2. | அணிந்துரை - | 3 |
| 3. | என்னுரை - | 11 |
| 4. | பதிப்புரை - | 12 |
| 5. | ஔவையார் - | 14 |
| 6. | ஆத்திசூடி - | 16 |
| 7. | கொன்றைவேந்தன் - | 25 |
| 8. | ஔவைக்கதைகள் - | 34 |
| 9. | சங்ககால ஔவை - | 47 |
| 10. | உலகப் பெண்பாற் புலவர்கள் ஒரு கண்ணோட்டம் - | 57 |
| 11. | ஔவையார்கள் வாழ்ந்த காலமும் நூல்களும் - | 58 |
| 12. | பின்னிணைப்பு - | 69 |


தமிழருக்கு தமிழ்ப் புதியவாண்டுத் தொடக்கம்
தைத்திங்களே!

**- நா.வை.குமரிவேந்தன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவையார்

உலக மொழிகளுக்குள்ளேயே, இலக்கிய மொழிகளுக்குள்ளேயே - தமிழ் மொழிக்கும், இலக்கியத்திற்கும் தனிச்சிறப்புண்டு. அத்தகைய சிறப்பினை நம் அருந்தமிழ் மொழி பெறுவதற்குரிய காரணங்கள் பலப்பல. அவற்றுள் எல்லாம் தலை சிறந்தது, ஆடவரோடும் மகளிரும் சரிநிகர் சமானமாய் விளங்கி இலக்கியத்தையும் மொழியையும் பேணி வளர்த்தலேயாகும். இது வேறு எம்மொழியினும் நம் செந்தமிழ் மொழிக்கு உரிய தனிச்சிறப்பாகும். தமிழினத்தின் பொற்காலமாய்த் திகழ்ந்த சங்ககாலத்தில் மட்டும் நாற்பத்தொரு பெண்பாற் புலவர்கள் தமிழகத்தில் விளங்கி அருந்தமிழ் மொழியைத் தம் ஆருயிர் எனக் கருதி போற்றி வளர்த்தனர் என்றால், தமிழ் இனத்தின் பெருமையை தமிழ் இலக்கியத்தின் வளத்தினை நிறுவிக்காட்ட வேறு சான்று வேண்டுவதில்லை. அனைத்துலகும் கண்டு வியந்து போற்றும் பெருமிதம் மிக்க பொற்காலமாய்த் திகழ்ந்த சங்ககாலத்தில் தமிழினம் ஈன்றெடுத்த நல்லிசைப் புலமை மெல்லிய பாவலர்க்கெல்லாம் தலைமணியாய் விளங்கிய பெருமை ஔவையார் என்னும் தமிழ் அன்னையையே சாரும். "ஔவை" என்ற சொற் பொருளாக தாய், மூதாட்டி, பெண்துறவி, துறவுப் பெண் என்றெல்லாம் அகரமுதலிகள் (அகராதி) பொருள் கூறும். அம்மை, ஔவை ஒரு பொருள் சொற்களே.

தமிழ் இலக்கிய வரலாற்றை ஆராய்ச்சிக் கண்கொண்டு நுணுகிப் பார்க்கும் போது ஔவையார் பலராய் விளங்கக் காண்கின்றோம். கடைச்சங்க நாளில் அதியமான், நெடுமான் அஞ்சி காலத்தில் வாழ்ந்த ஔவையார் ஒருவர் சமய காலத்தில் விளங்கிய ஔவையார் ஒருவர், காவிய காலத்தில் கம்பர் நாளில் வாழ்ந்த ஔவையார் ஒருவர் - இவ்மூவரும் ஒருவராயிருக்க முடியாது. கி.பி.முதல் நூற்றாண்டிலும், கி.பி.12ம் நூற்றாண்டிலும் வாழ்ந்த ஒருவர் - ஒருவராதல் எங்ஙனம். எனவே ஔவையார் ஒருவர் அல்லர் என்பது வெள்ளிடை மலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூற்றாண்டு வரிசையில் தமிழ் இலக்கிய வரலாறு படைத்த முனைவர் மு.அருணாசலம் தமது இலக்கிய வரலாற்று நூல்களில் ஆறு ஔவையார்கள் பற்றி விளக்குகின்றார். சங்ககால ஔவையார், இடைக்கால நீதிநூல் ஔவையார் என ஔவையார் இருவரே என்பது பலரது கருத்தாகும்.

சங்ககால ஔவை, நீதி நூல் ஔவை யாவரும் சிவநெறிச் சார்புடன் காணப்படுகின்றனர். இங்ஙனம் பெண்ணினத்திற்கே சிறப்புத்தேடும் வகையில் ஔவை வரலாறு அமைகிறது.

உலக பெண்பாற் புலவர்களிடையே தமிழ் ஔவைக்கு சிறப்பிடம் உண்டு என அறிஞர்கள் போற்றுகின்றனர். கிரேக்கப் புலவராகிய சாபோ **(shbbo)** எனப்படும் பெண்பாற் புலவருடன் தமிழ் ஔவையை ஒப்பிட்டு திறனாய்வு கூறுகின்றனர். ஆயிரம் பெண்பாற் புலவர்கள் இருப்பினும் அவர்களுக்கெல்லாம் ஈடுகொடுக்கும் வகையில் ஔவைப் பெருமாட்டி புலமையாலும், பண்பாலும் சிறந்து விளங்கியமை போற்றுதற்குரிய சிறப்பேயாகும்.

ஔவையார் "இளமையில் கல்" என்றதொரு இளையவர் கற்க நூல் செய்தவரும் ஆவார். எளிமையாகக் கற்கவும் கற்கத்தக்க அறநெறிகளைக் கற்கச் செய்யவும் வழிகாட்டிய முதற்பெருமை தமிழ் மண்ணில் ஔவைப் பெருமாட்டிக்கே உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி

இளஞ்சிறார் முதல் பெரியவர் வரை பயன்படுவன இவை. தமிழ் அகர வரிசையில் மொழி முதலாம் எழுத்துக்களின் வரிசைப்படி அமைந்ததால், அரிச்சுவடி கற்கும் இளம் சிறார்க்கு இது நல்ல துணை நூலாக அமைகின்றது. பேரறங்களைச் சிறிய தொடர்களால் மிகச் சுருங்கச் சொல்லுமிவை, கற்போருக்கு கற்கும் தோறும் புதுப்புதுக் கருத்துக்களைத் தந்து பயன்படுகின்றன.

## கடவுள் வாழ்த்து

ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.

***பொருள் :*** ஆத்திமாலை சூடிய இனிமை தவழ்பவனாக இருக்கும் சிவபெருமானை பல்கால் புகழ்ந்து நாம் வணங்குவோமாக.

அ) **அறஞ் செய விரும்பு** (1)

பிறருக்கு நன்மை செய்வதற்கு நீ எப்பொழுதும் விருப்பம் கொள்.

ஆ) **ஆறுவது சினம்** (2)

சினம் கொள்ளாதே

இ) **இயல்வது கரவேல்** (3)

நம்மால் முடிந்ததை உதவி, கொடை, உழைப்பு, தொண்டு ஆகியவற்றை ஒளியாமல் செய்ய வேண்டும்.

ஈ) **ஈவது விலக்கேல்** (4)

ஒருவர் ஒருவருக்குக் கொடுப்பதைத் தடுக்காதே.

உ) **உடையது விளம்பேல்** (5)

உனக்குள்ளவற்றைத் தற்பெருமையாகச் சொல்லாதே

ஊ) **ஊக்கமது கைவிடேல்** (6)

முயற்சியை விட்டு விடாதே.

எ) **எண் எழுத்து இகழேல்** (7)

எண்ணும் எழுத்தும் ஆகிய கல்வியை என்றும் தள்ளிவிடாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ) ஏற்பது இகழ்ச்சி (8)

பிறரிடம் ஒன்றை எதிர்பார்ப்பது பழியேயாகும்.

ஐ) ஐயம் இட்டுண். (9)

பசிப்போர்க்கு உணவு தந்து நீயும் உண்ணுக.

ஒ) ஒப்புரவு ஒழுகு (10)

தனக்கு ஒத்தது பிறருக்கும் ஒத்தாகும் என எண்ணி நட

ஓ) ஓதுவது ஒழியேல் (11)

கற்பதை விடாதே என்றும் கற்றுக் கொண்டிரு. (ஒழியேல் நீங்காதே)

ஔ) ஔவியம் பேசேல் (12)

பொறாமைப் பேச்சுப் பேசாதே.

ஃ) அஃகம் சுருக்கேல் (13)

உணவுப் பொருளைக் குறைவாகப் பயிர் செய்யாதே

க) கண்டு ஒன்று சொல்லேல். (14)

கண்டது ஒன்று: சொன்னது ஒன்று என்று கபடமாகப் பேசாதே.

ங) ஙப்போல் வளை (15)

'ங' என்னும் எழுத்தைப் போல் சுற்றத்தைக் காப்பாற்று.

ச) சனி நீராடு. (16)

ஊற்று நீரில் குளி.

(சனித்தல் - தேன்றுதல்)

ஞ) ஞயம்பட உரை (17)

எதையும் கனிவாக, நயமிக்கதாகக் கூறு.

ட) இடம்பட வீடெடேல் (18)

தேவைப்படும் அளவுக்கு மேல் வீட்டைப் பெரிதாகக் கட்டாதே.

ண) இணக்கமறிந்து இணங்கு (19)

ஒருவர் பழகும் இயல்பை அறிந்து அவரிடம் நீ பழகு.

த) தந்தை, தாய்பேண் (20)

தந்தையையும், தாயையும் காத்தல் பிறந்தவர் கடமை.

ந) நன்றி மறவேல் (21)

பிறர் நலம் செய்யும் நல்லோரை மறவாமல் போற்றுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப) **பருவத்தே பயிர் செய்.** (22)

எந்த ஒன்றையும் செய்ய வேண்டிய காலத்தில் செய்து விடுக.

ம) **மன்று பறித்து உண்ணேல்.** (23)

பொதுப்பொருளைக் கொள்ளையடித்து வாழாதே.

ய) **இயல் பலாதன செயேல்** (24)

அவரவர் தகுதிக்குத் தக்க செயல்களையே செய்தல் வேண்டும். தகுதிக்குத்தக்கது அல்லாதவற்றைச் செய்யக் கூடாது.

ர) **அரவம் ஆட்டேல்.** (25)

பாம்பைப் பிடித்து விளையாட்டுக் காட்டாதே. பாம்புடன் விளையாடினால் கெடுதி ஏற்படும்.

ல) **இலவம் பஞ்சில் துயில்** (26)

மெல்லிய படுக்கையில் படு.

வ) **வஞ்சகம் பேசேல்** (27)

உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசாதே

ழ) **அழகு அலாதன செயேல்** (28)

துன்பம் வந்த காலத்தும் இழி செயல்களைச் செய்யக் கூடாது.

ள) **இளமையில் கல்** (29)

நல்லவற்றையெல்லாம் இளமைப் பருவத்திலேயே கற்க வேண்டும்.

ற) **அறனை மறவேல்** (30)

நல்லனவற்றை நினைந்து செய்யும் செயலை மறந்து விடாதே.(மறவேல் - மறவாதே)

ன) **அனந்தல் ஆடேல்.** (31)

அலைமோதும் கடலில் (ஆட) விளையாடாதே. (அனந்தல் - குறைவற்ற வளமுடைய கடல்)

க) **கடிவது மற.** (32)

சொல்லக் கூடாதென்று சான்றோர் கூறுவனவற்றை நினைவிலும் கொள்ளாதே. மறந்து விடு. (கடிவது - நீக்குவது) (கோபம் உண்டாகும் சொற்களை மறக்க வேண்டும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கா) காப்பது (நோன்பு) விரதம் (33)
அவரவர் ஐம்பொறிகளையும் அடக்கிக் காப்பதே நோன்பு எனப்படும் விரதம் ஆகும்.

கி) கிழமைப்பட வாழ். (34)
உன்னை உறவு உரிமை உடையவன் என்று பிறர் நினைக்க, உறவு உரிமை உடையவனாக வாழ்வாயாக.
(கிழமை - உரிமை)

கீ) கீழ்மை அகற்று. (35)
இழிவான செயல்களை நீக்க வேண்டும்.

கு) குணமது கைவிடேல் (36)
நல்ல குணங்களை விட்டுவிடாதே

கூ) கூடிப் பிரியேல் (37)
நல்லவருடன் நட்பாய் இருந்து பிறகு அவரை விட்டு நீங்குதல் கூடாது.

கெ) கெடுப்பது ஒழி (38)
உனக்கு கேடானதை, பிறர்க்குச் செய்யாமல் விடு.

கே) கேள்வி முயல் (39)
கேட்கத் தக்க நல்ல விடயங்களை, கற்றவர் கூறுவனவற்றை கேட்பதற்கு முயற்சி செய்.

கை) கைவினை கரவேல் (40)
உனக்குத் தெரிந்த கைத்தொழிலை பிறர்க்கு ஒழிக்காதே

கொ) கொள்ளை விரும்பேல் (41)
பிறர் பொருளைக் கொள்ளையிட விரும்புதல் ஆகாது.

கோ) கோதாட்டு ஒழி (42)
குற்றத்திற்குரிய விளையாட்டுக்களில் ஈடுபடாதே

ச) சக்கர நெறி நில் (43)
அரசனது கட்டளைக்கு அமைந்து நட. (சக்கரம் - ஆணை)

சா) சான்றோர் இனத்திரு (44)
பண்பாலும், அறிவாலும் நிறைந்த பெரியோர்களின் கூட்டத்தில் நீயும் ஒருவனாக இரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சி) சித்திரம் பேசேல்** (45)

இட்டுக்கட்டி ஒருவரைப் புகழ்வதையோ, இகழ்வதையோ செய்யாதே.

**சீ) சீர்மை மறவேல்** (46)

புகழுக்கு ஏதுவாக இருக்கின்ற செயலை மறந்து நடத்தாலாகாது.

(சிறப்புத் தருகின்றவற்றைச் செய்வதை மறத்தல் கூடாது)

**சு) சுளிக்கச் சொல்லேல்** (47)

மனம் கசந்து முகம் சுண்டிப் போகுமாறான தீய கொடிய சொற்களைச் சொல்லாதே.

**சூ) சூது விரும்பேல்** (48)

சூதாடுதலில் விருப்பம் கொள்ளாதே

**செ) செய்வன திருந்தச் செய** (49)

எடுத்துக் கொண்ட செயலை திருத்தமாகச் செய்து முடிக்க வேண்டும்.

**சே) சேரியிடம் அறிந்து சேர்.** (50)

நன்மையைத் தரும் இடத்தை அறிந்து அங்கு சேர்.

**சை) சை எனத் திரியேல்** (51)

பிறர் 'சீ' என்று வெறுக்கும்படி நடக்காதே.

**சொ) சொல் சோர்வு படேல்** (52)

சொல்லிய சொல்லைச் சொன்னவாறு காப்பாற்ற வேண்டும்.

**சோ) சோம்பித் திரியேல்** (53)

எந்தவொரு முயற்சியும் இன்றி சோம்பலாக இராதே

**த) தனக்கோன் எனத் திரி** (54)

'இவன் தகுதியானவன்' என்று பாராட்டுமாறு வாழ்வாயாக!

**தா) தானமதை விரும்பு** (55)

பிறருக்கு உதவி செய்து வாழ்வதை விரும்புவாயாக!

**தி) திருமாலுக்கு அடிமை செய்.** (56)

மாயோனை (திருமாலை) வழிபட்டு உன் கடமையைச் செய்வாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீ) தீவினை அகற்று (57)

தீவினை உண்டாக்கும் செயல்களை நீக்கி விடு.

து) துன்பத்திற்கு இடம் கொடேல். (58)

உனக்குத் துன்பம் உண்டாக்கும் எதற்கும் நீயே இடம் தந்து விடாமல் எச்சரிக்கையாக இரு.

தூ) தூக்கி வினை செய் (59)

எச்செயலைச் செய்வதாயினும் ஆராய்ந்து பார்த்துச் செய்

தெ) தெய்வம் இகழேல் (60)

நீ வணங்கத்தக்க தெய்வத்தை இகழாமல் மதித்து நட.

தே) தேசத்தோடு ஒத்து வாழ் (61)

நாட்டு நடைமுறை அறிந்து அதற்குத் தக நீயும் ஒத்து வாழ்.

தை) தையல் சொல் கேளேல். (62)

கட்டொழுங்கு இல்லாத பெண்களின் சொல்லைக் கேட்டு அவர் வழியில் நடவாதே

தொ) தொன்மை மறவேல் (63)

பழமையான பண்பாடு, நாகரிகம் என்பவற்றை மறந்து விடாதே.

தோ) தோற்பன தொடரேல் (64)

தோல்வி எனத் தெரிந்த பின்பும் அச்செயலில் ஈடுபடாதே

ந) நன்மை கடைப்பிடி (65)

நல்லவை எவையோ அவற்றை விடாமல் பற்றிக் கொள்

நா) நாடு ஒப்பன செய். (66)

நாடு ஏற்கும் செயல்களையே செய்

நி) நிலையில் பிரியேல் (67)

நீ கொண்டிருந்த தகுதி நிலையில் இருந்து நீங்கிக் கீழே இறங்கி விடாதே.

நீ) நீர் விளையாடேல் (68)

வெள்ள நீருள் பாய்ந்து விளையாடாதே

நு) நுண்மை நுகரேல் (69)

இடை இடையே சிற்றுண்டி உண்ணுவதை ஒதுக்குவாயாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூ) நூல் பல கல் (70)

அறிவை வளர்க்கும் நூல்களை அதிகம் கற்க வேண்டும்.

நெ) நெற்பயிர் விளை (71)

உணவுப் பயிராகிய நெல்லை அதிகம் விளைவிக்க வேண்டும்.

நே) நேர்பட ஒழுகு. (72)

நீர் நேர்மையாவன் என்பதை நிலைப்படுத்துமாறு எப்பொழுதும் நடந்து கொள்

நை) நைவினை நணுகேல் (73)

வருந்தும்படியான செயலை செய்தலை நீ நெருங்காதே

நொ) நொய்ய உரையேல் (74)

சிறுமை தனமான சொற்களைச் சொல்லாதே

நோ) நோய்க்கு இடம் கொடேல் (75)

நோய் உண்டாவதற்குரிய வழிவகைகளை நீ உருவாக்காதே.

ப) பழிப்பன பகரேல் (76)

பிறர் பழிக்கும் இழி சொற்களைக் கூறுதல் ஆகாது

பா) பாம்போடு பழகேல் (77)

தீமை பயக்கும் (உயிர்களோடு) பாம்புடன் நெருக்கம் கொள்ளுதல் ஆகாது.

பி) பிழைபடச் சொல்லேல் (78)

எது பற்றிச் சொன்னாலும் பிழை உண்டாகுமாறு சொல்லாதே.

பீ) பீடு பெற நில் (79)

பெருமை பெறத்தக்க வழியில் நிலை பெற வாழ்வாயாக!

பு) புகழ்ந்தாரைப்போற்றி வாழ். (80)

போலியாக இல்லாமல் மெய்யாகப் பராட்டுவோரை நீயும் பாராட்டி வாழ்வாயாக.

பூ) பூமி திருத்தி உண். (81)

பூமியைப் பயன்படுத்தி பயிர் செய்து உண்ண வேண்டும்.

பெ) பெரியாரைத் துணைக் கொள். (82)

பெரியவர்கள் கூட்டுறவை எப்பொழுதும் தேடிக் கொள்வாயாக

பே) பேதமை அகற்று (83)

அறியாமையை அகற்றி அறிவைப் பெற்றுக் கொள்வாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ) பையலோடு இணங்கேல் (84)
அறிவிலிகளான சிறுமையாளரோடு சேர்ந்திராதே.

பொ) பொருள் தனைப் போற்றி வாழ். (85)
பொருளைத்தக்க வகையில் தேடி நன்றாக பாதுகாத்து வாழவேண்டும்.

போ) போர்த்தொழில் புரியேல் (86)
வீணான சண்டை சச்சரவுகளைச் செய்யாதே

ம) மனம் தடுமாறேல் (87)
மனத்தை ஒரு நிலையில் வைத்து உறுதியான வாழ்வு கொள்ளுதல் வேண்டும்.

மா) மாற்றானுக்கு இடம் கொடேல் (88)
பகையாளிக்கு இடம் கொடுக்கக் கூடாது.

மி) மிகைப்படச் சொல்லேல் (89)
உள்ளதை உள்ளபடி சொல்லாமல் உள்ளதற்கு மிகுதியாகச் சொல்லாதே

மீ) மீதூண் விரும்பேல் (90)
அளவுக்கு அதிகமாக உண்ண விரும்பேல்

மு) முனை முகத்து நில்லேல் (91)
போர் நடக்கும் இடத்தில் போய் வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்காதே

மூ) மூர்க்கரோடு இணங்கேல். (92)
சிந்தனை இல்லாமல் செயற்படும் முரடர்களோடு நீ சேர்ந்திராதே.

மெ) மெல்லினல்லாள் தோள் சேர் (93)
மென்மையளாகவும் இல்லாளாகவும் நன்மையே நாடிச் செய்பவளாகவும் இருப்பவளோடு பொருந்தி வாழ்.
(மெல் + இல் + நல் + ஆள்)

மே) மேன் மக்கள் சொல் கேள் (94)
செய்கரிய செய்யும் பெரியவர்கள் கூறும் சொற்களைக் கேட்டு நடப்பாயாக.

மை) மைவிழியார் மனை அகல் (95)
ஒழுக்கமற்ற மங்கையர் வீட்டை நெருங்காதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொ) மொழிவது அறமொழி (96)
சொல்வதை அறிந்து தெளிவாகச் சொல்

மோ) மோகத்தை முனி (97)
மிகுதியான ஆசையை அறவே ஒதுக்கி விடு.

வ) வல்லமை பேசேல் (98)
உனது வல்லமையை நீயே புகழாதே

வா) வாது முற்கூறேல் (99)
வலியச் சென்று எவரையும் விவாதத்திற்கு அழைக்காதே.

வி) வித்தை விரும்பு (100)
கல்வி முதலான கலைகளை விரும்பிக் கற்றுக் கொள்.

வீ) வீடு பெற நில் (101)
உலக வாழ்வின் பின்னர் பேரின்பம் பெறத்தக்க பேறு நிலை பெற வாழ்வாயாக.

உ) உத்தமனாய் இரு. (102)
மக்களுள் உயர்டவுடையவனாக வாழ்

ஊ) ஊருடன் கூடி வாழ் (103)
நீ தனித்து வாழ வேண்டும் என்று எண்ணாமல் ஊர் உறவுடன் கூடி வாழ்.

வெ) வெட்டெனப் பேசேல் (104)
உள்ளத்தை உடைக்கும்படியான சொல்லை சொல்லாதே.

வே) வேண்டி வினை செயேல் (105)
சதி செய்யாதே, அடுத்துக் கெடுக்காதே

வை) வைகறைத் துயில் எழு (106)
விடிகாலைப் பொழுது உறக்கம் நீங்கி எழுந்திருப்பாயாக!

ஒ) ஒன்னாரைத் தேறேல. (107)
பகைப்பட்டு நிற்பவரை நண்பரெனத் தெரிவு செய்யாதே

ஓ) ஓரம் ஓரம் சொல்லேல். (108)
ஒரு பக்கம் சார்ந்து நின்று நடுவு நிலைமை தவறிச் சொல்லாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொன்றை வேந்தன்

கொன்றை வேந்தன், கொன்றை மாலையை அணிந்த சிவபெருமானையே குறிக்கும். ஆத்தி, கொன்றை அழுத்தமுறக் தொடக்கப் பெற்ற இவை சிவ வணக்கங்களேயன்றி பிள்ளையார் வணக்கங்கள் ஆகா. இவற்றை விநாயக வணக்கமாக்க முயலுதல் கவிப்போக்கிற்கு இயைபுடையதாய் இல்லை. கொன்றை வேந்தன் பாடலும் பொருளும் அறிந்து வைத்தல் நன்று.

## கடவுள் வாழ்த்து

கொன்றை வேய்ந்த செல்வன் அடி இணை என்றும் ஏத்தித்
தொழுவோம் யாமே.

அ) அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். (1)
பெற்ற தாயும் தந்தையும் நம் கண் கண்ட கடவுள்களாவர்.

ஆ) ஆலயம் தொழுவது சாலவும் நன்று. (2)
கோவிலுக்குச் சென்று இறைவனை வழிபடுவது மிகவும் சிறந்தது.

இ) இல்லறம் அல்லது நல்லறம் அன்று. (3)
துணையோடு (இல்லாள்) சேர்ந்த குடும்ப வாழ்வே சிறந்தது. மற்ற வாழ்வு அற வாழ்வு ஆகாது.

ஈ) ஈயார் தேட்டைத் தீயார் கொள்வார். (4)
ஈகை செய்யாதவர்களின் பெருஞ் செல்வத்தைத் தீயவர்கள் கவர்ந்து செல்வர்.

உ) உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு (5)
உணவைக் குறைவாக அளவாக உண்பது பெண்களுக்கு அழகு தரும்.

ஊ) ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும். (6)
ஊரைப் பகைத்தால் அடியோடு அழிய நேரிடும்.

எ) எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும். (7)
கணிதமும் இலக்கியமும் நம் இரு கண்களைப் போன்றவை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ) ஏவா மக்கள் மூவா மருந்து. (8)
பிறர் கூறாமலே குறிப்புணர்ந்து செயற்படுவோர் தேவாமிர்த்திற்கு நிகர் ஆனவர்கள்.

ஐ) ஐயம் புகினும் செய்வன செய். (9)
பிச்சை எடுத்தாகிலும் நல்ல பணிகளைச் செய். (வறுமை வந்த வேளையிலும்)

ஒ) ஒருவனைப் பற்றி ஓரகத்து இரு. (10)
ஒருவனைக் கணவனாக தேர்ந்தெடுத்து அவனுடனேயே பெண் என்பவள் வாழ வேண்டும்.

ஓ) ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம். (11)
வேதியர்களுக்கு வேதம் ஓதுவதை விட ஒழுக்கம் இன்றியமையாதது.

ஔ) ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு. (12)
பொறாமை கொண்டு கதைத்தல் செல்வத்திற்கு அழிவைத் தரும். (ஔவியம் - பொறாமை)

ஃ) அஃகமும் காசும் சிக்கெனத் தேடு. (13)
சிக்கனமாக இருந்து தானியத்தையும் செல்வத்தையும் சேர்த்து வை.

க) கற்பு எனப்படுவது சொல் திறம்பாமை (14)
கற்பு என்று சொல்லப்படுவது கணவரின் சொற்படி வாழ்வது. (கணவன் காட்டும் நல்வழியில்நடப்பது)

கா) காவல்தானே பாவையர்க்கு அழகு. (15)
பெண்கள் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்வது அழகு.

கி) கிட்டாது ஆயின் வெட்டென மற. (16)
விரும்பியது கிடைக்கவில்லையெனில் அதனை உடனே மறந்து விடு.

கீ) கீழோர் ஆயினும் தாழஉரை. (17)
தன்னை விடத் தாழ்ந்தவர் ஆயினும் அவர்களிடம் பணிவாகப் பேசு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கு) குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை. (18)

மற்றவர்களிடம் குறைகளையே சொல்லிக் கொண்டிருந்தால் அவருக்கு உறவு என்பதே இருக்காது.

கூ) கூர் அம்பு ஆயினும் வீரியம் பேசேல் (19)

தன்னிடம் எத்தகைய கூரிய ஆயுதம் இருந்தாலும் கர்வமுடன் வீறாப்புப் பேசக்கூடாது.

கெ) கெடுவது செய்யின் விடுவது கருமம். (20)

தீமை செய்தவரையும் மன்னிப்பதே சிறந்த செயலாகும்.

கே) கேட்டில் உறுதி கூட்டும் உடைமை. (21)

வறுமையிலும் மனம் தளராமல் இருப்பது மேன்மை தரும்.

கை) கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி. (22)

கையிலுள்ள பொருட் செல்வத்தைவிட அறிவுச் செல்வமான கல்வி சிறந்த செல்வம் ஆகும்.

கொ) கொற்றவன் அறிதல் உற்ற இடத்து உதவி. (23)

மன்னன் அறிந்து கொள்ள வேண்டியது யாதெனில் மக்கள் துன்பப்படும் போதெல்லாம் அங்கு சென்று உடன் உதவவேண்டும்.

கோ) கோள் செவிக் குறளை காற்றுடன் நெருப்பு (24)

கோள் சொல்பவர்களின் செவிகளில் மேலும் கோள் மூட்டி விட்டால் காற்றுடன் நெருப்புப் பற்றி எரிவது போலாகும்.

கௌ)கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை. (25)

மற்றவர் மீது பழி சொல்லிக் கொண்டிருந்தால் அனைவரிடமும் பகை உண்டாகும்.

ச) சந்ததிக்கு அழகு வந்தி செய்யாமை (26)

குலம் தளைக்க மக்கட் செல்வம் அவசியம் தேவை.

சா) சான்றோர் என்கை ஈன்றோர்க்கு அழகு. (27)

அறிவில் சிறந்த பெரியோர் பண்பாளர்களென்று பாராட்டும்படி தம் பிள்ளைகளை வளர்க்க வேண்டும்.

சி) சிவத்தைப் பேணல் தவத்திற்கு அழகு. (28)

சிவபெருமானைத் துதித்து வழிபடுவதே தவயோகிகளுக்குச் சிறப்பைத் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீ) சீரைத் தேடின் ஏரைத் தேடு. (29)

சிறப்பாக வாழவேண்டுமென்றால் பயிர்த் தொழில் (உழவுத்தொழில்) செய்.

சு) சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல். (30)

இன்பத்திலும் துன்பத்திலும் துணையாக இருப்பதே உறவினர்களுக்கு சிறப்புத் தரும்.

சூ) சூதும் வாதும் வேதனை செய்யும். (31)

சூதாட்டமும் வெட்டிப்பேச்சும் துன்பத்தையே தரும்.

செ) செய்தவம் மறந்தால் கைதவம் ஆளும் (32)

செய்ய வேண்டிய நற்செயல்களை மறந்தால் அவனை அறியாமை ஆட்டிப்படைக்கும்

சே) சேமம் புகினும் யாமத்து உறங்கு. (33)

காவல் தொழில் செய்திட்டாலும் நள்ளிரவில் சிறுபொழுதாயினும் நித்திரை கொள்ள வேண்டும்.

சை) சை ஒத்து இருந்தால் ஐயம் இட்டு உண். (34)

உனக்கு ஈகை செய்வதற்கான வாய்ப்பு இருக்குமானால் மற்றவர்களுக்கு உணவு அளித்த பின் நீ உண்ண வேண்டும்.

சொ) சொக்கர் என்பவர் அத்தம் பெறுவர். (35)

தூய மனமும் ஈகையும் உடையவர் எல்லா நலமும் பெறுவர்.

சோ) சோம்பர் என்பவர் சோம்பித் திரிவர். (36)

உழைக்காத சோம்பேறிகள் வறுமையிலும் வாடித் துன்புற்று அலைவர்.

த) தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை. (37)

தந்தையின் அறிவுரைக்கு மேலான (ஞானம்) சாத்திரம் எதுவுமே இல்லை.

தா) தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை. (38)

பெற்ற அன்னையை விட வணங்கத்தக்க மேலான கோயில் எதுவும் இல்லை.

தி) திரை கடல் ஓடியும் திரவியம் தேடு. (39)

கடல் கடந்து சென்றேனும் பொருள் ஈட்ட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீ) தீராக் கோபம் போராய் முடியும். (40)
அடங்காத கோபம் கலகத்தில் கொண்டு போய் விடும்.

து) துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு (41)
கணவரின் துன்பம் கண்டு துடிக்காத மனைவி மடியில் கட்டிய நெருப்பு.

தூ) துற்றும் பெண்டிர் கூற்று எனத் தகும். (42)
பிறர் பற்றி அவதூறு பேசித் திரியும் பெண்கள் குடும்பத்திற்கு (இயமன்) கூற்றுவன் போன்றவர்கள்.

தெ) தெய்வம் சீறின் கைதவம் மாளும். (43)
கடவுளின் கோபத்திற்கு ஆளானால் தனது தவவலிமை அனைத்தும் அழிந்து போகும்.

தே) தேடாது அழிக்கின் பாடாய் முடியும் (44)
உழைத்து சம்பாதிக்காமல் இருப்பதையே செலவளித்து வந்தால் அது மீளாத் துன்பத்தையே தரும்.

தை) தையும் மாசியும் வையகத்து உறங்கு (வைஅகம்)(45)
தை, மாசி மாதக் குளிர் தெரியாமல் உறங்குவதற்கு வைக்கோல் கூரைப்போட்ட வீடே சிறந்தது.

தொ) தொழுது ஊண் சுவையின் உழுது ஊண் இனிது.(46)
பிறரை வணங்கி உண்டு வாழ்வதை விட நிலத்தில் உழுது பாடுபட்டு உண்பது மேன்மையாகும்.

தோ) தோழனோடும் ஏழைமை பேசேல். (47)
உற்ற நண்பனே ஆயினும் அவனிடத்திலும் தன் வறுமை நிலையைக் கூறக்கூடாது.

ந) நல்லிணக்கம் அல்லது அல்லல் படுத்தும். (48)
நல்லவர்கள் தொடர்பு இல்லையேல் துன்பம் ஏற்படும்.

நா) நாடு எங்கும் வாழக் கேடு ஒன்றும் இல்லை (49)
நாட்டில் எல்லோரும் செழிப்புடன் அமைதியாக வாழ்ந்தால் எந்தத் துன்பமும் இல்லை.

நி) நிறகக் கற்றல் சொல் திறம்பாமை (50)
கற்றவர்களுக்கு அழகு சொன்ன சொல் தவறாமல் நடந்து கொள்வதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ) **நீரகம் பொருந்திய ஊரகத்து இரு.** (51)

ஆறு, ஏரி, குளம் போன்ற நீர் நிலைகள் நிறைந்த ஊரில் வாழ்.

நு) **நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.** (52)

நாம் செய்யப்போகும் மிகச் சிறிய வேலையையும் நன்கு யோசித்து அதன் பின் தொடங்கு

நூ) **நூல் முறை தெரிந்து சீலத்து ஒழுகு.** (53)

அறநூல்களில் கூறப்படும் நீதிகளைத் தெரிந்து கொண்டு நல்வழியில் நீ ஒழுக்கமுடன் வாழ்.

நெ) **நெஞ்சை ஒழித்து ஒரு வஞ்சகம் இல்லை** (54)

உள்ளத்திற்கு தெரியாமல் ஒரு தீய செயலும் இல்லை.

நே) **நேரா நோன்பு சீர் ஆகாது.** (55)

மனநிறைவு இல்லாத நோன்பு (முயற்சி) சிறப்பு அளிக்காது

நை) **நைபவர் எனினும் நொய்ய உரையேல்** (56)

தாழ்ந்த நிலையில் இருப்பவரையும் அவர் மனம் நோக இழிவாகப் பேசக் கூடாது.

நொ) **நொய்யவர் என்பவர் வெய்யவர் ஆவர்.** (57)

எளிமையானவர் என்று இகழப்படுபவரும் ஒரு சமயத்தில் உயர்ந்தவராய் ஆவர்.

நோ) **நோன்பு என்பது கொன்று தின்னாமை** (58)

புலால் உணவு உண்ணாமல் இருப்பதே சிறந்த நோன்பு.

ப) **பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்.** (59)

ஒருவன் பாடுபட்டுப் பயிரிடப்பட்ட பயிரின் விளைச்சலைக் காணும் போது அவனது நற்பயன் (புண்ணியம்) தெரியும்.

பா) **பாலோடு ஆயினும் காலம் அறிந்து உண்.** (60)

பாலுடன் கலந்த உணவு என்றாலும் காலம் அறிந்து உண்ண வேண்டும்.

பி) **பிறன் மனை புகாமை அறன் எனத் தகும்.** (61)

மாற்றான் மனைவி மீது விருப்பம் கொண்டு அங்கு செல்லாமல் இருப்பதே சிறந்த ஒழுக்க நெறி ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீ) பீரம் பேணி பாரம் தாங்கும் (62)
தாய்ப்பால் அருந்தி வளர்ந்த குழந்தை வலிமை மிக்கதாய் இருக்கும்.

பு) புலையும் கொலையும் களவும் தவிர் (63)
புலால் உண்ணல், உயிர்க்கொலை புரிதல், திருடுதல் ஆகிய கொடிய செயல்களில் ஈடுபடாதே.

பூ) பூரியோர்க்கு இல்லை சீரிய ஒழுக்கம். (64)
பண்பு இல்லாதவர்களுக்கு சிறந்த ஒழுக்கம் உண்டாவதில்லை. (பூரியோர் - கீழ்மைக்குணம் உடையோர்)

பெ) பெற்றோர்க்கு இல்லை சுற்றமும் சினமும். (65
ஞானம் கைவரப் பெற்றவர்களுக்கு உறவு, கோபம் எதுவும் இருப்பதில்லை.

பே) பேதமை என்பது மாதர்க்கு அணிகலம். (66)
எல்லாம் அறிந்திருந்தாலும் ஒன்றும் அறியாதவள் போல் அடக்கமாய் இருத்தலே பெண்களுக்கு அணிகலம் போன்றதாகும்.

பை) பையச் சென்றால் வையம் தாங்கும். (67)
எக்காரியத்திலும் நிதானத்தைக் கடைப்பிடித்தால் உலகினர் ஏற்றுக் கொள்வர், வெற்றி கிடைக்கும்.

பொ) பொல்லாங்கு என்பவை எல்லாம் தவிர் (68)
தீய செயல்கள் என்று கருதப்படும் எல்லாவற்றையும் விட்டு விடு.

போ) போனகம் என்பது தான் உழந்து உண்டல் (69)
ஒருவன் தானே உழைத்து சம்பாதித்து உண்பதே நல்ல உணவாகும்.

ம) மருந்தே ஆயினும் விருந்தோடு உண். (70)
கிடைத்தற்கரிய தேவாமிர்தம் ஆனாலும் விருந்தினர்களோடு பகிர்ந்து உண்பாயாக.

மா) மாரி அல்லது காரியம் இல்லை. (71)
உரிய காலத்தில் மழை இல்லாமல் போனால் உலகில் வேறு எந்தக் காரியமும் நடைபெறாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மி) மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை.** (72)
மின்னல் வானில் தோன்றுவது மழை வருவதற்கு அறிகுறி.

**மீ) மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது.** (73)
மாலுமி இல்லாமல் பாய்மரக்கப்பல் இயங்காது

**மு) முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.** (74)
நாம் முன்பொழுதில் ஏதாவது காரியம் செய்தால் பிற்பொழுது அது நமக்கே வந்து சேரும்.

**மூ) மூத்தோர் சொல்லும் வார்த்தை அமிர்தம்** (75)
முதியவர்கள் (அறிவில் சிறந்த பெரியோர்) சொல்லும் அறிவுரைகள், நீதிகள் தேவாமிர்தம் போன்று மேலானவை.

**மெ) மெத்ததையில் படுத்தல் நித்திரைக்கு அழகு.** (76)
மென்மையான இலவம் பஞ்சு அமத்தையில் படுத்து உறங்குவது தான் தூக்கத்திற்கு நல்லது.

**மே) மேழிச் செல்வம் கோழை படாது.** (77)
உழுது பயிரிட்டுச் சம்பாதிக்கும் செல்வம் குறைவு அடையாது.

**மை) மை விழியார் தம் மனை அகன்று ஒழுகு.** (78)
மயக்கும் மங்கையர் (ஒழுக்க நெறி இல்லாத பெண்கள்)களின் இல்லம் செல்வதை தவிர்த்து விடு.

**மொ) மொழிவது மறுக்கின் அழிவது கருமம்.** (79)
ஆன்றோர் சொல்லைக் கேட்டு நடக்கவில்லை எனில் அழிவு ஏற்படும்.

**மோ) மோனம் என்பது ஞான வரம்பு** (80)
மௌனம் காப்பது என்பது மெய்ஞ்ஞான அறிவை அடைய வழியாகும்.

**வ) வளவன் ஆயினும் அளவு அறிந்து அளித்துண்** (81)
வளம் மிகுந்த செல்வம் உடையவன் என்றாலும் வரவுக்குள் செலவை அடக்க வேண்டும்.

**வா) வானம் சுருங்கில் தானம் சுருங்கும்.** (82)
மழை பெய்யவில்லை ஆனால் தானம் கொடுக்கும் அறச்செயல்கள் குறைந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி) விருந்து இல்லோர்க்கு இல்லை பொருந்திய ஒழுக்கம் (83)
விருந்தினரை உபசரிக்கு தன்மை இல்லாதவர் இல்லத்திற்குரிய தன்மை அற்றவர். இல்லறத் தன்மை நிறைவு பெறாது.

வீ) வீரன் கேண்மை கூர் அம்பு ஆகும். (84)
வல்லவனின் நட்பு உடையவனுக்கு தன் கையில் கூர்மையான அம்பு இருப்பது போல மிகவும் பாதுகாப்பானது.

உ) உரவோர் என்கை இரவாது இருத்தல். (85)
எவரிடமும் சென்று யாசித்து வாழாமல் இருப்பவனே வல்லவன் ஆவான்.

ஊ) ஊக்கமுடைமை ஆக்கத்திற்கு அழகு. (86)
மன உறுதியோடு ஒருவன் ஊக்கம் உடையவனாக இருந்தால் முன்னேற்றம் அடைவதற்குச் சிறப்பு ஆகும்.

வெ) வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை (87)
தூய உள்ளம் உடையவர்க்கு வஞ்சனை எண்ணங்கள் உண்டாகாது.

வே) வேந்தன் சீறின் ஆம் துணை இல்லை. (88)
அரசனின் கோபத்திற்கு ஆளானவருக்கு யாரும் துணையாக மாட்டார்கள்.

ஒ) ஒத்த இடத்தில் நித்திரை கொள். (89)
மேடு பள்ளமற்ற இடத்தில் (சமதரையில்) நித்திரை கொள்ள வேண்டும்.

ஓ) ஓதாதார்க்கு இல்லை உணர்வொடும் ஒழுக்கம். (90
நல்ல நூல்களைப் படிக்காதவர்களுக்கு அறிவோடு கூடிய நினைவாற்றலும் நல்ல நடத்தையும் இருக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவைக் கதைகள்

சங்ககால ஔவையும் நீதிநூல் ஔவையும் பெற்ற பெரும் புகழால் தமிழர்களிடத்தில் ஔவை பற்றிய சுவையான கதைகள் பல வழங்கலாயின. வரப்புயர என மன்னனை வாழ்த்தியது. முருகப் பெருமானிடம் சுட்டபழம், சுடாத பழம் கேட்டது, நெல்லிக்கனி பெற்றது எனவும் பல்வேறு நிகழ்ச்சிப் பின்னணியில் பாடியன எனவும், மக்கள் வாய்மொழியில் வழங்கிய கதைகள் எண்ணற்றவையாகும். இக்கதைகள் பற்றிய மூல உண்மையானதென அறிதல் கடினமாகும். எனினும் சுவை மிகுந்த கதைகள் என்பதால் அனைவர் உள்ளத்தையும் ஈர்த்து பசுமரத்தாணிபோற் பதிந்து அறிவையும் அனுபவத்தையும் பெருக்கி வருகின்றன. ஈண்டு அவற்றுள் சிலவற்றைத் தருகின்றோம்.

## ஔவைக் கதைகள்

### *01. வரப்புயர:*

குலோத்துங்கசோழன் முடிசூடிய போது ஔவை "வரப்புயர...." என்று வாழ்த்தி அமர்ந்தார். அவையோர் ஒன்றும் விளங்காமல் விழிக்கவே ஔவையார் தொடர்ந்தும் தம் வாழ்த்தைக் கூறி முடித்தாராம்.

*"வரப்புயர நீர் உயரும்*
*நீர் உயர நெல்லுயரும்*
*நெல்லுயரக் குடியுயரும்*
*குடியுயரக் கோலுயரும்*
*கோலுயரக் கோனுயர்வான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழவுத் தொழிலின் இன்றியமையாமையை ஆள்வோர்க்கு எவ்வளவு நுட்பமாக உணர்த்துகிறார். குழந்தைகள் மனதில் இது பதிந்தால் நாடு உயரும் என்பதற்கு ஐயம் உண்டோ?

## *02. அங்கவை, சங்கவை கதை :*

இவ்விருவரும் பாரியின் மகளிர் (மக்கள்) என்றும், இவர்களை மணம் முடிப்பதற்காக ஔவை அழைத்து சென்று மலையரசனுக்கு மணம் முடித்தார் என்றும் கூறப்படுபது கற்பனையே ஆகும். பாரி மகளிரைக் கபிலர் அழைத்துச் சென்று மணம் முடிக்க முயன்றதாகப் புறநானூறு கூறுகிறது.

இடைக்காலத்தில் பெண்ணையாற்றங்கரையில் திருக்கோவலூர் அருகே "பாரிகாலன்" என்ற மன்னனின் பெண்களாக பிறந்து வளர்ந்த இருவரே அங்கவை, சங்கவை என்றும், இவர்கள் இருவரும் தந்தையை இழந்து பெண்ணை ஆற்றங்கரையில் குடிசை ஒன்றில் வாழ்ந்தனர். இவர்களுக்கு ஔவை மணம் செய்து வைத்தார்.

ஒரு நாள் ஔவை மழையில் நனைந்து குளிரில் ஒடுங்கி குடிசைக்கு வந்தார். இவருக்கு பாரியின் பிள்ளைகள் தங்கள் நீலச் சிற்றாடையை கொடுத்தனர். கேழ்வரகு சோறும் கீரைக்கறியும் சமைத்துப் பரிமாறினர். இதனால் மனம் மகிழ்ந்து அவர்கள் தந்த ஆடையையும் உணவையும் சிறப்பித்துப் பாடினர்.

*"பாரி பறித்த பறியும் பழையனூர்க்*
*காரி கொடுத்த கனைக் கோட்டும் சேரமான்*
*வாராய் என அழைத்த வாய்மையையும் இவைமூன்றும்*
*நீலச் சிற்றாடைக்கு நேர்"*

மன்னர்கள் செய்த உபசாரங்கள் எல்லாம் இந்த நீலச் சிற்றாடைக்கு நிகர் என்றார் ஔவையார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03. கம்பரும் ஔவையாரும் :

ஒருமுறை வயலோரமாகப் போய்க் கொண்டிருந்த ஔவையாரைப் பார்த்து கம்பர் குறும்பாக "ஒரு காயில் நாயிலைப் பந்தலடி" என்றார். ஔவை விடை தெரியாமல் வெட்கப்படட்டும் என்றே கம்பர் "அடி" போட்டு விவாதத்தை தொடங்கினார். ஔவையோ கணமும் தாமதியாமல் "ஆரையடா சொன்னாய் அது" என்றார். ஆரைக் கீரைதான் ஒரு தண்டில் நான்கே இலைகளுடன் நீர் நிலை ஓரங்களில் நிற்கும். "ஆரையடா" என்பது இருபெருள் தருதல் காணலாம். ஔவை வெறுமனே அதைச் சொல்லி விடவில்லை. ஒரு வசைப்பாட்டுப் பாடியே சொன்னார்.

*"எட்டே கால் இலட்சணமே எமனேறும் பரியே*
*மட்டில் பெரியம்மை வாகனமே – முட்டமேற்*
*கூரையில்லா வீடே குலராமன் தூதுவனே*
*ஆரையடா சொன்னாய் அது*

அவலட்சணமே, எருமையே, கழுதையே, குட்டிச்சுவரே, குரங்கே என்கிறார் இதைவிட வேறு என்ன வசை வேண்டும்?

ஆடம்பரம் செய்பவர்களையே உலகம் மதிக்கும். எளிய பழக்கம், தோற்றமுடையவர்களை யாரும் கண்டு கொள்வதில்லை. கம்பர் பொன்னுக்குப் பாடுபவர் ஆதலால் அவரைச் சிலர் மிகப்பெரிய கவி எனக் கொண்டாடினர். அதைப் பார்த்த ஔவையார் கவிதை வேம்பாக நஞ்சாக இருந்தாலும் பட்டொளி வீசும் பாவலர்களையே கொண்டாடும் உலகை நையாண்டி செய்து ஒரு பாடல் பாடினார்.

*"விரகர் இருவர் புகழ்ந்திடவே வேண்டும்*
*விரல் நிறைய மோதிரங்கள் வேண்டும் – அரையதனில்*
*பஞ்சேனும் பட்டேனும் வேண்டும் – அவர் கவிதை*
*நஞ்சேனும் வேம்பேனும் நன்று"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04. புல்லறிவாளர்க்கு (அற்பற்கு) உதவுதல் தீமையில் முடியும்:

காட்டை அடுத்துள்ள ஊர் எல்லையில் ஒரு வேங்கைப் புலி படுத்துக் கிடக்கிறது. ஊருக்குள் வந்து விடுமோவென்ற பயத்தால் ஊரார் கத்தியும் கம்புகளுடன் அதை விரட்டச் செல்கின்றனர். ஆனால் அது உணர்ச்சியற்று மயங்கிக் கிடக்கின்றது. அதன் காலிலிருந்து குருதி கசிந்து கிடக்கிறது. அவர்களுடன் சென்றவர்களில் ஒருவர் நஞ்சுக்கடி (விசக்கடி) மருத்துவர் இரக்கம் கொண்டு அதற்கு மருத்துவம் செய்யவிழைகின்றார். ஊர் மக்கள் தடுத்தாலும் அவர் கேட்கவில்லை. ஏதோ ஒரு காட்டிலியைப் பிடுங்கி பிழிந்து சாற்றை அதன் காலில் விடுகின்றார். ஊர் மக்கள் பயத்தின் மிகுதியால் தூரவிலகி ஒழிந்து கொள்கின்றனர். ஆனால் மருத்துவர் அங்கேயே அதன் பக்கத்தில் நிற்கின்றார். தனக்கு அது எத்தீங்கும் செய்யாதென்ற நோக்கில் சிறிது நேரத்தில் புலி அசைந்து எழுந்து நிற்க முயலுகின்றது. ஊரார் மருத்துவரை அழைக்கின்றனர். ஆனால் அவர் அசையவில்லை. புலிமயக்கம் தெளிந்து எழுந்தது. அவர் மீது பாய்ந்து அவரை குதறி கொன்றது. கொலை வெறி கொண்டு கொன்று தின்றும் விலங்கிற்கு புரியுமா மாந்தநேயப் பண்பாடுகள். இப்புலியைப் போன்றே நம்மிடையே அற்பர்கள் இருக்கின்றார்கள் என்பதை விளக்கவே ஔவையார

"*வேங்கை வரிப்புலி நோய் தீர்த்த விடகாரி*

*ஆங்கதனுக்(கு) ஆகாரம் ஆனாற்போல் – பாங்கறியாப்*

*புல்லறிவாளர்களுக்குச் செய்த உபகாரம்*

*கல்லின் மேல் இட்ட கலம்*" - என்பார் மூதுரையில்.

அத்தோடு இன்னொரு உவமையையும் கூறுகின்றார் அதாவது பண்பாடற்ற நன்றியுணர்வில்லாத அற்பர்களுக்கு (கீழானவர்) செய்த உதவி கற்பாறைகள் நீரின் கீழ் இருப்பதை அறியாமல் ஆற்றிலே ஓடிவரும் ஓடம் அப்பாறையில் மோதி சுக்கு நூறாவதைப் போல் ஆகும் என்கிறார். (ஓடம் - கலம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05. அன்பில்லாள் இட்ட அமுது :

ஔவைக் கதைகளுள் இது ஒரு புகழ் பெற்ற கதை. ஒருமுறை ஔவையார் நீண்டவழி நடந்தமையால் வருத்தத்துடன் ஒரு குடியானவன் வீட்டுத் திண்ணையில் போய் அமர்ந்தார். அவருக்குக் கடும் பசி. அக்குடியானவன் மிகவும் சாது. தனது இல்லாளுக்கு அஞ்சி நடுங்குகின்றவன் அவன் மனைவியோ கொடிய குணமுடையவள். எச்சில் கையால் காகத்தை விரட்டாதவள்.

அதே சமயம் குடியானவன் வீட்டை விட்டு வெளியே போவதைப் பார்த்த ஔவையார் பசிக்கு சிறிது கூழ் கிடைக்குமா? எனக் கேட்டார். அவனுக்கு கிழவி மீது இரக்கம் உண்டாயிற்று அவன் உள்ளே சென்று தன் மனைவியின் அருகமர்ந்து இன்சொல் பேசி, தலைவாரிக் கொண்டிருந்த அவளுக்கு பேன் பார்த்து ஈருருவி அச்சத்துடன் கூடிய தயக்கத்துடன் "ஒரு பழுத்த கிழவி பசியோடு வந்திருக்கிறாள்" என்றான். என்றது தான் தாமதம் "உன்பவுசுக்கு விருந்து தான் ஒரு கேடா" என்று கூவிப் பேய் போல் பழைய முறத்தால் (சுளகு) அவனை சாடி ஓட ஓட விரட்டினாள். இதனைப் பார்த்து அவன் மீது இரக்கம் கொண்ட ஔவை.

*"இருந்து முகம் திருத்தி ஈரோடு பேன் வாங்கி*
*விருந்து வந்தென்று விளம்ப – வருந்தி மிக*
*ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தால்*
*சாடினாள் ஓடோடித்தான்"*

என்று பாடினாள். பாடலைக் கேட்ட அந்த அடங்காப்பிடாரியும் சற்றே அயர்ந்து போனாள். அதனால் ஒருவாறு உடன்பட்டு அன்னமிட அழைத்தாள்.

*"காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே*
*மாணொக்க வாய்திறக்க மாட்டாதே வீணுக்கேன்*
*என்பெல்லாம் பற்றி எரிகின்ற தையையோ*
*அன்பில்லாள் இட்ட அமுது"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப்பாடி அவ்வுணவை உண்ணத் தயங்கினாள் ஔவை. அக்குடியானவனைப் பார்த்து இவ்வாறு வாழ்வதை விட நெருப்பிலே வீழலாம். துறவு மேற்கொள்ளலாம் என்று இடித்துரைத்தாள்.

*"சண்டாளி சூர்ப்பனகை தாடகை போல் வடிவு*
*கொண்டாளைப் பெண்டென்று கொண்டாயே – தொண்டா*
*செருப்படிதான் செல்லா உன் செல்வமென்ன செல்வம்*
*நெருப்பிலே வீழ்ந்திடுதல் நேர்"*

*"பார்த்தாவுக் கேற்ற பதிவிரதை உண்டானால்*
*எத்தாலும் கூடியிருக்கலாம் – சற்றேனும்*
*ஏறுமாறாக இருப்பாளே யாமாயின்*
*கூறாமல் சந்நியாசம் கொள்"*

அவனை இவ்வாறு சன்னியாசியாகிப் போ என்று திட்டினாள். இன்றும் குடும்பங்களில் மனவேறுபாடுகள் வரும் போது "கூறாமல் சந்நியாசம் கொள்வது" பற்றி நகைப்பாடல்கள் (உரையாடல்கள்) இடம் பெறக் காணலாம்.

## *06. நான்கு கோடிப் பாடல்கள்:*

ஔவையின் தனிப்பாடலக்களில் மிக்க புகழ்பெற்றவை அவர் பாடிய நான்கு கோடிப் பாடல்கள். ஒரு முறை சோழ மன்னன் தன் அவையைக் கூட்டினான். அந்த அவையிலுள்ளவர்களிடம் "விடிவதற்கிடையில் நான்கு கோடிப் பாடல்கள் பாடி வரவேண்டும்" என்று கட்டளையிட்டான. புலவர்கள் என்ன செய்வது என்று அறியாது மயங்கி இரவெல்லாம் உறங்காமல் இருந்தனர். மறுநாள் காலையில் அங்கு வந்த ஔவையார் புலவர்களைத் தேற்றி அரண்மனைக்கு அழைத்துச் சென்றார். மன்னன் முன்னிலையில் "நான்கு பொருள் பொதிந்த நான்கு கோடிப் பாடல்களைப்" பாடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- "மதியாதார் முற்றம் மதித்தொருக்கால் சென்று மிதியாமை கோடிபெறும்"
- "உண்ணர் உண்ணர் என்று உபசரியார் தம் மனையில் உண்ணாமை கோடி பெறும்"
- "கோடான கோடி கொடுப்பினும் தன்னுடைய நாக் கோடாமை கோடி பெறும்"
- "கோடி கொடுத்தும் குடிப்பிறப்பார தம்மோடு கூடுதல் கோடி பெறும்"

இச்சாதுரியம் மிக்கப் பாடல்களில் கோடிப் பொருள் குறைவற நிரம்பியிருப்பதைக் கண்ட மன்னன் ஔவையைப் பாராட்டி பரிசளித்ததோடு புலவர்கள் அனைவருக்கும் பரிசளித்தும் மகிழ்ந்தார்.

## *07. இல்லை என்பது இனிது.*

கொடை வேண்டி வருபவர்களுக்கு 'நாளை' என்பதிலும் 'பிறகு வருக' என்பதிலும் "இல்லை" என்பதே இனிது. "வாதக் கோன் நாளையென்றான் மற்றைக் கோன் பின்னையென்றான்
ஏதக்கோன் யாதேனும் இல்லையென்றான் - ஓதக்கோன்
வாதக்கோன் சொல்வதிலும் மற்றைக் கோன் சொல்வதிலும் ஏதக்கோன் சொல்லே இனிது". இதற்கு தத்துவப் பொருள் உரைப்பவர்களும் உண்டு. வாதநாடி அடங்கினால் ஒரு நாளிலும் பித்தநாடி அடங்கினால் ஒரு நாளிகையிலும் சிலோத்தும நாடி அடங்கினால் ஒரு கணப்பொழுதிலும் உயிர் நீங்கும் என விளக்குவர்.

## *08. கோரைக்கால் ஆழ்வான கொடை தேர்ந்த விதம்.*

கோரைக் கால் என்னும் ஊரில் இருந்த ஆழ்வான் என்பவன் மிகவும் கஞ்சன், உலோபி எதுவும் ஈயாத அவன், வாயால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியளவில் பேசுவான். கரி (யானை) என்பான் அது பரி (குதிரை) ஆகும். பிறகு அது எருமையாகி காளை மாடாகி ஒரு முழுத்துணியாகத் திரி திரியாய் சுருங்கி தேரையின் கால் போலானது, என் காலும் தேய்ந்து போனது என்றார் ஔவையார்.

*"கரியாய் பரியாகிக் கார் எருமை தானாய்*
*எருதாய் முழப் புடவையாகித் திரிதிரியாய்*
*தேரைக்கால் பெற்று மிகத் தேய்ந்து கால் ஓய்ந்ததே*
*கோரைக்கால் ஆழ்வான் கொடை*

## 09. *பெரிய திருமண விருந்து :*

பொதுவாகத் திருமண விருந்துகளில் சோறு உண்பது கடினமான செயலாகும். ஒரே சமயத்தில் பலரும் முண்டியடித்து ஓடி நெருக்குப்படுவது வேடிக்கையாக இருக்கும். அதுவும் செல்வந்தர் வீட்டுத் திருமணம் என்றால் பலருக்கு உணவு கிடைப்பது அரிதாகும்.

ஔவை ஒருமுறை பாண்டிய மன்னனது திருமணத்திற்குப் போய் நெருங்குண்டு சோறு உண்ணாமல் பட்டினி கிடந்து வந்ததை விளக்குகிறது இந்தப் பாடல்.

*"வண்டமிழைத் தேர்ந்த வழுதி திருமணத்து*
*உண்ட பெருக்கம் உரைக்கக் கேள் – அண்டி*
*நெருக்குண்டேன் தள்ளுண்டேன் நீண்ட பசியினாலே*
*சுருக்குண்டேன் சோறுண்டிலேன்"*

உண்டு என்ற துணைவினை கொண்டு ஔவை நகைச்சுவையாகப் பாடியுள்ளார். நெருக்குண்டும் தள்ளுண்டும் சுருக்குண்டும் சோறுண்டிலா அவலம் சிரிப்பை விளைவிக்கின்றனவல்லவா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. மூவகைச் சினததர்

கோபத்தை அடியோடு ஒழித்து விடமுடியாதென்றாலும் அதை தலைதூக்க விடாமல் அடக்கிக் கொள்ள வேண்டும். இக்கருத்தையே ஆத்திசூடியில் **"ஆறுவது சினம்"** என்கிறார் ஔவை.

பிளந்து போன கற்களை மீண்டும் ஒட்டவைக்க முடியாதது போல் ஒருவர் இன்னொருவர் மீது கொண்ட கோபத்தை மறந்து விடாமல் பழிவாங்கும் உணரர்வோடு பகையினை வளர்த்துப் பெருக்கிக் கொள்கின்றனர். இவர்கள் முதல் வகுப்பினர் (கீழ்மக்கள்). பிளவுபட்டிருக்கும் பொன்துண்டங்களை உருக்கி ஒட்ட வைக்கலாம் அதே போல் கோபங் கொண்ட இருவரை பிறரொருவர் தலையிட்டு சமாதானப்படுத்திச் சேர்த்து வைக்கலாம். இவர்கள் இடைப்பட்ட நிலையினர். ஆனால் உயர்ந்த பண்பாட்டாளர்கள் கோபித்துக் கொண்டாலும் அடுத்த கணமே அதை மறந்து விடுவார்கள். இது எப்படியென்றால் அம்பெய்யும் போது நீரைக் கிழித்துக் கொண்டு முன் செல்ல அதன் பின்னாக பிரிக்கப்பட்ட நீர் ஒன்று சேர்வதை போலாகுமென்று உவமையோடு கூறுகின்றார் ஔவைபிராட்டியார்.

*கற்பிளவோடு ஒப்பர் கயவர் கடுஞ்சினத்துப்*
*பொற்பிளவோடு ஒப்பாரும் போல்வாரே விற்பிடித்து*
*நீர் கழிய எய்த வடுப் போல மாறுமே*
*சீரொழுகு சான்றோர் சினம். (மூதுரை)*

## 11. திருக்குறள் மதிப்பீடு

திருவள்ளுவர் மாலையில் புலவர் பலர் பெயரால் வெண்பா யாப்பில் மிகச் சிறந்த குறள் திறனாய்வுப் பாடல்கள் காணப்படுகின்றன. **"இடைக்காடனார்"** மட்டும் குறள் வெண்பாவிலேயே ஒரு சொல் மட்டும் மாற்றித் தமது பாராட்டு உரையை வழங்கினார்.

"கடுகை துளைத்து ஏழ்கடலைப் புகட்டி
குறுகத் தறித்த குறள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. ஔவையின் உலகப் புகழ்

அமெரிக்க நாட்டின் மெக்சிக்கோவில் பிரமாண்ட அரசுப் பொது உயர் நிலைப் பள்ளியில் வானியல் துறை ஒன்று உள்ளது. அத்துறை சார்ந்த உலகளாவிய கல்விக்கு கணினி வழி படிக்க இணையத்திலும் தக்க ஏற்பாடுகள் உள்ளன. அப்பள்ளியின் குறிக்கோள் வாசகமாக ஔவையின்

"கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு" என்ற தொடர் தேர்ந்தெடுக்கப் பெற்று விளங்குகின்றது. இதன் ஆங்கில ஆக்கம் அங்கு இவ்வாறு உள்ளது.

**'What we have learnt is like a hand ful of earth.**

**What we have yet to be learnt is like the whole world" - Avvaiyar.**

அறிவியல் கண்காட்சி தொடர்பான வேறு சில இடங்களிலும் ஔவையின் இவ்வாசகம் அமெரிக்காவில் காணப்படுகின்றது.

## 13. ஔவையும் முருகக்கடவுளும்

ஒரு நாள் ஔவை காட்டு வழியே போய்க் கொண்டிருந்தார். அப்பொது முருகக் கடவுள், ஔவைப் பெருமாட்டியுடன் சிறுபிள்ளையாய்ச், சிறுபோது விளையாடவும், ஔவையின் பெருமையை உலகறிய செய்யவும் வேண்டி ஒரு மாடு மேய்ப்பானைப் போல வந்து, வழியிடை நின்ற நாவல் மரத்திலேறியிருந்தார். ஔவை அருகே வந்ததும், அப்பையனைப் பார்த்து சில நாவல்ப்பழங்களை உதிர்த்து போடுமாறு வேண்டினார். அவன் பாட்டி! சுட்டபழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என்று கேட்டான். பாட்டி அவன் சொல்வதறியாது திகைத்தாள். பிறகு பழங்கள் உதிரச் செய்தான். பாட்டி கனிந்த பழங்களை எடுத்து, அவற்றில் ஒட்டியிருந்த மண்ணைப் போக்கித் தின்பதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயால் ஊதினாள் இதைக் கண்ட பையன், 'பாட்டி! சுடாத பழம் கேட்ட நீ சுட்டப்பழத்தை தின்னப் போகிறாயே. சுட்டுவிடப்போகிறது வாயால் நன்றாக ஊதிவிட்டுச் சாப்பிடு!" என்று கிண்டல் செய்தான். பிறகுதான் ஔவைக்கே அவன் கேட்டதன் பொருள் விளங்கிற்று. உடனே தம் அறியாமைக்கு இரங்கி அவர் ஒரு பாட்டுப் பாடினார்.

"கருங்காலி கட்டைக்கு நாணாக்கோ டாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும் - பெருங்கானில்
காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான் தோற்றது
ஈரிரவும் துஞ்சாதென கண்!"

இதைக் கேட்ட முருகப் பெருமான் தன் வடிவிற் காட்சியளித்து, ஔவைக்கு அருள் செய்ததுடன், "ஔவையே! உலகம் நினைவிற் கொள்ளும்படியான சில நீதிகளைப் பாடியருளுங்கள்" என வேண்டினார்.

ஔவை சிறிது தயங்கி நின்றாள். முருகப் பெருமான் குறிப்பறிந்து "ஔவையே! உலகில் கொடியது எது? இனியது எது? பெரியது எது? அரியது எது? சொல்லுங்கள்" என்று விளக்கமாகக் கேட்டார். ஔவையும் நான்கு பாடல் பாடி நான்கு கருத்துக்களையும் உலகோர் மனங்கொள்ளுமாறு நன்கு விளக்கினார்.

**கொடியது.**

கொடியது கேட்கின் நெடியவெவ் வேலோய்!
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினும் கொடிது இளமையில் வறுமை
அதனினும் கொடிது ஆற்றொணாக் கொடுநோய்
அதனினும் கொடிது அன்பிலாப் பெண்டிர்
அதனினும் கொடிது
இன்புற அவர்கையில் உண்பது தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியது.

இனியது கேட்கின் தனிநெடு வேலோய்
இனிது இனிது ஏகாந்தம் இனிது
அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்
அதனினும் இனிது அறிவினர்ச் சேர்தல்
அதனினும் இனிது அறிவுள்ளோரை
கனவிலும் நனவிலும் காண்பது தானே!

பெரியது.

பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்!
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்
கரியமாலோ அலைகடல் துயின்றோன்
அலைகடல் குறுமுனி அங்கையில் அடக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியில் சிறுமண்
புவியோ அரவினுக்கு ஒருதலைப் பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறையவர் பாகத்து ஒடுக்கம்
இறைவரோ தொண்டருள்ளத்து ஒடுக்கம்
தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே!

அரியது.

அரியது கேட்கின் வரிவடி வேலோய்!
அரிதரிது மானிட ராதல் அரிது
மானிடராயினும் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயத்தல் காலையும்
தானமும் தவமும் தாம்செயல் அரிது
தானமும் தவமும் தாம் செய்வராயின்
வானவர் நாடு வழிதிறந்திடுமே!”

*14) தகுதியில்லாதன பாடமறுத்தது.வீரமும், ஈரமும் இல்லா ஒருவன் தன்னைப் புகழ்ந்து பாடு மாறுகேட்ட பொழுது அவனை இகழ்ந்து ஔவை பாடியது.*

*“பூவர் கோவையும் பூவிளங் கோவையும்
பாடிய எந்தம் பனுவல் வாயால்
என்னையும் பாடுக என்றனை
எங்ஙனம் பாடுதும்யாம்
களிறுபடு செங்களம் கண்ணிற் காணீர்
வெளிறுபடு நல்யாழ் விருப்பமாய்க் கேளீர்
இலவ வாய்ச்சியர் இளமுலை புல்லீர்
புலவர் வாய்ச்சொல் புலம்பலுக்கு இரங்கலீர்
ஊடீர் உண்ணீர் கோடீர் கொள்ளீர்
ஓவாக் கானகத்து உயர்மரந்தன்னில்
தாவாக் கனியில் தோன்றினீரே”*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்ககால ஔவையார்

காலம் தோறும் ஔவையார் புகழ் விளங்கத் தொடங்கி வைத்தவர் சங்ககால ஔவையாரே ஆவார். சோழர் காலத்தில் வாழ்ந்த நீதிநூல் ஔவை ஒப்பற்ற பெரும்புகழுக்கு உரியவராக விளங்கினாரெனினும் அப்பெரும் புகழைத் தோற்றிவித்தவர் சங்ககால ஔவையே என்பது மிகையன்று. அதியமான் நெடுமான் அஞ்சி சிறுநில மன்னரேயாயினும் அவனிடம் நட்புப் பூண்டு அவனது அவைக்களப் புலவராய் இறுதிவரை திகழ்ந்தார். அவன் சேரவேந்தன். இரும்பொறையுடன் பொருது நின்ற காலத்திலும் அவர் தம் தலைவனுக்காகவே வீரம் செறிந்த பாடல்களைப் பாடினார். மூவேந்தரும் பல ஆண்டுகள் முற்றுகையிட்ட காலத்திலும் தம் நண்பன் பாரியை பிரியாது நின்ற கபிலர் போலவே ஔவையும் இறுதிக் காலம் வரை அயராது துணை நின்றார். மனித நேயமும் பண்பாடும் போற்றிய காரணத்தால் தமிழகம் முழுவதும் ஔவையின் புகழ் பரவலாயிற்று. அவரது புலமையும், பாட்டுத் திறமையும், பண்பாடும், சீனப் பெண்பாற் புலவர் லிகிங்காவ் (கி.பி11) பூட்டியர் பிரதேச கோலின்ரை இத்தாலி நொதிசு, கிரேக்க கவிக்குயில் சப்போ, ஆகிய உலகப் பாவலர் வரிசையில் வைத்தெண்ணுமாறு அத்துணை வலுவுடனும் பொலிவுடனும் திகழ்கின்றன. சங்ககால ஔவையார் அரசவைக் கவிஞராக மட்டுமல்லாமல் அரசர் இருவரிடையே மூண்ட போரைத் தவிர்க்க அரசியல் தூதுவராகவும் சென்றுள்ளார்.

சங்க இலக்கியத்தின் ஒன்புகழ் உச்சிகளாக நால்வரைக் குறிப்பிட வேண்டுமெனில் கபிலர், பரணர், நக்கீரரோடு ஔவையாரையும் சேர்த்துக் கூறுவது பொருந்தும் காதல், வீரம் இருதுறைகளில் கருத்துக்களை உணர்த்துவதிலும் உணர்ச்சிக் கூறுகளின் நுண்மையைப் புலப்படுத்துவதிலும் சங்ககால ஔவையார் பாடல்களாக நமக்குக் கிடைத்துள்ளவை பின்வருமாறு;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அகநானூறு - 4 (11,147,273, 303)
2. நற்றினை - 7 (129, 187, 275, 371, 381, 390, 394)
3. குறுந்தொகை - 13 (15, 23, 28, 29, 39, 43, 80, 91, 99, 102, 158, 183)
4. புறநானூறு - 33 (87-104, 140, 187, 206, 286, 290, 295, 311, 315, ......................)

சங்ககால ஔவையாரின் ஆளுமையின் விளைவே பிற்காலப்பல ஔவையார்களின் தோற்றத்திற்கு மூலகாரணமாகும்.

## 1) தவமகனைக் காணச் சென்ற தந்தை

அதிகமான் வாழ்வில் நடந்த உண்மை நிகழ்ச்சி ஒன்றை அதன் கண் அவர் சொல்லோவியமாகக் காட்டும் திறன் என்றென்றும் நம் கருத்தை விட்டு அகலா வண்ணம் நிலை பெற்று விளங்குகிறது.

போர்க்களத்தில் கடும்பொர் புரிந்து கொண்டிருந்தான் அதிகமான். அச்சமயம் அவனுக்குத் தவமகன் பிறந்தான். வெற்றியுடன் போர் புரியும் வேளையில் இச்செய்தி அவனுக்கு எட்டியது. தன் குலவிளக்காய்த் தோன்றிய தவமகன் திருமுகத்தைப் போய்க்காண அவன் கால்கள் விரைந்தன. அவன் தன் போர்க்கோலத்தை களைத்தானில்லை. கையிலே வேல், காலிலே வீரக்கழல், உடம்பிலே வியர்வை, கழுத்தில் அம்புகள் பாய்ந்த ஈரம், புலராப் பசும் புண்கள் இத்தோற்றத்தோடு தன் தவமகனை செல்வக் களஞ்சியத்தைப் போய்ப் பார்த்தான்.

அந்நிலையிலும் மாலை மதிய மனைய பால் ஒழுகும் மைந்தன் முகம் கண்ட நேரத்திலும் பனந்தோட்டையும் வெட்சி மலரையும் வேங்கைப் பூவுடனே கலந்து தொடுத்து உச்சியில் சூடிய ஒன்னாரை வெகுண்டு பார்த்த கண்கள் தம் சிவப்பு மாறவில்லை. இந்நிலை கண்ட ஔவையார் தன் அன்புச் செல்வத்தைக் கண்ட நேரத்திலும் மனம் ஆறி கண் குளிராத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினமுடைய அதிகமானது மனநிலையை எண்ணி எண்ணிப் பாடுகிறார்.

*"கையது வேலே, காலன புனை கழல்*
*மெய்யது வியரே, மிடற்றது பசும் புண்*
*வட்கர் போகிய வளரிளம் போந்தை*
*உச்சிக் கொண்ட ஊசி வெண்தோடு*
*வெட்சி மாமலர் வேங்கையொடு விரை இச்*
*சுரியிரும் பித்தை பொலியச் சூடி*
*வரிவயம் பொருத வயக் களிறு போல*
*இன்னு மாறாது சிவனே! அன்னோ!*
*உயர்ந்தனர் அல்லரிவன் உடற்றியோரோ!*
*செறுவர் நோக்கிய கண் தன்*
*சிறுவனை நோக்கியும் சிவப்பானவே!*

(புறம் -100)

இவ்வாறு இரவலர்க்கு கருணை நிலவாய், இகல் வேந்தர்க்கு வெங்கதிராய் விளங்கிய அதிகமானின் சிறப்புக்களை எல்லாம் செந்தமிழ் கவிதைகளால் பாடிப்பாடி மகிழ்ந்தார் ஔவையார்.

## 2) அதிகமான் வீரச்சாவடைந்த போது மீளாப் பிரிவை எண்ணி வருந்துதல்.

போரில் பகைவரைப் பந்தாடி, அவர்களை அழித்து வெற்றி கண்ட அதிகமான் கடுகிவந்த கூர்வேல் மார்பில் பாய்ந்ததனால் வீரச்சாவை புன்முறுவலோடு ஏற்றான். ஆனால் அவன் சாவை வையகம் பொறுக்குமோ? பருவகால மழையெனக் கண்கள் நீர் பொழிய அவன் மக்கள் உள்ளம் குமுறி அழுதார்கள். ஔவையார் அடைந்த துயரைச் சொல்லவும் கூடுமா? அவர் தன்னிலும் தண்ணார் தமிழையே பெரிதாகப் போற்றிய அப்பெருந்தகையின் மீளாப்பிரிவை எண்ணி இதயம் துடித்தார். உள்ளம் குமறிக்குமறி ஓவென அழுதார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"சிறிய கள்பெறினே எமக்கீயும் மன்னே!*
*பெரிய கள் பெறினே!*
*யாம் பாடத் தான் மகிழ்ந்து உண்ணும் மன்னே!*
*சிறு சோற்றானும் நனிபல கலந்தன மன்னே!*
*பெருஞ் சோற்றானும் நனிபல கலந்தன மன்னே!*
*என்பொடு தடிபடு வழியெல்லாம் எமக்கீயும் மன்னே!*
*அம்பொடு வேல்நுழைவழியெல்லாம் தான் நிற்கும் மன்னே!*
*நரந்தம் நாறும் தன்கையாற்*
*புலவு நாறும் என்தலை தைவரும் மன்னே!*
*அருந்தலை இரும்பாணர் அகல் மண்டைத் துளை உரீஇ*
*இரப்போர் கையுளும் போகிப்*
*புரப்போர் புன்கண் பாவை சோர*
*அஞ்சொல் நுண்தேர்ச்சிப் புலவர் நாவில்*
*சென்று வீழ்ந்தன்று அவன்*
*அருநிறத்து இயங்கிய வேலே!*
*ஆசாகு எந்தை யாண்டு என் கொல்லோ*
*இனிப்பாடு நரும் இல்லை பாடுநர்க்கு ஒன்று ஈகுநருமில்லை*
*பனித்துறைப் பகன்றை நறைக் கொள் மாமலர்*
*சூடாது வைகி யாங்கு பிறர்க்கு ஒன்று*
*ஈயாது வீயும் உயிர் தவப்பலவே!"* (புறம் - 235)

என விண்ணும் மண்ணும் கண்ணீா வடிக்க தன் உள்ளத்தில் பீறிட்டு எழுந்த துயர வெள்ளத்தைச் செய்யுள் வடிவாக்கினார்.

## 3) நல்ல மக்கள் வாழும் நிலம் நல்ல நிலம்

நாடோ, காடோ, பள்ளமோ, மேடோ எதுவானாலும் அவற்றாலெல்லாம் நிலம் நல்லது கெட்டது ஆவதில்லை. எங்கு ஆடவர்கள் நல்லவர்களாக உள்ளனரோ - எங்கு நல்ல மக்கள் வாழ்கின்றார்களோ அது தான் நல்ல நிலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையால் நன்மை தான் விளையும் பெண்களாலும் உலகிற்கு நன்மையே உளதாகும். தம்மையும் கெடுத்துக் கொண்டு, பிறரையும் கெடுப்பவர்கள் ஆடவர்களே. அதனால் ஆடவர் நல்லவராக இருந்தால் உலகமும் நல்லதாக இருக்கும். அவர் கெட்டவரானால் உலகமும் கெட்டழியும். **"ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே"** என்பதை இது மறுக்கிறது.

*"நாடா கொன்றோ காடா கொன்றோ*
*அவலா கொன்றோ மிசையா கொன்றோ*
*எவ்வழி நல்லவர் ஆடவர்*
*அவ்வழி நல்லை வாழிய நிலனே!*

இதற்கு மக்கள் எனப் பொதுவாகப் பொருள் கொண்டு எங்கே மக்கள் நல்லவரோ அங்கே நாடும் நல்லதாக இருக்கும் எனப் பொருள் கொள்ளலாம்.

## 4) ஔவைக்கு அதியன் ஈந்த நெல்லிக்கனி

ஔவைக்கு அதியன் ஈந்த நெல்லிக்கனி உலகப்புகழுக்கு உரியதாயிற்று. அதிகனை புகழ் பெற்ற ஏழு வள்ளல்களுள் ஒருவனாக ஆக்கியதும் அந்நிகழ்ச்சியே. ஒரு முறை மலைப்பிளவுகளுக்கிடையே எளிதில் புகமுடியாத இடத்தில் நெல்லிக்கனி கிடைத்தது. அதனை உண்டார் நெடுநாள் வாழ்வார் என ஆண்டுள்ளோர் கூறினர். அதனைத் தான் உண்ணுதலினும் பைந்தமிழ்ப் புலமை பெருமாட்டியாகிய ஔவை உண்ணுதலே தக்கது. அதனால் தமிழும் தமிழரும் பெரும் நன்மையடைவர் எனக் கருதிய அஞ்சி அதனை அரண்மனைக்கு கொண்டு வந்தான். முதலில் ஔவையிடம் அதன் சிறப்பைக் கூறாமல் இந்நெல்லிக்கனியை உண்ணுங்கள் எனக் கூறினான். ஔவையும் அதனை இயல்பான கனிகளுள் ஒன்றாகவே கருதி உண்டார். பிறகு தான் அதன் பெருமையை கூறினான். தமிழும் தமிழ் இலக்கியதுமும் பண்பாடும் நிலைபெற வேண்டுமேல் அரசை நடத்துவோரினும் அறிஞரே முக்கியமானவர் என உணர்த்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சியின் இச்செயற்பாடுகள் தான் ஔவையின் உள்ளத்தை நெகிழ வைத்தது. தான் நீண்ட நாள் வாழ்வதிலும் ஔவையே நீண்ட காலம் வாழவேண்டுமென எண்ணிய அஞ்சியின் அன்பையும் பாசத்தையும் நற்பண்பையும் எண்ணி எண்ணி வியந்து பாடினார்.

*"வலம்வடு வாய்வாள் ஏந்தி ஒன்னார்*
*களம்படக் கடந்த கழல் தொடித் தடக்கை*
*ஆர் கலி நறவின் அதியர் கோமான்*
*போரடு திருவின் பொலந்தார் அஞ்சி*
*பால் புரை பிறை நுதல் பொலிந்த சென்னி*
*நீலமணி மிடற்று ஒருவன் போல*
*மன்னுக பெருமை நீயே!*

பெருமலை விடரகத்து தொன்னிலை அருமிசை கொண்ட
சிறி இலை நெல்லித்தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத்து அடக்கிச்
சாதல் நீங்க எமக்கு ஈந்தனையே"

(புறம் -91)

## 5) தூய தமிழ்த் தூதுவர்.

அதியமான் அஞ்சி ஒரு முறை தன்னுடன் போர் செய்யப் புறப்பட்ட தொண்டைமானிடம் ஔவையை தூது அனுப்பினான். குறுநில மன்னர்களாகிய தமக்குள் பகைமை மூளாதிருக்க அஞ்சி, காஞ்சி மன்னனிடம் தூது அனுப்பினான். தொண்டைமான் ஔவையை வரவேற்றுத் தன் படைக்கல கொட்டிலைக் காட்டினான். பளபளவென்று ஒளி வீசும் போர்க்கருவிகளை அழகு செய்து மாலை சூட்டி அடுக்கி வைத்திருந்த காட்சிகயைக் கண்டதும் ஔவை அயர்ந்து போவார் எனத் தொண்டைமான் எண்ணினான்.

இவை மயில் தோகை மாலையெல்லாம் அணியப் பெற்று நன்கு விளக்கி நெய் பூசி, காப்புடைய கொட்டத்தில் கண்கவருமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. ஆனால் அங்குள்ள அஞ்சியின் படைக்கலங்களோ போர்க்களத்தில் பயன்பட்டு பகைவர்களைக் குத்தியதால் கொம்பும் நுனியும் சிதைந்து கொல்லனுடைய உலைக்களத்தில் செப்பனிடப் போடப்பட்டுள்ளன. இருந்தால் விருந்தளித்து இல்லாவிட்டால் இருப்பதைப் பகிர்ந்துண்டு கைப்பொருள் இல்லாத ஏழைச் சுற்றத்தின் தலைவனாக விளங்கும் அண்ணல் எம் கோமான் அஞ்சியின் உரிய வேலின் நிலைமை அத்தகையதாகும். ஔவையின் தூதுரை அவ்வளவேயாம்.

> *"இவ்வே*
> *பீலி அணிந்து மாலை சூட்டிக் கண்திரள் நோன் காழ்*
> *திருத்தி நெய்யணிந்து கடியுடை வியனக ரவ்வே!*
> *அவ்வே*
> *பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து*
> *கொற்றுறைக் குற்றில மாதோ என்றும்*
> *உண்டாயின் பதங் கொடுத்து*
> *இல்லாயின் உடன் உண்ணும்*
> *இல்லோர் ஒக்கல் தலைவன்*
> *அண்ணல் எம் கோமான் வைந்நுதி வேலே"*

இதில் சொல்லாமற் சொல்லிய விடயம் வஞ்சப் புகழ்ச்சியாகும். இங்கே தம் தலைவனைப் பழிபபது போலப் புகழ்கிறார்.

## 6) ஒற்றுமைச் சங்கொலித்த ஔவையார்.

ஔவையார் உறையூரின் கண் சோழ அரசன் இராய சூய வேள்வி இயற்றுகின்றான் என்பது அறிந்து அங்கு சென்றார். அவன் சேரமான் மாரி வெண்கோவும், பாண்டியன் உக்கிரபெருவழுதியும் சோழ வேந்தனோடு ஒருங்கிருக்கக் கண்டார். வாழ்நாள் எல்லாம் தமிழ் வேந்தரும் தமிழ் வள்ளல்களும் தங்களுக்குள் மாறுபாடு கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரிட்டு மடிவதைக் கண்டு மனம் வெந்திருந்த ஔவையாருக்குத் தமிழகத்து முடியுடை மூவேந்தரும் ஒருங்கிருந்த காட்சி எல்லையில்லா இன்பத்தை அளித்தது. அவர் அவ்வின்ப உணர்வின் எல்லையினின்று அம்மூவேந்தரையும் அருந்தமிழ்க் கவிதையால் போற்றினார்.

*முத்திற் புரையக் காண்டக இருந்த*
*கொற் வெண்குடைக் கொடிந்தேர் வேந்தீர்*
*யானறி அளவையோ இதுவே* (புறம் - 367)

## 7) உறுதி மாறா நட்பு

என்றும் தம் தலைவனாகிய அஞ்சி பக்கமே நின்று, அவன் உயர்விலும் தாழ்விலும் துணை நின்றவர் ஔவையார். பெருவேந்தர்களாயிற்றே என்று, அவர் எதிரிகளுடன் இசைந்தோ, பணிந்தோ போனதில்லை. அஃதொரு பெருமிதமான வாழ்வு. பாரியுடன் இணைந்து இறுதிவரை நின்ற கபிலர் பெருமானின் நட்புப் போன்றது அது.

ஔவையார் அஞ்சியிடம் ஒரு குழந்தை போற் பழகியிருக்கிறார். தொடக்க காலத்திற் போலும், அஞ்சி கொடை வழங்கக் காலந்தாழ்த்துகின்றான். பாட்டரசிரியர் சீற்றம் எல்லை கடக்கிறது. சங்கப் புலவராகிய அவர் தமது பெருமிதம் தோன்றப் பேசுகிறார். அஞ்சியின் அரண்மனை வாயில்காப்போனை விளித்துத் தொடங்கும் அப்பாடல் அக்காலத் தமிழ்ப் புலவர்களின் அண்ணாந்து ஏந்திய செம்மலை விளக்குகின்றது.

***"வாயிலோயே வாயிலோயே!***
***வள்ளியோர் செவி முதல் வயங்கு மொழி வித்தித்தாம்***
***உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து***
***வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கைப்***
***பரிசிலர்க்கு அடையாவாயி லோயே!"***

தனது அறிவாண்மையால், வள்ளல்களின் செவிகளில் தமர் சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மொழிகளை விதைத்து, தாம் நினைத்ததை நினைத்தவாறே அறுவடை செய்துவிடும் வலிய நெஞ்சம் படைத்தவர்களாம் புலவர்கள். ஆம், தாம் நினைத்ததை' விளைவிக்கும் சொல்லேருழவர்கள் இவர்கள்! இவர்களுக்குத் தம் புலமைச் சிறப்பறிந்து பிறர் போற்ற வேண்டும். அதையே இவர்கள் விரும்பி அடைய வேண்டுமென வருந்தி முயல்வார்கள். உலகிற் பிறந்த கலைஞர், யாவராயினும் இம்மனநிலையே மேலோங்கி நிற்கக் காணலாம்.

*"கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி*
*தன்அறியலன் கொல்? என் அறியலன் கொல்?*

*அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென*
*வறுந்தலை உலகமும் அன்றே?*

*அதனால்*

*காவவினெம் கலனே! சுருக்கினெம் கலப்பை!*
*மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்*
*மழுவுடைக் காட்டகத்தற்றே*
*எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே.* (புறம் 206)

## 8) சாப்போவும் ஔவையாரும்

உலகின் பிற மொழிகளில் உள்ள பெண்பாற் கவிஞர்களை சாப்போவோடு தொடர்புபடுத்துவது வழக்கத்தில் இருந்தது. சீனப் பெண்பாற் கவிஞரான லிகிங்சாவ் (கி.பி 11) என்பவளைச் சீனாவின் சாப்போவென்றும், ச்பெயின் நாட்டின் பெண்பாற் கவிஞரான வல்லாடாவை (Walladah - கி.பி.11ம் நூற்றாண்டு) ச்பெயின் சாப்போ என்றும் கூறுவார்கள்.

தமிழகத்தில் ஔவையாரையும், சாப்போவுடன் தொடர்புபடுத்திக் கூறினார்கள், தமிழறிஞர்கள். திரு.எச்.பௌர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Rev.H.Bower) என்னும் பாதிரியார் Calcutta Quarterly Review Vol - I ல் ஔவையாரைக் குறித்துப் பின்வருமாறு எழுதியிருந்தார். அவள் சாப்போ போன்று பாடினாள். ஆனால் காதலைப் பற்றி அல்ல. ஒழுக்கத்தைப் பற்றி" (She sung like sappho, yet Not of love but of virture) இந்த மேற்கோள் இலங்கைத் தமிழ் ஆய்வாளர் திரு.சைமன்காசிச்செட்டி (1807-1852) அவர் காலத்தில் வெளியிட்ட "Tamil Plutarch) என்னும் நூலிலும், நீதி நூல்கள் சிலவற்றின் ஆங்கில மொழி பெயர்ப்பைக் கொண்ட "Tamil Wisdom" (கி.பி.1872 - முதற்பதிப்பு) என்னும் நூலிலும், எடுத்தாளப்பட்டது. டி.சேர்.சேச.அய்யங்கார் The Ancient Dravidian - 1927 என்னும் நூலில் (பக் 244-45) ஔவையாரைத் தமிழ் சாப்போ என்றும், சேவியர் தனிநாயக அடிகளார், "Nature of Tamil Poetry" என்னும் நூலின் பக் 47 ல், "தமிழ் சாப்போ" என்றும் குறிப்பிடுகின்றார். தணிகைமலை வ.சு.செங்கல்வராயப் பிள்ளை அவர்களும், ஔவையாரைத் "திராவிட சாப்போ" என்று கூறுகிறார்.

தமிழறிஞர் எம்.எ.சு.பூரணலிங்கம் பிள்ளையும் இவ்வாறே திராவிட சாப்போ என்று குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகப் பெண்பாற் புலவர்கள்
## -ஒரு கண்ணோட்டம்-

| காலம் | நாடு | மொழி | பெண்பாற் புலவர்கள். |
|---|---|---|---|
| கி.மு. 1500 | வடபாரதம் | வேதமொழி சமஸ்கிரதம்) | 28 |
| கி.மு. 1100 | இஸ்ரேல் | ஈப்ரூ | 1 |
| கி.மு. 600 | கிரீஸ் | கிரேக்கம் | 1 |
| கி.மு. 600-500 | வடபாரதம் | பாளி | 73 |
| கி.மு. 500 | கிரீஸ் | கிரேக்கம் | 2 |
| கி.மு. 400 | கிரீஸ் | கிரேக்கம் | 1 |
| கி.மு. 300 | கிரீஸ் | கிரேக்கம் | 1 |
| கி.மு. 300 | இத்தாலி | கிரேக்கம் | 1 |
| கி.மு. 200 | கிரீஸ் | கிரேக்கம் | 1 |
| கி.மு. 200 | வடபாரதம் | பிராகிருதம் | 11 |
| கி.மு. 100 | இத்தாலி | இலத்தீன் | 1 |
| | சீனா | சீனமொழி | 3 |
| கி.மு. 3- கி.பி. 2வரை | தமிழ்நாடு | தமிழ் | 41 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஔவையார் வாழ்ந்த காலமும் நூல்களும்

| பெயர் | காலம் | தனிப்பாடல் | நூல் | பாடப்பெற்றோர் | வரலாறு |
|---|---|---|---|---|---|
| 1. சங்ககால ஔவை | சங்ககாலம் கி.பி 2ம் நூற்.முன் | சங்கநூற் பாடல் | அகநானூறு 4 குறுந்தொகை 15 நற்றினை 7 புறநானூறு 33 ஆக 59 பாடல் | சேர, சோழ பாண்டியன், அதியமான், அவன் மகன் நாஞ்சில் வள்ளுவன் முதலான பலர் | அதியமான் நெல்லிக்கனி |
| 2. இடைக்கால ஔவை | 10ம் நூற். முன் | பல | - | வேந்தர் மூவ சோழர் அசதி | அங்கவை சங்கவை திருமணம் |
| 3. சோழர்கால ஔவை | 12ம் நூற்றாண்டு | பல | ஆத்திசூடி, கொன்னை வேந்தன், நல்வழி, மூதுரை | | அசதி விக்கிரமசோழன் |
| 4.சமயப்புலவர் ஔவை | 14ம் நூற்றாண்டு | சில | அவ்வை குறள் விநாயகர் அகவல் | விநாயகர் | அகவல் பாடியது. |
| 5. பிற்கால அவ்வை I | 16ம் நூற்றாண்டு | சில | - | - | தமிழறியும் பெருமாள் |
| 6. பிற்கால அவ்வை II | 17-18ம் நூற்றாண்டு | - | பந்தனந்தாதி | பந்தன் என்ற வணிகன் | பந்தன் செய்த சிறப்புகள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருக்கு தமிழ்ப் புதியவாண்டுத் தொடக்கம் தைத்திங்களே!

சுழன்றும் ஏர் பின்னது உலகம். அதனால்
உழந்தும் உழவே தலை (கு.1031)

இது நம் தமிழ் மறையோனின் பொன்போன்ற, பொருள் பொதிந்த நிறை மறை மொழியாம். இன்றைய அறிவியல் உலகிற்கு இது ஏற்புடையதா? உழுதவன் கணக்குப் பார்த்தால் உழவுக் கூலியும் மிஞ்சாது என்பது ஒரு சொல் வழக்கு. ஆக உழவுக்கு ஏற்றமில்லை. கணனி கல்வியில் கைநிறைய காசு என்ற கனவில் உலகம் மிதக்கிறது. ஆனால் நாம் என்னதான் உயர உயர பறந்தாலும் உயிரைக் காப்பதும் வளர்ப்பதும் இவ்வுழவேயாகும்.

ஆயிரம் ஆயிரம் அறிவியல் கண்டுப்பிடிப்புக்கள், உருவாக்கங்கள், புத்தம் புது தொழில்கள் தோன்றலாம், மாறலாம், மறையலாம் ஆனால் அன்றும் இன்றும் என்றும் மாறாத இன்றியமையாத ஒரே தொழில் உழவு மட்டுமே. எனவே உலகம் எப்படி உழன்றாலும் உழவே தலையாம். பழம் தமிழ் காலம் தொட்டு இன்று வரை அரச ஆட்சிக்குரிய வருவாயின் பெரும் பகுதி இதுவேயாகும். இன்று நடைமுறையில் உள்ள இருபெரும் பருவங்களான சிறுபோக வேளான்மை, பெரும்போக வேளாண்மை அல்லது வானாவாரி வேளாண்மைகளேயாகும். பெரு விளைவைத் தந்த வானவாரி பயிர்ச்செய்கையினால் உழவர் தம் உள்ளமும், இல்லமும் நிறைந்திருக்கும். இக்காலப்பகுதியிலேயே ஆட்சியாளர்கள் தமக்கு சேர வேண்டிய நிலவிளைவு வரியை மக்களிடமிருந்து அறவிட்டார்கள். இக்காலப்பகுதியை வரி அறவிடும் காலமென்றும் குறிப்பிட்டனர். எனவேதான் வானாவாரி அறுவடை தொடங்கும் காலம் வேளான் ஆண்டின் தொடக்கமாகக் கொள்ளப்பட்டது. அத்துடன் ஒரு அரசன் முடிசூடிய ஆண்டு ஆட்சியாண்டாகவும், வானாவாரி அறுவடை தொடங்கி வரி அறவிடும் காலத்தை வேளாண் ஆண்டுத் தொடக்கமாகவும் இரு ஆண்டுத் தொடக்க நடைமுறை பழம் தமிழ்க்காலத்திலே நடைமுறைபடுத்தப்பட்டு வந்தது. இவற்றை சங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், செப்புப்பட்டயங்கள் மூலமாக அறிய முடிகிறது.

பேரறுவடையாகிய வானாவாரி பருவ பயிர்களின் அறுவடைக்காலம் தைத்திங்களையே சார்ந்து முன் பின் தொடங்குவதாலும், வேளாண்மையே அன்றைய இன்றைய பெரும் தொழிலாகவும், அடிப்படைத் தொழிலாகவும் இருப்பதாலும், ஞாயிற்றின் வடதிசைசெலவு தைத்திங்களில் தொடங்குவதாலும், மேழவிழுவைத் தழுவியதாகவும் இருப்பதால் தைமுதல் நாளே பண்டைத்தமிழர் ஆண்டின் முதல் நாளாகக் கொண்டிருந்தனரெனலாம். இது மண்ணின், மொழியின் மைந்தர்களின் புதுவருவாய்க்கான காலமாகையால் தை முதல் நாளை ஆண்டின் முதல் தொடக்க நாளாகக் கொள்வதில் வியப்பொன்றும் இல்லையே! இதுவே இன்றும் இயற்கையோடு இணைந்த வாழ்வுக்கும், அறிவுக்கும் ஏற்புடையதாகும்.

எமது வாழ்வில் திரும்பப் பெறமுடியாதவை உயிர், மானம், காலம் ஆகிய மூன்றுமாம். குடும்பம், குமுகாயம், (சமுதாயம்) ஊர், நகர், நாடு, உலகம், பற்றி அறிய வேண்டின் அதற்குக் காலவளவு போன்றன மிகவும் இன்றியமையாதனவாகும். நம் முன்னோர் காலத்தை நொடி, நாழிகை, நாள், கிழமை, மாதம், ஆண்டு, ஊழி என்று வானியல் முறைப்படி வரையறை செய்துள்ளனர். அது போலவே 60 நாழிகையை ஒரு நாளென்றும், ஒரு நாளை, வைகறை, காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை, யாமம் என்று சிறுபொழுதுகளாகவும் ஓர் ஆண்டை இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனியென்று ஆறு பெரும கூறுகளாகவும் பிரித்துள்ளனர். இப்படிக் குறுகிய காலக்கணக்கீடுகளில் கவனம் செலுத்தியவர்கள் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளை எமது மொழி, இனம், நாடு ஆகியவற்றிற்கு பொதுவான தொடர் ஆண்டுக்கணக்கால் குறிப்பிடும் வழக்கத்தைப் பின்பற்றவில்லை என்பது வியப்பாகவும், வருத்தம் தருவதாகவும் உள்ளது. இருப்பினும் நம் முன்னோர்கள் இரண்டாயிரமாண்டு முன்னரே பல ஆண்டுக் கணிப்புக்களைக் கொண்டிருந்தனர். குறிப்பாக "உவா மாத ஆண்டு, ஞாயிறு உடுமாத ஆண்டு, வியாழன் மாத ஆண்டு, திங்கள் ஞாயிறு உவா மாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு, தொல்காப்பிய ஆண்டு, மலையாள பரசுராம **ஆண்டு**, திங்கள் உடுமாத ஆண்டு, **வெப்பமண்டில ஆண்டு**" போன்றவையாகும். உவாமாத ஆண்டு முறையானது ஒருகாருவா (அமாவாசை) நாளிலிருந்து அடுத்த காருவா வரையிலான நாட்களை உள்ளடக்கிய மாதமாகும். ஒருநாள் வேற்றுமை ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் நீட்சி 29 நாள் 12 மணி 44 நியமம் (நிமிடம்) ஆகும்.

ஞாயிறு 27 நாண் மீன்களுடாகப் பெயர்ந்து ஒரு சுற்றுக்கு எடுக்கும் 365 நாள் 9 நியமம் 9.6 நொடி காலத்தை உள்ளடக்கிய நீட்சியே ஒரு "**ஞாயிற்றாண்டாகும்**". ஞாயிற்று மாதங்களை, மேழவிழுவையும் குறிப்பிட்ட நாண்மீனையும் நிலையாக வைத்து மேழவிழுவிலிருந்து பெயாரந்து செல்லும் ஞாற்றைக் கொண்டு கணித்தனர். இம்முறையானது கடைச்சங்க காலம் வரை நடைமுறையிலிருந்ததென்பதை 12 ஓரைகளில் ஒன்றாகிய "**ஆட்டை (மேழம்)**" முதலாவதாக "**நெடுநல்வாடை**" குறிப்பதன் மூலம் அறியலாம். வானியல் கணிப்பு முறையும் இருவகைப்படும் ஒன்று ஞாயிறை உடுக்களோடு மட்டும் தொடர்புபடுத்துவது. மற்றையது மேழவிழு முன்னுறலை ஞாலப்பருவங்களுடன் ஞாயிற்றைச் சார்புபடுத்துவதாகும். விண்மீனைக் குறிக்கும் "உடு", ஆடு என்று பொருள்படும். எனவே ஆட்டைக் குறிக்கும் மேழமே தொன்றுதொட்டு முதலோரையாகக் கொள்ளப்பட்டதெனலாம். மேழ ஓரையிலிருக்கும் புரவி (அசுவினி) நாண்மீன் மேழவிழுலிருப்பதை வைத்து நாளைக் கணக்கிடும் முறை கி.மு.274ல் தொடங்கி இருக்க வேண்டுமென்பர். இந்த ஊழியாண்டு முறையே வரலாற்றின் மீதும், அறிவியலின் மீதும் தன் அடிச்சுவட்டை பதித்துள்ளது. இதைப் பண்டை கிரேக்க, இலத்தீன் பண்பாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. உலகும் மேழ ஓரையை முதல் ஓரையாக ஏற்றுக் கொண்டுள்ளது.

ஓர் ஓரையைச் சேர்ந்த ஞாயிறை வியாழனாகிய கோள் சுற்றிவர எடுக்கும் காலம் 12 ஆண்டுகள். கோள்களில்ப் பெரியதும், ஆண்டளப்பான் அல்லது ஆசான் எனப் பெயர் பெற்றதும் ஆனகோள் வியாழனாகும். வியாழ மண்டலத்தில் 1/12 சுற்றே வியாழனாண்டு எனலாம். இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயிற்றாண்டு முறையுடன் ஏறக்குறைய பொருந்தியதாகும். மகநாண் மீனில் அல்லது அதற்கண்மையில் வியாழனிருக்க அதில் வெள்ளுவா (பூரணை) நிகழும் நாளையே மாமகமென்று 12 ஆண்டுகளுக்கொரு முறை குடந்தையில் விழாவெடுக்கின்றனர். இந்த வியாழன் ஆண்டு முறையை திங்கள் ஞாயிறு ஆண்டு முறையுடன் பொருத்தினர் பார்ப்பார்.. அத்தோடு வியாழன் ஞாயிறை 5 முறை சுற்றிவர எடுக்கும் 60 ஆண்டு வியாழ வட்டத்தையும் (சக்கரம்) ஏற்படுத்தினர். இந்த 60 **ஆண்டுகளுக்கும் நாரதர் பெண்ணாக மாறி லீலைக் கண்ணனுடன் (வைதீகக் கடவுள்) கல்வி செய்து பிறந்த 60 சங்கத** (சமஸ்கிருத)ப் பெயர்களைத் தாங்கிய பிள்ளைகளின் பெயர்களை பிரவயில்த் தொடங்கி அட்சயவில் முடியச் சூட்டினர். (அபிதான சிந்தாமணி 1934ஆண்டுப் பதிப்பு 1392ம் பக்கம்) ஓர் ஆண்டின் பெயர் தன்னும் தமிழ்ப் பெயரைக் கொண்டு இருக்கவில்லை. ஏனெனில் **வைதீக வேதமரபார் கொள்கைப்படி தமிழ்** ஒரு **தீட்டு (நீச) மொழி அல்லது பேய்மொழி** ஏனென்றால் **"பெருங்கதை"** பேய்மொழியில் எழுதப் பெற்றதாக வைதீகவாரிய **வேதமரபார்** கூறுவர். எனவே எப்படித் தமிழருக்கு சித்திரை மாதம் ஆண்டுத் தொடக்கமாகும். இந்த 60 ஆண்டுச் சுழற்சி முறையும் கி.பி.317ல் அல்லது கி.பி.426ல் தொடங்கியிருக்க வேண்டுமென்று இரண்டுபட்டு நிற்கின்றனர். அத்தோடு செய்தித் தாள்களில் கட்டுரை எழுதுவோர் ஆண்டுத் தொடக்கம் என்பதற்குப் பதில் வருசப் பிறப்பென்கின்றனர். உயர்திணையினரான ஆண் பெண் கூடிப் பெற்றெடுக்கும் பிள்ளையே பிறப்பிற்கு உரியது. அப்படியானால் ஆண்டு பிறப்பென்பது மேற்குறித்த அருவருக்கத்தக்கதும் பகுத்தறிவுக்கு ஒவ்வாததும், வெட்கக்கேடானதும், தமிழ்மொழி மரபு, வரலாறு, பண்பாட்டிற்கு இழுக்குடையதுமான இழிவின் தொடர்ச்சியா? வருசம் என்ற வடசொல்லையும் தங்கு தடையின்றி பயன்படுத்துவதையும் காணலாம். இச்சொல்லின் பொருள் மழையென்பதாகும். சிங்களத்திலும் மழையைக் குறிக்க **"வர்சாவ"** என்பர். ஒரு மழைக்காலம் தொடங்கி அடுத்த மழை காலம் வரையிலான காலத்தையும் **வருசம** என்பர். அப்படியாயின் சித்திரைப் புத்தாண்டில் மழைகாலம் தொடங்குகிறதா? எந்தப் பொருத்தப்பாடும் இல்லையே.

மழைக் காலத்தொடக்கமாத்தை ஆண்டின் தொடக்கமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்காப்பிய ஆண்டு முறையில் கடைப்பிடிக்கப் பெற்றதாம். பொருள் தேட வெளிசென்ற தலைவன் மழைகாலம் தொடங்குவதற்குச் சற்று முன்னதாக வீடு வருகின்றான் தான் தேடிய செல்வத்துடன். இது இல்லங்களில், குடும்பங்களில், குமுகாயத்தில் மிக்க மகிழ்வைக் கொடுக்கின்றது. எனவே விழாவெடுக்கின்றனர். இவ்வாண்டுத் தொடக்கம் மடங்கலில் (ஆவணி) தொடங்குகின்றது. கார் காலத் தொடக்கமாகிய ஆவணி புரட்டாதியை ஆண்டுத் தொடக்கமாகவாக்கியது தொல்காப்பியவாண்டு முறை. இம்முறை கி.மு.6699ல் ஏற்பட்ட மிகப்பழைய முறையாகும்.

வடஇந்தியாவில் வழங்கிய திங்கள் மாத ஆண்டைச் சரிப்படுத்த ஏற்படுத்தப்பட்டதே திங்கள் ஞாயிறு உவாமாத முறையாகும். இதைக் கன்னட தெலுங்கர் பயன்படுத்துகின்றராம். திங்களாண்டில் 12 கருவாக்களும் (அமாவாசை) 12 வெள்ளுவாக்களுமாக (பூரணை) 354 ஞாயிறு நாட்களுக்கு ஈடாகும். ஞாயிற்றாண்டில் 365 நாள் 6 மணியாகும் எனவே இந்த மிகை 11 நாள் 6 மணியை ஈடுசெய்ய 3 ஆண்டுகளுக்கொருமுறை ஒரு மிகை மாதத்தை திங்களாண்டு முறையில் சேர்க்க வேண்டியதாயிற்று அத்தோடு மாதப் பெயர்களையும் 27 நாண்மீன்களிலிருந்து தெரிவு செய்தனர். திங்களாண்டு நாட்காட்டியில் வரும்மிகை மாதத்தை ஞாயிற்றாண்டுடன் சமன் செய்ய 30 ஆண்டுச் சுழற்சியை ஏற்படுத்தினர் ஆரியப்பார்ப்பாரென "சதபத பிராமணம்" கூறுகிறதாம். இந்நடைமுறையை ஏற்றவர்களும் ஏற்காதவர்களுமாகப் பலதரப்பட்டு நிற்கிறார்கள். உடுப்பருவங்களான இளவேனில், முதுவேனில், கூதிர், பனிபற்றி குறிப்பிடப்பட வேண்டிய "இருக்கு வேதம்" தமிழரின் இலக்கிய மரபுடன் ஒன்றித்த ஆறுபருவங்களான முன்பனி, பின்பனி, முன்இளவேனில், பின் இளவேனில், கார், கூதிர் என்பவற்றைக் குறிப்பிடுகிறதாம். திங்களாண்டையும், ஞாயிற்றாண்டையும் பொருத்தவே திங்கள் ஞாயிற்றாண்டை வடித்தனரென "இருக்குவேதம்" செப்பும். இவ்வாண்டு முறையின் முதல் மாதமாக வைகாசி (வைகாசம் - விசாகம்) யைத் வைத்தவூழியாண்டு கி.மு.255 என்பர். எனவே இருக்குவேதத் தொகுப்பு கி.மு.255 க்கு பிந்தியதாகும். சமய நோன்புகள், சடங்குகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள்விகள் திங்களாண்டைச் சார்ந்தும், வாழ்வியலுக்கு (வேளாண்மை) வேண்டிய பருவங்கள் பற்றிய அறிவு, நுட்பம், முரணாகிக் குழப்பங்கள் நிகழ்ந்ததாக **"சதபத பிராமணம்"** குறிக்கிறதாம். இதைக் கண்டறிந்து பருவகாலங்களுக்கு ஏற்றவகையில் ஞாயிற்றாண்டு வடிக்கப்பெற்று நடைமுறைப்படுத்தப்பட்டதாம். இந்த ஞாயிற்றாண்டு முறையாலும், கன்னடத் தெலுங்கு முறையாலும் ஐந்திர (பஞ்சாங்க)க்குளறுபடிகள் தொக்கி நிற்கின்றன.

**தமிழ் வள்ளுவக்கணியர்கள் ஆக்கிய திங்கள், வியாழன், ஞாயிறு மாதவாண்டுக் கணக்குகளைத் தமதாக்கிக் கொண்டு ஆரியபபார்ப்பார் வகுத்த ஆரிய சித்தாந்தத்தைத் தழுவி ஞாயிற்று மாதங்களுக்கு மட்டுமிருந்த பெயர்களை நீக்கிவிட்டு திங்கள் மாதப் பெயர்களைத் திணித்து கி.பி.300க்குப் பின் இன்று வழங்கும் ஆண்டுக் கணக்கை** ஆரியப்பார்ப்பாரின் தொண்டரடிப்பொடியராகிய தமிழ்ப்பார்ப்பார் புகுத்தினர். சித்திரையை முதல் மாதமாகக் கொள்ளும் முறை வைகாசியை முதல் மாதமாகக் கொள்ளும் முறைக்குப் பிந்தியதாம். இப்படி பலதிறப்பட்ட ஆண்டு நாட்காட்டிகளும், கணிப்புப்பகுப்புக்களும் ஐந்திர (பஞ்சாங்க)க் கணிப்புக் குளறுபடிகளையே சுட்டும் (வாக்கிய, திருக்கணித) இதனாலேயே **சித்திரையில் வைத்து ஐந்திரம் கணிப்பது எல்லாத் தவறிற்குமான காரணமென்கின்றார். இந்துத்துவவாதியான பாலகெங்காதரதிலகர், மாகவி சுப்பிரமணிய** பாரதியார போன்ற பல அறிஞர்கள். அத்தோடு மேழமுன்னுறல் (மேழ விமு) நடைபெறும். பங்குனி உத்தரத்தன்றிலிருந்து ஐந்திரக்கணிப்பு செய்யப்பட வேண்டுமென்றும் கூறுவர்.

**"பங்குனி உத்தரம்"** சைவர்களால் போற்றப்பட வேண்டிய உயரிய சிறப்புமிக்க நாளாகும். ஏனெனில் அன்று தான் சைவர்களின் முழுமுதற் கடவுளாம் சிவனின் நெற்றிக் கண்களிலிருந்து முருகன் தோன்றிய நாள், காமனாகிய மன்மதனை நெற்றிப் பொறியால் அழித்தநாள், மருத நிலக் கடவுளாம் இந்திரனின் (இருக்குவேதம் கூறும் சிந்துவெளி நாகரிகத் தொல் தமிழரை அழித்த இந்திரனல்ல) இந்திர விழா தொடங்கும் நாள். இந்தப் பங்குனி உத்தரத்தன்றே (மேழவிழு) ஞாலநடுவரையில் ஞாயிறு வருகிறதாம். அத்தோடு உலகில் அதிகமக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்றும் கிறீத்தமதத்தவரின் "உயிர்த்தெழுந்த ஞாயிறு" பங்குனி உத்தரத்தை அடிப்படையாக வைத்தே கணிக்கப்பெறுகிறது. உயிர்த்தெழுந்த ஞாயிறு (ஈச்டர்) பங்குனி 21ம் நாளிலோ (மீனம் 8) அல்லது அதைத் தொடர்ந்து வரும் வெள்ளுவா (பூரணை)வுக்கு அடுத்து வரும் ஞாயிறில் கொண்டாட வேண்டுமென்கிறது. "வைற்ரேக்கேர்ச் அல்மனைக் (Whitaker's almanach ஆண்டு 1945 பக்கம் 181"). அத்தோடு உயிர்த்தெழுந்த ஞாயிறைக் குறிக்கும் "ஈச்டர்" என்ற சொல்லுக்கு விளக்கம் தரும் "சேம்பர்ச் (Chambers) 20ம் நூற்றாண்டு அகரமுதலி, 1972", **"இளவேனில் விழுவில் (பங்குனி 21 மேழவிழு) நடைபெறும் பெண் தெய்வ விழா"** என்கிறது. இது **"இந்திர விழாவைக்"** குறிப்பதாகும். பல்லாயிரமாண்டுகளுக்கு முன்கடலில் அமிழ்ந்து போன முதற்சங்கத் தலைநகரம் தென்மதுரை நிலநடுவரையிலிருந்ததாகவும் கதிரவன் "மீன் இரவி" என்னும் பங்குனி மாத உத்தர நாளில் மேழ ஓரைக்குள் நுழைவதாலும் இந்நாளில் கதிரவன் உச்சிக்கு (பகலிரவு சமவேளை) வருவதாலும் சிறப்புற்றிருந்ததாம். ஞாயிற்றாண்டு முறைப்படி கணக்கிட்ட ஆண்டுடன் திங்கள் முறை கொண்டு கணக்கிட்ட மாத முறையை ஒட்ட வைத்ததால் வந்ததே ஐரோப்பிய நாட்காட்டி. இதைச்சுட்டும் "கில்பெர்ட் சிலேட்டர்" வியக்கத்தக்க முறையில் தமிழரால் அமைக்கப்பெற்றுள்ள இந்த ஞாயிற்றாண்டு நாட்காட்டியைக் கண்டு மலைத்து நிற்கிறார். இது ஒரு சமயம்சரா ஆண்டு முறையெனவும் பகருவார் (விரிக்கப்புகின் நீளும்).

தமிழுக்கு, தமிழனுக்கு பௌத்தம், கிறீத்தவம் வழங்கும் தனிமனித அடிப்படை முன்னுரிமைகளைக்கூட இந்த வைதீகவாரிய இந்துத்துவ வேதமரபார் எந்தக் காலத்திலும் வழங்க முன்வரமாட்டார்களென்பதை 13.4.08ல் வீரகேசரி சித்திரைப் புத்தாண்டு சிறப்பிதழில் வைதீகவாரிய இந்துத்துவத்திற்கு முண்டுகொடுக்கும் கட்டுரை மூலம் மிகத் தெட்டத் தெளிவாக புரிந்து கொள்ளலாம். இக்கட்டுரை **"குத்தி முறிந்து நீர்ச்சீலையை (கோவணத்தை)ப் பிய்பது"** போன்ற சொல்வழக்கிற்கு பொருந்துவதாயுள்ளது. இன்று பௌத்தத்தை, கிறீத்தவத்தை எடுத்துக் கொண்டால் அது எந்தெந்த நாட்டினரால் பின்பற்றப் பெறுகிறதோ அந்த நாட்டு மக்களின் தாய்மொழியிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில் வழிபாடுகள், இன்பியல் (திருமணம், புதுமனைப் புகுதல்), துன்பியல் (இறப்பு, கருமாதி, நினைவு கூறல் போன்றன) நிகழ்வுகள் நடத்தப் பெறுகின்றன. கி.மு.1700ல் அன்றைய இந்தியாவுட் புகந்தவாரியர் தென் தமிழ்நாடு வர 2000 ஆண்டுகளுக்கு மேல் சென்றன. வாதாபி **கணபதியாகிய ஆரிய வைதீகக் கடவுள் பிள்ளையார் வணக்கம் கி.பி. 7ம் நூற்றாண்டையொட்டியே தொடங்கியது.** பல்லவர்களும் பிற்கால சோழர்களுமே இந்த வைதீகவாரிய வேதமரபு வளரவழி சமைத்தவர்கள் (விரிக்க நீளும்). இக்காலகட்டத்திலேயே திருநாவுக்கரசர், **திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தியார், மாணிக்கவாசகர் போன்ற நாயன்மார்கள் தோன்றி தமிழையும், சைவத்தையும் வளர்க்க பெருமுயற்சி** எடுத்தனர். இவர்களை கடவுள் ஆட்கொண்டார் எனக் கூறிக் கொன்றனர். (கண்ணப்பர், நந்தனார் போன்ற சிலரும், சமயத்தின் பெயரால் தம்மைத்தாம் அழித்துக் கொண்ட சிலரும் இதில் அடக்கம்) **இலங்கையைப் பொறுத்தவரையில் வைதீகக் கடவுளான பிள்ளையார் வணக்கம் கி.பி.12ம் நூற்றாண்டுக்குப் பின்பாகவே தொடங்கியது.** இவற்றைச் சற்று விரிவாக எழுதக் காரணம் குறித்த கட்டுரையின் வைதீகவாரியம் சார்ந்த மேலாண்மைக் கூற்றுக்களேயாகும். வைதீகவாரியர் வேறு, தமிழர் வேறு, தமிழனின் ஆண்டுத் தொடக்கம் பற்றி முடிவெடுக்கவோ, எதிர்வு கூறவோ ஆரியருக்கு எந்த உரிமையுமில்லையென்பதை எல்லாத் தமிழருமே ஒத்துக்கொள்வார்கள். இலங்கையில் வைதீகவாரியரில்லை ஆனால் அவர்கட்கு முண்டு கொடுக்கும் தமிழர்கள் தான் உள்ளனர். இந்திய வைதீக ஆரியர் இலங்கையிலிருக்கும் வைதீகவாரியரென்று சொல்லிக் கொள்பவர்களை சூத்திரரென்றே (கறுப்பர்- தமிழர்) கூறுகின்றனர். இவர்களுடன் உண்ணல் கலத்தலில்லையாம். இந்தியாவிலும் **வடநாட்டு வைதீக ஆரியர் புலால் உண்டு வேதங்களிலும் மிருதிகளிலும் சொல்லியபடி, சாத்திரப்படி நடந்து கொள்வதாகவும்,** ஆனால் தென்னாட்டவர் இவற்றிற்கு முரணாக சைவ தந்திரங்களின்படி நடப்பதால் பிராமணராகார், சூத்திரரே என்பார். மலையாளம், கன்னடம், தெலுங்கு நாடுகளிலும் பலகுளறுபடிகள். இங்கு யார் தான் உண்மை வைதீக வாரியப்பார்ப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துத்துவமென்பது ஆசீவகம், உலகாய்தம், சைவம், வைணவம், வைதீகம், சமணம், பௌத்தம் (கீதையின் 2ம் அதிகாரம் 55 தொடங்கி 72 வரையிலான சுலோகங்கள் பௌத்தக் கோட்பாடுகளை உள்ளடக்கியதென்பார். டி.கோசம்பி) போன்ற பலமதக் கோட்பாடுகளை உள்வாங்கிய ஒரு கலவை. இதன் மூலம் வைதீக மதத்தார் மற்றைய மதத்தார் மேல் மேலாண்மை செலுத்த ஏற்படுத்திக் கொண்ட ஒரு அடக்குமுறை. சைவத் தமிழர்கள் எந்தச் சமயக்காழ்ப்புணர்வும் அற்றவர்கள். இது இன்று நேற்றல்ல பல்லாயிரமாண்டுகளாகக் கைக்கொள்ளும் கருவின் குணம், வைணவம், பௌத்தம், சமணம், ஆசீவகம் போன்ற பல்மதக் கோட்பாடுகளை உருவாக்கி வளர்த்தவர்களும் அவர்களே. ஆனால் பல்வகை (மபாரத, இராமாயண) திணிப்புக்களின் நடுவிலும் இராமனை, கண்ணனை, இலட்சுமியை, சரசுவதியை, அனுமானை கடவுளராக்கி கோவில் கொண்டு வணங்கவில்லை. சிலர் மதிப்பதால் அவர்களும் மதிக்கிறார்கள் வணங்குகின்றார்கள். ஏன் கிறீத்தவக் கடவுளான இயேசுவை, மாதாவை, அந்தோனியாரை மதிக்கிறார்கள் வணங்குகிறார்கள். சைவமும் தமிழும் தம் இரண்டு கண்களென்பர் சைவர்கள். ஆனால் அது வெகுவிரைவில் வைதீகமும் சமற்கிருதமுமாக மாறிவிடுமோ என்ற ஐயப்பாடிருந்தாலும், பலதடைகளைத் தாண்டி பல்லாயிரமாண்டு தாக்குப் பிடித்தவர்கள் அறவியலும், அறிவியலும், பகுத்தறிவும் மிக்இன்னாளில் விழுந்து விட்டார்கள். தொன்று தொட்டுத் தமிழனுக்கு வாழ்வாக, வளமாக, அறமாக, அறிவாக இருந்தது வேளாண்மையே. அவன் அன்றிலிருந்து இன்றுவரை மகிழ்ந்திருந்தது இவ்வேளாண்மையை ஒட்டியே. பல ஆண்டு முறைகளைக் கலவையாக்கி முரண்பாடுகளும், குழறுபடிகளும், குழப்பங்களும் நிறைத்து ஆக்கப்பெற்ற மாந்தனின் வாழ்வியலுக்கேற்ற கூறுகளைக் கொண்டிராத ஐந்திர (பஞ்சாங்க)க் கனிப்புக்காக மட்டும் சித்திரையை ஆண்டின் தொடக்கமாகக் கொள்ளச் சொல்வதும், தொன்ம(புராண) இழிவுகளைத் தொடர்ந்து சுமக்கச் சொல்வதும் சற்றும் பொருத்தமற்றதாகும். அத்தோடு வைதீக ஆரியத்திற்கு முரணான நடவடிக்கைகளை முளையிலே கிள்ளியெடுக்க வேண்டுமாம். காலங்காலமாக ஆரியர் நாவலந்தேயமாகிய இந்தியாவினுள் புகுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலந்தொட்டு தமிழனின் முதுபெரும் நாகரிகம், வானியல், அணுவியல், மொழியியல், சமயம் போன்ற பல்வகைக் கூறுகள் முளையிலே கிள்ளியெறியப் பெற்று அழிக்கப்பெற்றன. (விரிக்கின் நீளும்) ஏன் எல்லாத் தகுதிகளிலிருந்தும் என்றோ உலகச் செம்மொழியாகியிருக்க வேண்டிய தமிழ் மொழியை நேற்றுவரை அத்தகுதியைப் பெறாமல் தடுத்து நிறுத்தியவர்கள் இந்த தமிழ்க்காழ்ப்புணர்வு கொண்ட வைதீக வேதவாரியரும், அவர் சார்புடையோருமாவார். ஒரு இனத்தின் வாழ்வியற் பண்பாட்டுடன் தொடர்புடைய ஆண்டுத் தொடக்க விழாவை விடுத்து இன்னொரு இனத்தின் நெருக்கத்தைப் பேண அந்த இனத்தின் விழாவேடு ஒன்றித்துப் போக வேண்டுமாம். மேற்குறித்த கணியுப்புக்களால் ஆக்கப்பெற்று பல்நூறு ஆண்டுகளாக ஆண்டுத் தொடக்கத்தை ஒன்றாகக் கொண்டாடியும் (இலங்கையில்; தமிழர், சிங்களவர், இந்தியத் தென்நாட்டில்; தமிழர், கேரளர், தெலுங்கர், கன்னடர்களுக்கிடையில்) சமாதானம், ஐக்கியம் எள்ளளவும் உருவாகவில்லை. விரிசல்தான் கூடுகின்றது. இராமாயண, மாபாரத காலங்களான 6000 ஆண்டு (மிகைப்படுத்தல், ஆய்வுக்குரியது)களுக்கு முன்பிருந்தே சித்திரையை ஆண்டுத் தொடக்கமாக கொண்டாடுகிறார்களாம். எப்படியெல்லாம் கரடி விடுகிறார்கள் தமிழனை ஏமாற்ற.

எனவே இவ்வாறான உருட்டுப்பிரட்டுக்களிலிருந்து விடுபட்டு தமிழன் வாழ்வியலோடு தொடர்புடைய வேளாண்மையையும், உலகம் ஓங்க அறவியலளித்த திருவள்ளுவப் பெருந்தகையின் பிறப்பையும் அடிப்படையாக கொண்டு தைத்திருநாளாம் தைப்பொங்கல் நாளை ஆண்டுத் தொடக்க நாளாகக் கொண்டு விழா எடுப்போம்.

வாழ்க தமிழ்! வளர்க பகுத்தறிவு! மறுமலர்ச்சி பெறுக தமிழர் பண்பாடு!

ஆக்கம் : நா.வை.குமரிவேந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தொல் தமிழ் எண் | | திரிபுற்ற இன்றைய எண் |
|---|---|---|
| க | = | 1 |
| உ | = | 2 |
| ங | = | 3 |
| ச | = | 4 |
| ரு | = | 5 |
| சா | = | 6 |
| எ | = | 7 |
| அ | = | 8 |
| கூ | = | 9 |
| க0 | = | 10 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் நன்றிக்குரியோர்


"தினைத்துணை நன்றி செய்யினும் பனைத்துணையாக
கொள்வர் பயன் தெரிவார்" - குறள் 104

எமையெல்லாம் ஆறாமீளாத்துயரில் ஆழ்த்தி கண்ணிமைக்கும் நேரத்தில் எமைவிட்டுப் பிரிந்து சிவப்பேறடைந்த எமது குடும்ப ஒளி விளக்கு அமரர் திரு. வே. கோபாலரத்தினம் அவர்களின் பேரிழப்பு அறிந்து நேரடியாகவும், தொலைத்தொடர்பு, கண்ணீர்ப்படையல் (அஞ்சலி) மூலமாகவும், தமது இரங்கல்களையும், ஆறுதல் கூற்றுக்களையும் எம்முடன் பகிர்ந்து கொண்ட அயலவர், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் இறுதிக் கரணம் (சடங்கு), எரியூட்டல் நிகழ்வுகளின் போது நேரடியாகக் கலந்து உதவியவர்களுக்கும், காடு ஆற்றல், எட்டுச் செலவு சாம்பல் கரைப்பு (அந்தியேட்டி), வீட்டுக் கரணம் (வீட்டுக் கிரியை) போன்ற நிகழ்வுகளில் கலந்து இவைகள் சிறப்புற நடைபெற பல வழிகளிலும் உதவிய உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும் தமிழ் மகள் ஔவையாரை அன்னாரின் 31ஆம் நாள் நினைவுப் படையலாக்க உதவிய கிளி/மாவட்ட தமிழ்ச் சங்கத்தார்களுக்கும் இன்நாள்வரை எமக்கு மன உடல் ஆறுதல் வழங்கித் தேற்றிய அன்பு நிறை நெஞ்சங்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்புடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தனிநாயகமுதலி தலை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லைமுறையினர்

டி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவள்ளுவர் ஆண்டு ௨0௪௧ (2041) — கடகம் (ஆடி) — ஆடி – ஆகத்து 2010

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | அறிவன் (புதன்) | வியாழன் | வெள்ளி | காரி (சனி) |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| ௩0 15.08.2010 | ௩௧ 16.08.2010 | [illegible] | | | | ௧ 17.07.2010 |
| ௨ 18.07.2010 | ௩ 19.07.2010 | ௪ 20.07.2010 | ௫ 21.07.2010 | ௬ 22.07.2010 | ௭ 23.07.2010 | ௮ 24.07.2010 |
| ௯ 25.07.2010 | ௧0 26.07.2010 | ௧௧ 27.07.2010 | ௧௨ 28.07.2010 | ௧௩ 29.07.2010 | ௧௪ 30.07.2010 | ௧௫ 31.07.2010 |
| ௧௬ 01.08.2010 | ௧௭ 02.08.2010 | ௧௮ 03.08.2010 | ௧௯ 04.08.2010 | ௨0 05.08.2010 | ௨௧ 06.08.2010 | ௨௨ 07.08.2010 |
| ௨௩ 08.08.2010 | ௨௪ 09.08.2010 | ௨௫ 10.08.2010 | ௨௬ 11.08.2010 | ௨௭ 12.08.2010 | ௨௮ 13.08.2010 | ௨௯ 14.08.2010 |

## திருவள்ளுவர் ஆண்டு ௨0௪௧ (2041) — துலை (ஐப்பசி) — அக்தோபர் – நவம்பர் 2010

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | அறிவன் (புதன்) | வியாழன் | வெள்ளி | காரி (சனி) |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| [illegible] | ௧ 18.10.2010 | ௨ 19.10.2010 | ௩ 20.10.2010 | ௪ 21.10.2010 | ௫ 22.10.2010 | ௬ 23.10.2010 |
| ௭ 24.10.2010 | ௮ 25.10.2010 | ௯ 26.10.2010 | ௧0 27.10.2010 | ௧௧ 28.10.2010 | ௧௨ 29.10.2010 | ௧௩ 30.10.2010 |
| ௧௪ 31.10.2010 | ௧௫ 01.11.2010 | ௧௬ 02.11.2010 | ௧௭ 03.11.2010 | ௧௮ 04.11.2010 | ௧௯ 05.11.2010 | ௨0 06.11.2010 |
| ௨௧ 07.11.2010 | ௨௨ 08.11.2010 | ௨௩ 09.11.2010 | ௨௪ 10.11.2010 | ௨௫ 11.11.2010 | ௨௬ 12.11.2010 | ௨௭ 13.11.2010 |
| ௨௮ 14.11.2010 | ௨௯ 15.11.2010 | ௩0 16.11.2010 | [illegible] | | | |

## திருவள்ளுவர் ஆண்டு ௨0௪௧ (2041) — மடங்கல் (ஆவணி) — ஆகத்து – செப்டம்பர் 2010

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | அறிவன் (புதன்) | வியாழன் | வெள்ளி | காரி (சனி) |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| [illegible] | | ௧ 17.08.2010 | ௨ 18.08.2010 | ௩ 19.08.2010 | ௪ 20.08.2010 | ௫ 21.08.2010 |
| ௬ 22.08.2010 | ௭ 23.08.2010 | ௮ 24.08.2010 | ௯ 25.08.2010 | ௧0 26.08.2010 | ௧௧ 27.08.2010 | ௧௨ 28.08.2010 |
| ௧௩ 29.08.2010 | ௧௪ 30.08.2010 | ௧௫ 31.08.2010 | ௧௬ 01.09.2010 | ௧௭ 02.09.2010 | ௧௮ 03.09.2010 | ௧௯ 04.09.2010 |
| ௨0 05.09.2010 | ௨௧ 06.09.2010 | ௨௨ 07.09.2010 | ௨௩ 08.09.2010 | ௨௪ 09.09.2010 | ௨௫ 10.09.2010 | ௨௬ 11.09.2010 |
| ௨௭ 12.09.2010 | ௨௮ 13.09.2010 | ௨௯ 14.09.2010 | ௩0 15.09.2010 | ௩௧ 16.09.2010 | [illegible] | |

## திருவள்ளுவர் ஆண்டு ௨0௪௧ (2041) — நளி (கார்த்திகை) — நவம்பர் – திசம்பர் 2010

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | அறிவன் (புதன்) | வியாழன் | வெள்ளி | காரி (சனி) |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| [illegible] | | | ௧ 17.11.2010 | ௨ 18.11.2010 | ௩ 19.11.2010 | ௪ 20.11.2010 |
| ௫ 21.11.2010 | ௬ 22.11.2010 | ௭ 23.11.2010 | ௮ 24.11.2010 | ௯ 25.11.2010 | ௧0 26.11.2010 | ௧௧ 27.11.2010 |
| ௧௨ 28.11.2010 | ௧௩ 29.11.2010 | ௧௪ 30.11.2010 | ௧௫ 01.12.2010 | ௧௬ 02.12.2010 | ௧௭ 03.12.2010 | ௧௮ 04.12.2010 |
| ௧௯ 05.12.2010 | ௨0 06.12.2010 | ௨௧ 07.12.2010 | ௨௨ 08.12.2010 | ௨௩ 09.12.2010 | ௨௪ 10.12.2010 | ௨௫ 11.12.2010 |
| ௨௬ 12.12.2010 | ௨௭ 13.12.2010 | ௨௮ 14.12.2010 | ௨௯ 15.12.2010 | [illegible] | | |

## திருவள்ளுவர் ஆண்டு ௨0௪௧ (2041) — கன்னி (புரட்டாசி) — செப்டம்பர் – அக்தோபர் 2010

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | அறிவன் (புதன்) | வியாழன் | வெள்ளி | காரி (சனி) |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| ௩௧ 17.10.2010 | [illegible] - தந்தை பெரியார் | | | | ௧ 17.09.2010 | ௨ 18.09.2010 |
| ௩ 19.09.2010 | ௪ 20.09.2010 | ௫ 21.09.2010 | ௬ 22.09.2010 | ௭ 23.09.2010 | ௮ 24.09.2010 | ௯ 25.09.2010 |
| ௧0 26.09.2010 | ௧௧ 27.09.2010 | ௧௨ 28.09.2010 | ௧௩ 29.09.2010 | ௧௪ 30.09.2010 | ௧௫ 01.10.2010 | ௧௬ 02.10.2010 |
| ௧௭ 03.10.2010 | ௧௮ 04.10.2010 | ௧௯ 05.10.2010 | ௨0 06.10.2010 | ௨௧ 07.10.2010 | ௨௨ 08.10.2010 | ௨௩ 09.10.2010 |
| ௨௪ 10.10.2010 | ௨௫ 11.10.2010 | ௨௬ 12.10.2010 | ௨௭ 13.10.2010 | ௨௮ 14.10.2010 | ௨௯ 15.10.2010 | ௩0 16.10.2010 |

## திருவள்ளுவர் ஆண்டு ௨0௪௧ (2041) — சிலை (மார்கழி) — திசம்பர் – சனவரி 2010–2011

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | அறிவன் (புதன்) | வியாழன் | வெள்ளி | காரி (சனி) |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| [illegible] | | | | ௧ 16.12.2010 | ௨ 17.12.2010 | ௩ 18.12.2010 |
| ௪ 19.12.2010 | ௫ 20.12.2010 | ௬ 21.12.2010 | ௭ 22.12.2010 | ௮ 23.12.2010 | ௯ 24.12.2010 | ௧0 25.12.2010 |
| ௧௧ 26.12.2010 | ௧௨ 27.12.2010 | ௧௩ 28.12.2010 | ௧௪ 29.12.2010 | ௧௫ 30.12.2010 | ௧௬ 31.12.2010 | ௧௭ 01.01.2011 |
| ௧௮ 02.01.2011 | ௧௯ 03.01.2011 | ௨0 04.01.2011 | ௨௧ 05.01.2011 | ௨௨ 06.01.2011 | ௨௩ 07.01.2011 | ௨௪ 08.01.2011 |
| ௨௫ 09.01.2011 | ௨௬ 10.01.2011 | ௨௭ 11.01.2011 | ௨௮ 12.01.2011 | ௨௯ 13.01.2011 | [illegible] | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவரின் வாழ்க்கை விளக்கம்



அடக்கம் அமரருள் உய்க்கும்
அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்
அறிவுடையார் எல்லாம் உடையார்
அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு
அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை
அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக
ஆதிபகவன் முதற்கே உலகு
ஆறாதே நாவினாற் சுட்டவடு
இடுக்கண் களைவதாம் நட்பு
உள்ளத் தனையது உயர்வு
உடையார் எனப்படுவது ஊக்கம்
உழுவார் உலகத்தார்க்கு ஆணி
எல்லார்க்கும் நன்றாம் பணிதல்
ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்
கற்றபின் நிற்க அதற்குத் தக
சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு
பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து
முயற்சி தன் மெய்வருந்தக் கூலி தரும்.

வாணி கணினிப் பதிப்பகம் - வவுனியா தொ.பே: 024 2223658.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org